


T21216
R004F03

# "திராவிடன்" பொங்கல் மலர்


# நம் நாட்டின் பழம் பெருந்தலைவர்கள்.



தமிழ்ப் பெரியார் திரு. வி. க.



கனம் - ஆச்சாரி



திராவிடத் தந்தை பெரியார் ஈ. வே. ரா.



வீரத்தமிழர் வ. வு. சி.



தென்னாட்டுத் திலகர்
டாக்டர் - வரதராஜுலு

T. 21216
ஏ. 69716

விலை ரூபாய் ஒன்று

ரிஜிஸ்டர் நே. M. 4870

# திராவிடன்

## பொங்கல் மலர்

தை 1. 1950

T021216
Saraswathi Mahal Library, Thanjavur

### பொருளடக்கம்

பக்கம்

திருநாள்—என். வி. என். ... 3
தமிழ்ப் பெரியார் செய்தி— (திரு. வி. க.) ... 5
வியர்வைக் கடல்—பாரதிதாசன் ... 6
மருட்சி வேண்டாம்—சி. என். எ. ... 7
விண்ணப்பக்கவிதை சு. அதிவீரபாண்டியன் ... 9
அனல் மூச்சு—சி. பி. சிற்றரசு, வேலூர் ... 10
சொல்லும் செயலும்—திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம்... 12
நொண்டிப் பெண்—ஒரு மாணவி ... 15
பொங்கல் வாழ்த்து
தொ. ப. வேலாயுதசாமி, சலகண்டபுரம்... 18
தூரத்துப் பச்சை—புத்தனேரி ரா. வெங்கடாசலம் ... 19
தமிழர் திருநாள்—குமார தனிகாசலம் ... 21
மாவீரர் வேலாயுதம்—ஆ. ராமசாமி ... 22
விவசாயப் பிரச்னை—குறிஞ்சிப்பாடி இரா. சாம்பசிவம்... 24
முன்னூறு ரூபாய்—மு. கருணாநிதி ... 27
ஆங்கில நாட்டின் பல்கலைக் கழகங்கள் —பட்டுக்கோட்டை சவுரிராசன் ... 28
அன்றைய அரசர் நிலை—இடப்பாடி இரா. தாண்டவன் ... 30
தமிழகத்தில் உழவு—புலவர் கோவிந்தன் — 33
பெண்ணையும் மண்ணையும்—கலைமணி ... 37
வீரர் பரம்பரை—என். எஸ். இளங்கோ ... 41
வாழ்க்கைப் போராட்டம்—பு. தி- லோகநாதன் 46
கடமை— வைத்திய வள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமி... 51
வியன்னு வீதியிலே—ராதாமணாளன் ... 52
பொது மக்கள் தீர்ப்பென்றால்?
பேராவூரணி ஆர். வேலுச்சாமி ... 53
முன்னேற்றம்—சத்தியவாணிமுத்து ... 54
தொழிலாளரும் நாட்டுப் பிரிவினையும் —பொன்மலை பராங்குசம் ... 55
அந்தோ அழகிரி—அ.ச.பாலு,பொள்ளாச்சி ... 57
இக்பால்—கே. எ. மதியழகன் ... 58
இருந்தாலும் இல்லாவிட்டாலும்— டி. எஸ். வேலன்... 63
அந்தக் கடிதம்—சிந்தனைப் பித்தன் ... 65
தமிழர் தளபதி—சென்னை சி.டி.டி. அரசு ... 69
சுலோசன புராணம்—சூதமுனிவன் (அருப்புக்கோட்டை எம்.எஸ்.ராமசாமி)... 73
என் வாழ்வு—இராம காந்தி திருத்துறைப்பூண்டி ... 78
கடைசிக் குரல்—'ரவி' மதுரை ... 80

### வேண்டுகோள்

தனி ஆர்ட் காகிதத்தில் அச்சாகியுள்ள மாவீரர்கள் படத்தில், அவசரத்தால் ஆசிரியர் வேலாயுதம், ல. நடராசன் உருவப்படங்கள் மட்டும் மாறிவிட்டதை அன்பர்கள் தயவு செய்து திருத்திப் பார்த்துக் கொள்ளவும்.

[ஆ—ர்]

## விளம்பரப் பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| கந்தன் மூலபவுத்திர வைத்தியசாலை, | ... | ?8 |
| பாபு நாராயன் கம்பெனி | ... | 18 |
| டாக்டர் விசுவநாத் | ... | 23 |
| பாரதி நாடக சபா, சென்னை | ... | 23 |
| கூத்தரசன் பதிப்பகம், சென்னை | ... | 26 |
| முன்னேற்றப் பண்ணை, சென்னை | ... | 36 |
| எஸ். டி. மாணிக்கம் பிள்ளை | — | 36 |
| கிருஷ்ணா அண்டு கோ, சென்னை | ... | 40 |
| பாண்டிஸ் டிராபரி சென்னை, | ... | 40 |
| எவரெஸ்டு சுருட்டு தொழிற்சாலை, விருதுநகர் | ... | 45 |
| எஸ். வி. கிரி, கம்பெனி, சென்னை | ... | 48 |
| ஜெய்சின் துவரம்பருப்பு | — | 56 |
| 66. ஹிலால் சோப்பாக்டரி—கடலூர் ஒ. டி. | — | 57 |
| ஹேரா அண்டு கம்பெனி, சென்னை | ... | 62 |
| எஸ். பழனிவேலு | — | 64 |
| மாடர்ன் வாச் கம்பெனி | ... | 64 |
| டி. எ. வெங்கடாசலம் | — | 71 |
| முத்தமிழ் நிலையம், சென்னை | ... | 72 |
| தென்றல் நூற்பதிப்புக் கழகம் | ... | 72 |





திராவிட சமுதாயத்தின் உரிமையை நிலைநாட்ட, முதன் முதலாக அரும்பாடுபட்ட தன்னலங் கருதாத் தலைவர்

சர். தியாகராயர்

### அட்டை


முகப்பு — அறிஞர் அண்ணா
2-வது பக்கம் — நம்நாட்டுப் புழம்பெருந்தலைவர்கள்
3-வது பக்கம் — கே. ஆர். ராமசாமி நாடக சபா, (முகாம் ஈரோடு)
4-வது பக்கம் — ஜூபிடர்ஸ் பிலிம்ஸ் கிருஷ்ண விஜயம்

தி. மு. க. கொடி ... தனி ஆர்ட்
நமது மாவீரர்கள் ... ,,
கட்டுரை வழங்கிய அன்பர்கள் ,,





இந்திய அரசியலில் புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்த சாந்த சொரூபி,

காந்தியடிகள்


அச்சிடுவோர்: வி. முனுசாமி, சாமி பிரிண்டர்ஸ் 354, தங்கசாலைத் தெரு, சென்னை. ஆசிரியரும வெளியிடுவோரும்: என். வி. நடராசன் 18. பெருமாள் முதலி தெரு ஜி. டி. சென்னை.

# திராவிட முன்னேற்றக் கழகம்



பிரசாரக்குழு செயலாளர்
இரா. நெடுஞ்செழியன்



அமைப்புக்குழு செயலாளர்
என். வி. நடராசன்




பொதுச்செயலாளர்


அண்ணா.




நிதிக்குழு செயலாளர்
காஞ்சி. மணிமொழியார்




சட்டநிர்ணயக்குழு செயலாளர்
கே. எ. மதியழகன்




உடையார்பாளையம்
ஆசிரியர் வேலாயுதம்



அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி



1938 இந்திப்போரில்
உயிர்நீத்த தியாகி வ. நடராசன்



லட்சியவாதி
என். அர்சுனன்



நமது ஈடில்லா செல்வம்



சென்னை சத்தியவாணி முத்து



நமது புரட்சிக் கவிஞர்



திருச்சி கே. ஏ. பி. விசுவநாதம்




சென்னைப் பிரதமர்
கனம் குமாரசாமி ராஜா

70 லட்சம் ஜனத் தொகையுள்ள இலங்கைப் பிரதமருக்கும், இலங்கைக்கும் உள்ள தன்னாட்சி உரிமை, 5 கோடி மக்களைக் கொண்ட நம் சென்னை பிரதமருக்கும், சென்னை மாகாணத்துக்கும் இல்லையே! என்று தணியுமோ நம் சுதந்திர தாகம்!



இலங்கைப் பிரதமர்
கனம். சேனநாயகா



தி. மு. க. வளர்ச்சிக்கு அஸ்திவாரமான 'மாலைமணி'யின் உரிமையாளர்
டி. எம். பார்த்தசாரதி



கலைமணி - தில்லை



தோழர் சி. பி. சிற்றரசு, வேலூர்



குமாரதணிகாசலம், கல்லக்குறிச்சி

★

கட்டுரை வழங்கிய தோழர்கள்


★



"ரவி" சிம்மக்கல், மதுரை



மு. கருணாநிதி



இரா. சாம்பசிவம், குறிஞ்சிப்பாடி




அருப்புக்கோட்டை
எம். எஸ். ராமசாமி (சூதமுனி)




பட்டுக்கோட்டை சவுரிராசன்



புலவர். கோவிந்தன்
திருவத்திபுரம்



கே. இராமையா, (இராமகாந்தி)
திருத்துறைப்பூண்டி



புத்தனேரி ரா. வெங்கடாசலம்



தொழிலாளர் தலைவர்
பொன்மலை பராங்குசம்.



அன்னை நாகம்மையார்

★



தன்னலங் கருதாத் தொண்டர்
சென்னை கே. கோவிந்தசாமி

★




அதிராம்பட்டணம்
என். எஸ். இளங்கோ

## திராவிட முன்னேற்றக் கழக மாவட்ட மாநாடுகள்

★


### சென்னை 22-1-50:

தலைவர் :



தோழர் ஏ. சித்தையன்

துவக்கி வைப்பவர் :



தோழர் அழகரடி முத்து

### கோவை - கனியூர் 29-1-50:

தலைவர் :




தோழர் ப. உ. சண்முகம்

துவக்கி வைப்பவர் :



தோழர் ஜி. பி. சோமசுந்தரம்

### திருச்சி 1-1-50



தோழர் ஈ. வி. எ. வள்ளிமுத்து



தோழர் பி. பழனிச்சாமி

# திராவிடன்

## பொங்கல் மலர்

★ 14—1—1950 சனி: தை 1 ★


# திருநாள்

திராவிட சமுதாயத்தினர், தங்கள் திருநாளாகக் கொள்ளக்கூடிய ஒரே நாள் பொங்கற் புது நாளாகும். மற்ற நாட்கள், (அதாவது பண்டிகை, விழா போன்றவைகள்) பெரும்பாலும் மக்களை மடமைக்கு அழைத்துச் செல்லும் முறையிலேயே கொண்டாடப்பட்டு வருகிறது.

எனினும், இவ்வாண்டு பொங்கற் புது நாளில் நம் மக்கள் உள்ளம் முழுதும் பூரிப்படைய முடியாத நிலையில் உள்ளனர்.

சென்ற ஆண்டைவிட பருவ நிலை, இவ்வாண்டு பெரிதும் பாதிக்கப்பட்டு, காலா காலத்தில் சரியான மழையின்றி விவசாயத் தொழில் சீரழிந்துள்ளது.

பொங்கற் புது நாளில் புத்துணர்ச்சியுடனும், முகமலர்ச்சியுடனு மிருக்கவேண்டிய நாட்டின் ஜீவநாடியான விவசாயிகள் எங்கும் கவலை நிறைந்த முகத்துடன் காணப்படுகின்றனர்.

நெசவுத் தொழிலாளர்—கள்ளிறக்கும் தொழிலாளர்—மற்றும்பல தொழிலாளர்கள்-ஏற்கனவே வேலையில்லாத்திண்டாட்டத்தில் சிக்கி பரிதவித்து வரும் இந்நாளில், விவசாயத் தொழிலாளர்களின் நிலையும் கவலைக்கிடமாகி விட்டது.

ஆட்சி முறையிலாவது, நம் நாட்டின் தன்மானம் காப்பாற்றப்பட்டுள்ளதா என்றாலோ, வரப்போகும் புதிய அரசியல் திட்டத்தில், "உள்ளதும் போச்சு" என்பதைப்போல, நம் மாகாண அரசியலாருக்கு இருந்து வந்த கொஞ்சநஞ்ச உரிமையும் பாதிக்கப்பட்டுள்ளது. மந்திரிமார்களுக்கே இந்த லட்சணம் என்றால், மக்களின் உரிமையைப்பற்றி கூறவேண்டுவதேயில்லை.

நிற்க, பிரித்தாளும் சூழ்ச்சியால் தொழிலாளரின் சக்தி சிதறுண்டு, கூறுபோடப்பட்டு, சில உலுத்தர்களின் வாழ்வுக்கு பயன்படுத்தப்படுகிறது. 'தேசியம்' என்ற முகமூடியின் திருவிளையாடல்கள் தொழிலாளர் உலகில் இன்னும் நடைபெற்ற வண்ணமாயிருக்கின்றன.

பொதுவாக மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் நம் அரசியலாருக்கும் தீராப்பகையாகவேயிருந்து வருகிறது, பேச்சுரிமை - எழுத்துரிமை. ஏன் மனித உரிமையையே, அடக்குமுறையால், மடக்கிப் பார்க்கும் வினோதப் போக்கில், அரசியலார் தங்கள் முழு கவனத்தையும் செலுத்த முற்பட்டுள்ளனர்.

ஆனால், மக்களின் வறுமையை நீக்க வழிவகை மட்டும் காணப்படவில்லை.

சுருங்கக் கூறவேண்டுமானால், ஏழை—தொழிலாளி—நடுத்தர மக்கள்—ஆகிய மிகப்பெரும்பான்மையான மக்களுக்கு, இன்று நல் வாழ்வில்லை.

இவ்வித சூழ்நிலையில், திராவிடர் திருநாளாகிய இன்று, நம்மிடையே எவ்வாறு ஆனந்தம் பொங்க முடியும்?

திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரை எடுத்துக் கொண்டாலும், சென்ற ஆண்டு நம்மிடையே ஊசலாடிக் கொண்டிருந்த நமது இயக்கத் தோழர்களில், மூத்த அண்ணன்—அஞ்சா நெஞ்சன்—அழகிரிசாமி இன்று நம்மைவிட்டுப் பிரிந்து விட்டார். அவரது சொல்லும் செயலும் திராவிடத்தின் எதிர்கால ஆக்கவேலைக்குப் பயன்பட முடியாது போனது பெரும் நட்டமாகும்.

சென்ற ஆண்டு—இதே பொங்கற் புது நாளன்று நம் சொந்த வாழ்வைவிட, கொள்கையே பெரிது என்று கூறி குடந்தையிலே, தன்மானப் போரில் ஈடுபட்டுப் பல தொண்டர்கள் தடியடிப்பட்டனர், ரத்தம் சிந்தினர், சிறை சென்றனர். நம் தளபதி அண்ணா இப்போரை

முன்னின்று நடத்த, நம் தலைவர் பெரியார் அன்று நம்முடன் இருந்தார். அவர் பணித்தார்-அண்ணா உட்பட நாம் அனைவரும் களங்கமின்றி வீரத்துடன் பணியாற்றி வந்தோம். மேடைகளில் பேசுவது, பத்திரிகைகளில் எழுதுவது முதல், சிறைக் கோட்டம் (ஒரு முறைக்குப் பல முறை) செல்லும் வரை நாம் பணியாற்றி வந்தோம்.

ஆனால், இன்று நம் தலைவர் பெரியார் நம்மை விட்டுப் பிரிந்து நிற்கிறார்—நாம் அனைவரும் எப்படியாவது பிரியவேண்டிய சூழ்நிலையைப் பிடிவாதம் என்ற பேரால் செய்து முடித்துவிட்டார். ஆனால், இதற்காக இன்று மட்டுமல்ல—அவர் வாழ்நாள் வரையும் நாம் அவரைக் குறைத்துப் பேசப்போவதில்லை. ஏனெனில்பிரிந்த நமக்குஏழைகளாகிலும் தன்மானம் உண்டு என்பதை நாம் உணர்த்தி வருகிறோம்!

ஆக, இவ்வித நெருக்கடியில், நமக்குப் பொறுப்புகள் மட்டும் அதிகரித்து வருகிறது. பழமை—பாசிஸம்—பிற்போக்குச் சக்திகளின் எதேச்சதிகாரப் போக்கை ஒழித்து, நம் திராவிடத்தைக் சமதர்மக் குடியரசாக அமைக்கும் முயற்சியில் நமது கவனமும் ஆக்க வேலையும் இனி செல்லுதல் வேண்டும்.

இத்துறையில், அமைப்பு முறையுடனும் தளரா கட்டுப்பாடுடனும் பணியாற்ற நமது அண்ணா, நமக்குப் புதிய பாதையை வகுத்துக் கொடுத்துள்ளார். திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சியே இதற்குப் போதிய சான்றாகும்.

நிற்க, திராவிட சமுதாய விடுதலைத் தொண்டில், உங்களது அன்பிற்கும், ஆதரவுக்கும் உரித்தான "திராவிடன்", சென்ற ஆண்டுகளில் செய்துள்ள சேவையினை விவரித்துக்கூற அவசியமில்லையென்றே கருதுகிறேன்!

முதலாவது ஆண்டு, 1948-ம் பொங்கல் மலரை நண்பர்களின் ஒத்துழைப்பால் எனது சக்திக்கும், வசதிக்கும் மேற்பட்ட அளவிலேயேவெளியிட்டேன். தொடர்ந்து வாரந்தோறும் 'திராவிடன்' வெளிவந்துள்ளான். ஆனால், விற்பனையாளர்களில் பலர், ஏராளமான பணத்தை இன்றளவும் செலுத்தாமல், தொல்லைக் குட்படுத்தி வருகின்றனர்.

இரண்டாவது ஆண்டு, 1949-ம்பொங்கல்மலர் தயாரிப்பில் இருந்தபோது, யான் குடந்தைப் போராட்டத்திலே சிறை செல்லவேண்டி நேர்ந்ததால், திடீரென தடைப்பட்டுவிட்டது. மீண்டும் சென்றஆண்டு ஆகஸ்டில் துவக்கி இன்று மூன்றாவது ஆண்டாக பொங்கல் மலரை வெளியிட்டுள்ளேன்.

'திராவிடன்' தொடர்ந்து பணியாற்றும் வகைக்கு,சில நண்பர்களாலும், கிளைக் கழகத்தினராலும் நன்கொடை வழங்கப்பட்டுள்ளன. வழங்கப்பட்டும் வருகின்றன. இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் மற்ற நண்பர்களின் கிளைக் கழகங்களின் பேருதவியால் "திராவிடன்" மேலும் விரிவான முறையில் பணியாற்ற முற்படுவான்.

பொருள் வசதியும், மற்ற சவுகர்யமும் இல்லாவிடினும், எதையுந் தாங்க இந்த இதயமுண்டு என்ற தன்மான உறுதியின் வழிநின்று நம் கொள்கையின் வெற்றிக்காகவே சென்ற 12 ஆண்டுகள் உழைத்தது போன்று என் வாழ்நாள் முழுதும் தொடர்ந்து பணியாற்றுவேன் என்பதை இயக்கத் தோழர்களுக்கு பொங்கல் திருநாளாகிய இன்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாண்டுத் திருநாளன்று நாம் பல இன்னல்களுக் கிடையேயிருப்பினும், பொதுவாக திராவிட சமுதாயத்துக்கும்—ஏன், முற்போக்கு கொள்கை கொண்ட அனைவரும் ஒரு வகையில் சற்று மன மகிழ்ச்சியடையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அவ்வாய்ப்பு தான், நமது அருமை அண்ணா அவர்கள் தமது அறிவுத் திறமையால் திராவிடத்தின் இருள் நீங்க வெளிச்சத்தைக் காட்டியிருப்பது—அவ்வெளிச்சமே திராவிட முன்னேற்றக் கழகம்.

திராவிட நாட்டின் விடுதலையைக் கோரும் ஒவ்வொருவரும், அண்ணாவின் பக்கம் நின்று பணியாற்றி வெற்றிவாகை சூடுவோம். நம் பெரியார் கூறிவந்த கொள்கையை நடைமுறையில் கொண்டு வருவோம் என்று, திராவிடத் தோழர்களே! நமது திருநாளாகிய இன்று உறுதிகொள்வீராக!

நமக்குப் புரட்சிக் கருத்தை அள்ளிவீச நமது நாட்டுக் கவியரசர் பாரதி தாசன் அவர்களும், நம் கருத்தை கலையுலகிலும் பரப்பி, மக்களுக்கு அறிவூட்ட, திராவிடத்தின் நகைச் சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, ஆகிய இருகண்களும், துணை உறுப்புகளாக இசைவேந்தர் எம். கே. தியாகராச பாகவதர், இசையரசு தண்டபாணி தேசிகர். நடிகவேள் எம். ஆர். ராதா போன்றாரும், இயக்கக் கொள்கையே உயிர் நாடியாகக் கொண்ட ஆயிரமாயிர இலட்சியவாதிகளும், திராவிடத்தில் பெருகிவர, நம் கொள்கைக்கு விரைவில்

"திராவிடன்" மலருக்கு, தமது அரிய கருத்தோவியத்தைத் தந்துதவ நமது தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள், ஆர்வமுடனிருந்தார்கள். எனினும் 9—1—50 வரை அவர்களுக்கு உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. யான் அன்று அவரை நேரில் சந்தித்த போது அவரிடம் அரிய கருத்துரை கேட்கவே மனம் வரவில்லை. அவரது நிலை கண்டு மிகவும் வருந்தினேன். எனினும் சந்தித்தபோது யான், நாட்டுக்குச் செய்தியொன்று கூறுங்கள் என்று கேட்டடேன், என்னிடம் அவர் நேரில் தெரிவித்த அவரது உள்ளக் கிடக்கையை நாட்டின் எதிர்கால ஆக்க திட்டத்தை பொங்கற் புது நாளாகிய இன்று நாட்டினர்க்குச் சமர்ப்பிக்கிறேன். சுருங்கக் கூறி விளங்கவைத்தல் என்ற முறையில் எடுத்துக்காட்டிய தலைவருக்கு, 'திராவிடன்' சார்பில் மனமார்ந்த நன்றியறிதலையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

—என். வி. என்,

# தமிழ்ப் பெரியார், தொழிலாளர் தலைவர் திரு. வி. க., செய்தி

திராவிட கழகம் எதிர்காலத்தில், எத்துறையில் பணியாற்ற வேண்டுமென்று, யான் எனது உள்ளக்கிடக்கையை, ஈரோடு மாநாட்டில் எடுத்துக் கூறினேனே அத்துறையில், இன்று திராவிட முன்னேற்றக் கழகம் தொண்டாற்ற முற்பட்டிருப்பது கண்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று, சிதறுண்டு கிடக்கும் தொழிலாளரின் மகத்தான சக்தி ஒன்று திரட்டப்படவேண்டும். நம் நாட்டின் அரசியல் முறை, சோஷியலிஸ — சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்டதாய் அமையப்பெற வேண்டும். உழைப்பாளரின் உரிமைபெற்ற ஆட்சி நிறுவ வேண்டும்.

இவ்வகையில், திராவிட முன்னேற்றக் கழகமும் தொண்டாற்ற வேண்டுமென்று பெரிதும் ஆசைப்படுகிறேன்.

எனது பெருந்தகை நண்பர் ஈ. வெ. ராமசாமிப் பெரியார் பெரும் கிளர்ச்சிக்காரர். நாட்டில் வேரூன்றியிருந்த மூட நம்பிக்கைகளையும், அறிவின்மையையும் அகற்றத் தீவிரத் தொண்டாற்றியவர். அத் துறையில் ஓர் பெரும் புரட்சியை, மாறுதலைச் செய்தவர்.

அவரது கொள்கையைப் பின்பற்றி எதிர்காலத்தில ஒழுங்குபட ஆக்க வேலையில் ஈடுபட வேண்டியது நமது இளஞ்சிங்கம் தோழர் அண்ணாத்துரை அவர்களும், அவரைச் சேர்ந்த தோழர்களின் கடமையுமாகும.

எனவே, சமுதாய விடுதலையுடன், பொருளாதார விடுதலைக்கும், மனித உரிமைக்கும், நாட்டின் ஜீவசக்தியான தொழிலாளரின் உரிமைக்கும் அமைதியான முறையில், திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட மற்ற எல்லா பொது நலச் சங்கங்களும், கட்சிகளும், தோழர்களும களங்கமற்ற பணியாற்ற வேண்டுமென்பதே பொங்கற் புது நாளாகிய இன்று, யான் மனமார ஆசைப்படும் வேண்டுகோளாகும்.

அன்பும், அறமும், வீரமும் ஓங்குக!

---

வெற்றியுண்டு என்பது உறுதி, உறுதி, உறுதியேயாகும்.

அது மட்டுமல்ல, நமது மாற்றுக் கட்சியினரான காங்கிரஸ் தோழர்களும் ஏனைய கட்சியினரும் கூடிய விரைவில் நாட்டின் உண்மை நிலையை உணர்ந்து நம் வழி நிற்பர் என்பதிலும் ஐயமில்லை.

இவ்வாண்டுப் பொங்கல் திருநாளில் மக்களுக்குப் போதிய உற்சாகமில்லை யென்றாலும், வரும்ஆண்டுக்குள் நம்மிடையேயுள்ள கட்சிப்பிரிவுகள் ஜாதிப் பூசல்கள்-மற்ற பிளவுகள் எல்லாம் ஒழிந்து இன்பத் திராவிடத்தைக் காண ஒன்றுபடுவோம் என்பது திண்ணம்.

அக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து பணியாற்ற "திராவிட"னுக்கு அன்பர்கள் அனைவரும் தங்கள் உதவியையும் ஆதரவையும் தருமாறு வேண்டிக்கொள்கிறேன்.

நிற்க, "திராவிடன்" பொங்கல் மலர் கூடுமான அளவு சிறந்த முறையில் வெளிவருவதற்கு ஒத்துழைத்த அனைவருக்கும், கட்டுரை வழங்கிய அறிஞர்களுக்கும், தோழர்களுக்கும், ஓவியம் தீட்டித் தந்த மதுரை என். எஸ். மணி அவர்களுக்கும், திராவிடன் அலுவலகத் தோழர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகக் குறுகிய காலத்தில் "மலர்" வேலை துவக்கப்பட்டதால், ஒருக்கால் எதிர்பாரா வகையில் ஏதாவது சிறு பிழைகளிருப்பினும் அன்பர்கள் பொருத்தருள வேண்டுவதுடன் 'திராவிடன்' சந்தாதாரர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், நேயர்களுக்கும், ஏஜெண்டுத் தோழர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என். வி. நடராசன்,
ஆசிரியர் — உரிமையாளர்.

# வியர்வைக் கடல்!

(பாரதிதாசன்)

★

### காலை

கிழக்கு வெளுக்குமுன் வெளியிற் கிளம்பினேன்
ஒளிசெயும் மணியிருள், குளிர்ச்சி, நிசப்தம்
இவற்றிடை என்னுள்ளம் துள்ளும் மான்குட்டி!
உற்சாகம் என்னைத் தூக்கி ஓடினது!

### இயற்கை

குன்றம் இருக்கும் அக்குன்றத்தின் பாங்கில்
குளமும், அழகிய குளிர் பூஞ் சோலையும்
அழகு செய்யும்! அவ்விடத் தில் தான்
என்றன் சொந்த நன்செய் உள்ளது.

### பகல்.

கடல்மிசை உதித்த பரிதியின் நெடுங்கதிர்
வானெல்லாம் பாய்ந்தது! பறந்தது வல்லிருள்!
புவியின் சித்திரம் ஒளியிற் பொலிந்தது.
இயற்கை தந்த எழிலிடை நடந்தேன்.

### வயல்.

வளம்பெற நிறைந்த இளம்பயிர்ப் பசுமை
மரகதம் குவிந்த வண்ணம் ஆயிற்று
மரகதக் குவியல்மேல் வாய்ந்த பனித்திரள்
காணக்கண் கூசும் வயிரக் களஞ்சியம்!
பசந்த என் வயலைப் பார்த்துக்கொண் டிருந்தேன்
மகிழ்ச்சி தவிர மற்றொன்றும் காணேன்!

### உழைப்பு.

களையினைக் களைவது கருதி, எனது
பண்ணை ஆட்கள் பலபேர் வந்தனர்.
என்னை வணங்கினர். வயலில் இறங்கினர்.
வில்லாய் வளைந்தது மேனி; அவர்கள் தோள்
விசையாய்க் களைந்தது களையின் விளைவை!
முகவிழி கவிழ்ந்து வயலில் மொய்த்தது.

### நடுப்பகல்.

காலைப் போதினைக் கனலாற் பொசுக்கிச்
சூரியன் ஏறி உச்சியிற் சூழ்ந்தான்.
சுடுவெயில் உழவர் தோலை உரித்தது
புதுமலர்ச் சோலையில் நான்ஓடிப் போனேன்.

### வெயில்.

குளிர்புனல் தெளிந்து நிறைந்த மணிக்குளம்!
நிழல்சேர் கரையில் நின்றுகொண் டிருந்தேன்.
புழுக்கமும் வியர்வையும் எழுப்பி என்னை
நலிவு செய்த நச்சுவெய்யில்
வானி லிருந்து மண்ணிற் குதித்துத்
தேன்மலர்ச் சோலைச் செழுமை கடந்தென்
உள்ளத்தையும் உயிரையும் பிளப்பது விந்தை!
குளத்தில் விழுந்து குளிக்கத் தொடங்கினேன்.
வெள்ளப் புனலும் கொள்ளிபோல் சுட்டது.

### உழைப்புத் துன்பம்

காலைப் போதினைக் கனலாற் பொசுக்கிச்.
சோலையும் கடந்து சுடவந்த வெய்யில்
விரிபுனற் குளத்தையும் வெதுப்பிய
தெண்ணினேன்
எண்ணும் போதென் கண்ணின் எதிரில்
வியர்வையும் அயர்வுமாய்ப் பண்ணை யாட்கள்
வந்து நின்று வணக்கம் செய்தனர்.
ஐயகோ நெஞ்சமே இந்த ஆட்கள்
தாங்கொணுக் கனலை எவ்வாறு தாங்கினர்?

### வியர்வைக் கடலின் காட்சி!

களைபோக்கும் சிறுபயன் விளைக்க இவர்கள்
உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின்
ஒவ்வொரு பளிங்குத் துளியிலும் கண்டேன்.
உலகப் பெருப்பயன் விளைக்கப்
பலகோடி மக்களின் வியர்வைநீர்க் கடலையே!

# மருட்சி வேண்டாம்!

(சி. என். அ.)

"தம் ஆதிக்கத்திற்கு அடிபணிவோரெல்லாம் நல்ல பிள்ளைகள்; மற்றையோர் துடுக்கர்கள்." என்றே உலகில் இதுவரை எல்லா எதேச்சதிகாரிகளும் எண்ணி வந்தனர். ரஷிய நாட்டை ரண களமாக்கிய 'ஜார் மன்னனும்' அப்படித்தான் எண்ணினான். சில்லறை அதிகாரம் வகிக்கும் சிறு தேவதைகளும் அவ் வண்ணமே எண்ணுகின்றன. எதிர்ப்பு கண்டு உடனே எரிச்சல் வருவதும், அதனை அழித்தேவிறவது என்ற ஆணவம் எழுவதும், அழிக்க எத்தகைய கொடிய இழிந்த முறைகளைக் கையாளும் துணிவு ஏற்படுவதும் வீரமென்று அவர்கள் எண்ணிக்கொண்டு செய்யும் பயங்கொள்ளிச் செயல்களாகும். உண்மையில் எதிர்ப்பில் சக்தி இல்லாவிடின் எதிர்ப்போருக்கு நாட்டிலே ஆதரவு வாராது என்ற எண்ணமிருப்பின், யார் எவ்வளவு எதிர்ப்பினும் தமது செல்வாக்கு குறையாது என்ற நம்பிக்கையிருப்பின், தம்மைப் பற்றி மக்கள் உண்மையை உணரும்படி செய்யத் தங்களால் முடியும் என்ற வீர உணர்ச்சி இருப்பின் எதிர்ப்பைக் கண்டதும் அதன்மீது உடனே பாய்ந்து அழித்து ஒழித்துவிட யாரும் எண்ணார்.

வீரருக்கு அழகு, எதிர்ப்படும் எத்தனை ஆபத்தையும் பொருட்படுத்தாது போரிடல், கோழைகளின் கொள்கை, எதிர்ப்பு என்ற உடனே 'என்னாகுமோ நம் கதி' என்று பயந்து, பதைபதைத்து, பாதகச் செயலையும் செய்யத் துணிவது. முன்னையோர் முடிவில் வெற்றியும், பின்னையோர் இறுதியில் தோல்வியும் பெற்று வந்ததாலேயே, இன்று உலகில் ஏதோ ஓரளவுக்காவது நீதியும் நேர்மையும் நிலைத்திருக்கின்றன.

புரட்சி என்பது இயங்கும் சக்தி! அதைப் பொசுக்கிவிட யாராலுமாகாது. புரட்சி என்பது மக்களின் போராடும் சக்தியின் வழி வருவது. புரட்சி வாலிபத்தின் கூறு! பகுத்தறிவாளர் ஆயுதம். பழமை விரும்பிகள், புரட்டர்கள், எதேச்சதிகாரிகள், சர்வாதிகாரிகள் ஆகியோரின் நமன். எனவேதான் அத்தகையோர் புரட்சி என்ற சொல்லைக் கேட்டதும் மருட்சி அடைந்தே டுவர். என்? நீண்டு வளர்ந்து நிற்கும் நெடு மரங்களும் அசைந்து, ஆடி, சுழன்று, அடி அறுபட்டு விழுந்து நொறுங்கும் சூறுவளி வரின். அதைப் போன்றே ராணுவம், பொக்கிஷம், கர்வம், கபடம், ஆணவம், அகந்தை ஆகிய எல்லா ஆயுதங்களையும் ஒருங்கே படைத்து தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என இறுமாந்து கிடந்த எத்தனையோ எதேச்சதிகாரிகள் இடாபட்டு, இடிபட்டு, கீழே உருண்டனர், புரட்சியின் வேகத்தைத் தாங்கமாட்டாது. எனவேதான் அவர் வழி வந்தவருக்கெல்லாம் புரட்சி என்றதும் மருட்சி ஏற்பட்டு விடுகிறது. மருட்சி அவர்களைக் காப்பாற்றாது. மருட்சிகொண்டோன், பலப்பல கொடுமையான காரியங்களையும் கூசாது செய்வான், எனினும் எச் செயலும் புரட்சிப் புயலில் அவனைச் சிக்கவைக்காது போகாது. இது சரித்திரம்.

எதேச்சதிகாரிகளுக்கு அரசியல் அதிகாரம் கிடைத்தால்: அதனை வைத்துக்கொண்டு சட்டம்கொண்டு புரட்சியை ஒடுக்கப் பார்ப்பர். ராணுவ பலமிருப்பின் புரட்சிக்காரரை சுட்டுக்கொல்லுவர். இரண்டுமின்றி நமது நாட்டில் அந்த நாளிலே இருந்ததாகக் கூறப்படும், ரிஷிகளாக இருப்பின் சபித்துவிடுவர்.

சுயமரியாதை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு பலபுதிய கருத்துக்களைப்புகுத்தி, புரட்சியைக் கிளப்பியபோது மருண்டவர் எத்தனை பேர்! மருட்சியின் காரணமாக அவர்கள் ஆடிய ஆட்டமும், போட்ட கூக்குரலும் கையாண்ட இழிவான முறைகளும் கொஞ்சமா?

அதைப் போன்றே "தமிழ் நாடு தமிழருக்கே" என்ற புரட்சிக் கீதம் பாடப்பட்டவுடன்: யாராருக்கு மருட்சி ஏற்பட்டது! மருட்சி காரணமாக, கோமாளித்தனமே குறை நீக்கும் மருந்தெனக் கருதும் ஆசாமி முதற்கொண்டு, கோபக்கனலால் எதிர்ப்போரை தரித்துவிடலாம் எனக் கருதும் காங்கிரஸ் மந்திரிகள் வரையிலே, என்னென்ன பேசினார்கள்! புரட்சி அவ்விதமெல்லாம் அவர்கள் மனதை மருட்டிவிட்டது.

இன்று "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற நமது இதய கீதம் நாடெங்கும் முழங்குவதைக் கேட்கும் நமது மாகாண அமைச்சர்களில் இரண்டொருவர் உள்பட மற்றும் சிலர் ஏதேதோ பேசுகின்றனர். நம்மை அடக்குமுறையால் அடக்கி விடுவதாகவும் மிரட்டுகின்றனர்.

தொடர்ச்சியாக நமது பத்திரிகைகள், நாடகங்கள், புத்தகங்கள் மீது பாணந் தொடுத்தவண்ணமிருக்கின்றனர். பேச்சுரிமை எழுத்துரிமை என்பது இன்றைய ஆட்சியில் கேலிக்கூத்தாகயிருக்கிறது.

காங்கிரஸ் மந்திரிகள் முதலியோரின் செயல்கள், காங்கிரஸ்காரர் என்று இன்னமும் தம்மை அழைத்துக்கொள்ளும் பல்லாயிரக்கணக்கான மக்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை, கண்டிக்கப்படுகின்றன.

இந்த சம்பவம், ஒரு கட்சிக்கு ஏற்படுவதென்றால் அது, அந்தக் கட்சி மதிப்பையும், செல்வாக்கையும் இழந்துவிட்டது என்பதைத்தான் காட்டுகிறது. வெளியார் ஏசுவதும், இடிப்பதும் வெறும் துவேஷத்தால் என்று சுலபத்தில் தப்பித்துக் கொள்ளக் கூறிவிடலாம். ஆனால், உள்ளிருப்போரே குறைகள் கண்டு, வெளிப்படையாகவே கண்டிக்கவுந் தொடங்கினால் அது எவ்வளவு மோசமான நிலைமையைக் காட்டுகிறது என்பதை விவரிக்கவும் வேண்டுமோ?

எனவே, அடக்குமுறைகளை வாரி வாரி வீசி எத்தனை நாளைக்கு ஒரு கட்சி, தனது ஆடிப்போன செல்வாக்கைக் கீழே விழாது தடுக்க முடியும்! இந்த மருட்சியினால் உண்டாகும் விளைவுகள் புரட்சியைப் பொசுக்காது. மாறாக புரட்சியையே இச் செயல் வலுப்படுத்தும்.

பிரசாரகரோ, பத்திரிகையோ நாட்டிலே இவர்கள்மீது எழுந்துள்ள எதிர்ப்பையே எடுத்துக்காட்டி வருகின்றனர். இவர்களாக எதிர்ப்பை உற்பத்தி செய்வதில்லை, எதிர்ப்பை எழுப்புவது, ஆட்சி முறையின் விளைவுகள், அவர்களின் போக்கு, பேச்சு, புதிய சட்டங்கள், புதுப்புது வரிகள், இவைகள் நாட்டிலே அதிருப்தியை, வெறுப்பை கொதிப்பைக் கிளப்பி, எதிர்ப்பு என உருண்டு திரண்டு வருகிறது. அந்த எதிர்ப்பு என்ற 'ஜ்வாலையின்' பொறிகளைத் தாங்கி தருவன பத்திரிகைகள், பிரசாரங்கள். பொறிகளை அணைத்துவிடுவது ஜ்வாலையை அணைத்ததாகாது.

பொறிகளைக் கண்டு மருண்டு, அவைகளை அழித்துவிட்டால் பயனில்லை. 'ஜ்வாலை' இருக்கிறது. பொறிகளை, எண்ணற்ற பொறிகளை எடுத்து எடுத்து வீச!

எனவே, மருட்சிகொண்டவர் செயல் ஒருபோதும் புரட்சியை அடக்கிவிடாது என்பதை ஆட்சி செலுத்துவோருக்கு எடுத்துக் காட்டுவதுடன் மக்களின் குறைகளைத் தீர்க்கவும் நாட்டின் நலன் கருதியும் இனியாவது நடைமுறையில் ஆவன செய்ய வேண்டுவது அரசியலார் கடமையாகும் என்பதை பொங்கற் புது நாளாகிய இன்று நினைவூட்டுகிறேன்.


தோழர்களே!

**"திராவிடன்"**

**சந்தாதாரராகச் சேருங்கள்**

ஆண்டுக்கு ரூபாய் 3—8—0



## கந்தன் மூல பவுத்திர ஆஸ்பத்திரி

நெ. 137. தங்கசாலை தெரு

சவுக்கார் பேட்டை போஸ்டாபீஸ் அருகில்

ஜி. டி. மதராஸ். 1.



Dr. P. S. கந்தன்.

"உங்களை, வாட்டி வதைக்கும் கொடிய 'மூலபவுத்திர' வியாதிக்கு, தக்க வைத்தியம் செய்து கொண்டீர்களா? இல்லையேல் உடனே நேரில் வாருங்கள். 2 அல்லது-3வாரத்தில் உத்திரவாதத்துடன் பூரண குணமடையலாம். நீங்கள், எத்தனை தடவை, ஆயுத சிகிச்சை செய்து, தீராமல் அவஸ்தைப் பட்டிருந்தாலும் சரி; பத்திரிகை விளம்பரங்களில், காணும் மருந்துகளை வாங்கிச் சாப்பிட்டு ஏமாந்து கவலையுடன் இருந்தாலும், நான் உங்களை அவ்வியாதினின்றும். காப்பாற்றுகிறேன். உள்மூலம் வெளிமூலம், இரத்தமூலம், சீழ்மூலம் முதலிய 9 வகை மூல ரோகங்களும், இரத்தம் ஊற்றினாலும் சரி, மூலம் வெளிக்கு போகையில் மூலம் வெளிவருவதை கையினால், அமுக்கி உள்ளுக்கு தள்ளுவதாக இருந்தாலும், 8 வகை பவுத்திர ரோகம், உள் பவுத்திரம், நீர் பவுத்திரம், புட்டப்பவுத்திரம், சீழ் பவுத்திரம், கிரந்திப் பவுத்திரம் முதலிய ரோகங்களில் சதா சீழ்வந்து கொண்டிருந்தாலும், கிருமி பூச்சி வந்தாலும் அபான வாயுவு அந்தத் துவாரத்தின் வழியாய் வந்தாலும் இன்னும் எவ்வளவு கொடுமைப் படுத்தினாலும் கவலை வேண்டாம்! ஆப்பரேஷன் இல்லாமல்; பத்திய மில்லாமல் 2 அல்லது 3 வாரங்களில், உத்திரவாதத்துடன் குணப்படுத்துகிறேன்.

குறிப்பு: நேரில்வந்து தான் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். வி. பி. யில் மருந்து அனுப்பி. குணமடைய முடியாது. பூராவிவரம் அறியவேண்டுவோர். 2 அணு தபால் பில்லை அனுப்பவும்,

# விண்ணப்பக் கவிதை

(சு. அதிவீரபாண்டியன்)

பண்புத் தமிழ்நாட்டின்
பச்சைக் கவிஞர்களே!
உண்மை இலக்கியத்தை
ஓம்புகின்ற ஓர் குணமே
எப்போதும் என்னிடத்தில்
நெஞ்சிலிடம் பெற்றதாலே
குப்பை இலக்கியம்போல்
கூறும் கவிதை கண்டு
ஆத்திரம் பொங்கும் என்
ஆழ மனக்கருத்தினில்
வேர்த்த பல எண்ணத்தை
விண்ணப்ப மாக
அனுப்புகின்றேன்.
குற்றம் அற்ற கவிதை
இனிமேற் புனைவீர் இசைந்து.

*

மேகம் மழை பொழியும்
விந்தையையும், வானத்தில்
ஏகமாய் மின்னி
இடிகள் இடிப்பதையும்
கண்ணிலே கண்டு
களித்த உடன் நீங்களிங்கு
எண்ணிலாப் பாடல்கள்
இசைத்திடுவீர் லாபமுண்டோ?
மண்ணிற் தொழிலாளர்
வாழ்வைப் பணக்காரர்
திண்ணமுடன் சுறண்டி
செல்வத்தைச் சேர்ப்பதாலே,
நாள்தோறும் இவ்விடத்தில்
நல்ல உழைப்பாளிகள்
தோள்வற்றி மேல்வற்றி
தூயமுகம் தான் வற்றி
எண்ணெய் தலைக்கின்றி
இருக்க நல் வீடின்றி
வண்ண உடல் மறைக்க
திண்ண உடையின்றி
துன்பத்தில் இங்கு
தொழிலாளர் துடிக்கையிலே,
அன்னார் துயர் தீர்க்க
ஆத்திரம் நீர் கொள்ளாமல்,
துன்பத் தொழிலாளர்
இன்னல் துடையாமல்,
அன்பென்றும் காதலென்றும்
ஆரழகு மாதரென்றும்
தேன் மொழியாளென்றும்
தித்திக்கும் எச்சிலென்றும்
மான் விழியாளென்றும்
மாதர்மேல் பாட்டிசைத்து
நூறு நூறாயிரமாய்
நீரெழுதும் நோக்கமென்ன?
மாறுபடும் காலம்
வகையறியாப் போக்கன்றோ?
இன்பம் தருமியற்கை
காதல் இவைகள் மேல்
முன்னாள் தமிழ் நாட்டில்
மூவாயிரம் கோடி
பண்டைக் கவிஞர்கள்
பாடினது போதாதா?
கண்ட கண்ட காட்சியெல்லாம்
காவியமாய் ஆக்கி மக்கள்
மூளைகுழப் பாக்கும்
முது வழக்கம் வேண்டாங்காண்.
ஆளையே ஆள் சுறண்டும்
அக்கிரமம் இக்காலத்
தீமைகளைப் போக்கடிக்கும்
தீங்கவிதை தாருங்காண்.
காமக் களஞ்சியத்தின்
கற்பனைகள் வேண்டாங்காண்,
தேசத் தொழிலாளர்
சீக்கிரமாய் நன்மை பெற,
வாசக் கவிதை வழங்கும் விஞர்களே!
என்று நான் தாய் நாட்டு
இளங்கவிஞர் யாவருக்கும்
இன்றனுப்பும் விண்ணப்ப ஏடு

# அணல் மூச்சு

—சி. பி. சிற்றரசு—

"கீழே விழும் கல் சிந்திக்க முடியுமானால் அதற்குக் காரணம் தன் விருப்பந்தான், என்று கருதும்" என்கிறார் ஸ்டினோசா. ஏனெனில் அது ஏன் கீழே விழுகிறது என்பது கல்லுக்குத் தெரியாது. நிலத்திற்கு இழுக்கும் சக்தி யிருக்கிறது. ஆகையால் நம்மை இழுத்து விடுகிறது. என்று தெரிந்துக்கொள்ள முடியாத கல் வேறு என்னதான் நினைக்க முடியும்.

அதே போன்று மனிதன் கல் நினைப்பதைப்போல் நினைக்கின்றான். அறிவு இந்த பிரம்மையை நீக்கும். எனவே லோகாயுதவாதிகள், நாஸ்தீகர்கள், சம்சயவாதிகள் முதலியோர் புதுமையைப் புகுத்தவும், வேதாந்திகள், மானசீகவாதிகள் ஆத்தீகர்கள் முதலியோர் பழமையை நிலைநிறுத்தவும் மும்முரமாகபோர்புரிந்து முன்னவர்கள் கண்ட வெற்றியே அறிவு சகாப்தத்தின் முதல் நாளாகும்.

தொழிலாளிவர்க்கம் தனக்களிக்கபட்ட சோதனைச் சின்னங்களான சிறைவாசம், சிந்திய ரத்தம், வழிந்தோடிய கண்ணீர், வாரால் அடிக்க எழும்பிய வடுக்கள், தூக்குத் தண்டனையாகியவைகளால் தனது உள்ளத்தைப் புடம் போட்டு எடுத்த வெற்றியின் அறிகுறியே பாட்டாளியின் சபதம்.

"இயற்கையில் மனிதன் நல்லவன்" என்று முடிவு கட்டிய தீவிர சிந்தனையாளர்கள் செய்த முடிவை, அறிவு பூர்வமான கல்வியின் மூலம் மனிதனை கஷ்டங்களிலிருந்து விடுவித்து விடலாமென்று கருதிய கருத்தை, பெப்ளர், கலிலீயோ, நியூடன், டெகார்டே போன்ற அறிஞர்கள் விஞ்ஞான ரீதியில் அடைந்த வெற்றியை ஆதாரமாகக் கொண்டு அந்த ஆதாரங்களையே அடிப்படையாக வைத்து சமூக ஆராய்ச்சிக்காக பயன் படுத்திக்கொண்ட உலம்வியக்கும் சிந்தனையாளர்கள் முகத்தில் ஓர் களைத் தோன்றிய நாள் பாட்டாளியின் பொன்னாள்.

மன்னனின்மதியற்ற ஆட்சியையும், கத்தோலிக குருமார்களின் கருணைபற்ற செயலையும், சந்திக் கிழுத்து, சிந்திக்கும் சுதந்திரம் தன் உணர்வோடு பிணைக்கப்பட்டிருந்த வால்டர், ரூசோ போன்றார் அரும்பாடுபட, அதே நேரத்தில் அறிவு வளர்ச்சி புரட்சியை யுண்டுபண்ணாது என்ற ஏமாந்த எண்ணத்தை இறுகப் பிடித்துக் கொண்டு ஆத்மீகத் துறையிலே தெய்வீக தத்துவத்தை சிருஷ்டிக்கும்படி கூலி பண்டிதர்களை ஏவி, நம்பிக்கையை நங்கூரமாக அமைக்கும்படித் தூண்டி, மக்கள் எண்ணத்தில் நச்சுக் கொள்கையை நாட்ட தீட்டிய திட்டமும் ஒன்றுக்கொன்று ஈவிறக்கமில்லாமல் தாக்கி தனி சொத்துரிமையை அழித்து பொது உடமையைப் பூக்கச் செய்த அறிவியல் சகாப்தத்தை அகிலத்திற் கெடுத்தோதிய நாள்; பாட்டாளியின் சபதம் நிறைவேறிய நாள்.

பாட்டாளிகளின் படைதிரண்டுவர, மேட்டுக் குடிகளும், மேனுமினுக்கிகளும நாட்டாண்மைக்காரரும், பாட்டாளிகளின் பகைவரும் ஓடி ஒளிந்தாலன்றி உயிர்வாழ முடியாது என்று அலறிக்கண்டபக்கமெல்லாம்ஓடி, காலால்உதைப்பட்டு, கைகளால் அறைவாங்கி, எப்பக்கம் ஓடினும் காப்பாற்றுவாரற்று, கவலையோடு சாயும் தலைக்குத் தன்கைகளை முட்டுக் கொடுத்து மூலையில் உட்கார வைத்தது பாட்டாளியின் சபதமாகும்.

மனிதன் மானசீகத்தின் அடிமையல்ல அவன் இயற்கையின் ஒருபகுதி என்றவாதத்தை மேற்கொண்டு உடல்தான் முபந்தியது என்ற உலகாயுதவாதிகளுக்கும், மனிதன் மனத்தால் நடத்தப்படுகின்றான். அதற்கு எவனும் அடிமைப்பட்டே தீரவேண்டும் என்றும், ஆகவே கனந்தான் முந்தியது என்ற மானசீகவாதிகளுக்கும் இடையே நடந்த போராட்டத்திற்கோர் நல்ல முடிவைக்காட்டிய நாள் புரட்சி நாள்.

புரட்சியை உண்டுபண்ணும் சமூக வளர்ச்சிக்காக பாடுபாட நினைத்த தத்துவ ஞானிகளின் உன்னத நோக்கத்தால், எந்த பிரஞ்சு தேச பக்தர்களை ஏவி பழைய ஆட்சி முறையை அழித்தார்களோ அதே தத்துவஞானிகள் வெறும் தத்

துவம் என்ற சங்கநாதம் ஒன்றினாலேயே எல்லா காலங்களிலும் புரட்சியை யுண்டு பண்ண முடியுமென்றும், அதற்காக அடிமைத்தளையை அறுத்தெறிய பலாத்காரத்தை உபயோகிக்கக் கூடாதென்றும் எழுத்துப் போரில் ஈடுபட்ட அவர்கள் எண்ணத்திற்கெதிராக ஆயுதந்தாங்கி புரட்சிக் கொடிஉயர்த்திய புரட்சிப் புயல், பாட்டாளியின் சபத நாளாகும்.

ஒரு சில முதலாளிகளின் சுரண்டல் கொள்கைக்கு இறைபாகி ஒடுக்கப்பட்டு, பசி பிணி பஞ்சம், நோய், கவலை, வறுமை, சிறுமை, வேலையில்லா திண்டாட்டம் இன்னோரன்ன கொடிய பீரங்கிகளின் எரிவாயிலிருந்து துன்புறும்பாட்டாளிபட்டாளம் தனது அகில உலக ஐக்கியத்தின் ஏகக்குரலை எழுப்புவதற்கும், பொன்னான உழைப்பிலிருந்து பொன் திரட்டும் பொல்லாத முதலாளிகளை முறியடிக்கவும் இன்றைய ஒழுங்கீனமான சமூக கோபுரத்தைத் தகர்த்தெரிந்து புதிய, ஆனால் அசைக்க முடியாத பொதுவுடமைக் கோட்டையை எழுப்ப ஒரு சண்ட மாருத சமூகப்புரட்சியை உண்டாக்குவதற்கு கோடானுகோடி பாட்டாளிகள் விடும் அனல் மூச்சே அவர்களின் சபதமாகும்.

அகில உலகத்தொழிலாளரின் தலைவரும் பொதுவுடமைத் தந்தையும், மானிட வர்க்கத்தின் மனசாட்சியுமான காரல்மார்க்ஸ், எஞ்ஜில்ஸ் வழிவந்த சோவிபத் நவயுக சிற்பிகளான லெனின் ஸ்டாலின் ஆகிய மனித குல மாணிக்கங்களை வாழ்த்தி, உலகப் பல்வேறு பகுதிகளிலிருந்து செய்திகள் ஓடச்செய்த பெருமை பாட்டாளியின்சபதத்தாலாகும்.

உழைப்பாளி மக்களின் உரிமைக்காக உடல்பொருள் ஆவி அனைத்தையும் துறந்த அறவோர்கள், பாட்டாளிகளின் விமோசனப்பீடமாகிய தூக்கு மேடையில் துஞ்சிய தூய நெஞ்சினர், வெஞ்சிறையைத் தம்வீடாக மதித்து வாழும் பாட்டாளிகளின் தலைவர்கள், அந்தமானில் அஞ்சாத வாசம், சைபீரியாவில் வனவாசம், பெர்லினில் பாதாளச்சிறை, ரோமில் வெளியேற்றம், சீனாவில் சிரச்சேதம், சிகாகோவில் சித்ரவதை போன்ற எழுதவும் எண்ணவும் நடுங்கும் வண்ணம் இம்சிக்கப்பட்டத் தலைவர்களுடைய எண்ணற்கறிய தியாகத்திற்குப் பரிசாகப் பாட்டாளிகள் தந்தவை அனல் மூச்சு.

முதலாவது உலகப்போர் எனும் பயங்கரமான இடியினால் பெரும் பெரும் ஏகாதிபத்தியங்கள் சரிந்து வீழ்ந்தபோது, ரஷ்யாவில் உழைப்பாளிகள் தங்கள் ஒப்பற்ற ஆட்சியை நிலைநாட்டினார்கள். உறுதியான பாறையின்மீது உருக்கினால் உழைப்பாளிகள் அரசாங்கம் கட்டப்பட்டது. எத்தகைய இடிகளாலும் பூகம்பத்தாலும் அசைக்க முடியாதவாறு உழைப்பாளிகள் தங்கள் கைத்திறன் அனைத்தையும் காட்டி., சோவியத் உலைக்கூடத்தை கணல் கக்கச்செய்தது பாட்டாளிகளின் அனல் மூச்சாகும்.

இரண்டாவது உலகப்போர் என்னும் மாபெரும் மனிதபூகம்பம் எழுந்தது. பிரெஞ்சு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களும், இத்தாலி, ஜெர்மன் போன்ற பாசிஸ்டு நாடுகளும் உலுக்கப்பட்டு அவற்றின் அடிப்படைகள் அலைந்து நிலைகுலைந்து மேற்கோப்புகள் அனைத்தும் முறித்து, சரிந்து அவைகளின் தலைவிதி நெருங்கி நிற்கின்றன. உயிர்க்காற்று ஓய்ந்து நாடிகள் தள்ளாடி நடக்கின்றன. உலகம் என்றும் கண்டிராத கொடிய ஆயுதங்களையும் கோடானுகோடி படைகளையும் கொண்ட மனித சமூகத்தின் சத்துருக்களான பாசிஸ்டு வெறியர்களின் எண்ணத்தில் மண்ணடித்து பாசிஸ்டுப் பாதகர்களைச் சுட்டுப்பொசுக்கி தூவென்று ஊதி சோவியத் சிங்காதனமேறியது. அப்பால் யூகோவிலும், ஜெகோவிலும் சோவியத் நவயுகம் பிறக்க ஆரம்பித்தது. விரைவில் ருமேனியா, பல்கேரியா, போலந்து, ஹங்கேரி, அபிசீனிபா, ஜெர்மன், இத்தாலி, கிரீஸ் ஆகிய நாடுகளில் சோவியத் ஆட்சி மலரும் என்பதற்குறிய அறிகுறிகள் மலிந்து வருகின்றன. சீனாவின் பெரும்பகுதி சிவப்பாய் சியாங் - கே - ஷேக் பார்மோசா தீவில் பாதாள அறை தோண்டிக் கொண்டிருக்கின்றார். இதைக்கண்டு முதலாளித்வகடைசிக் கோட்டையான அமெரிக்காவில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. நேரு சென்று வந்தார்; லியாகத் செல்லவிருக்கின்றார். வஞ்சனை வியாபார உருவெடுத்து இந்தியாவின்மேல் படையெடுக்க அமெரிக்கக் கடலோரம் கப்பல்கள் காத்து நிற்கின்றன. அமெரிக்கத் தலைவர் ட்ருமன் தனது மரண வாரண்டாகிய யுத்தப் பிரகடனத்தில் கைபெழுத்திட பகிரங்கமாக முன்வந்துள்ளார். மரணப்படுக்கையில் வலிவற்று வீழ்ந்து கிடக்கும் பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியங்கள் தங்கள் தலையை ஆட்டுகின்றன.

வறுமையைபே பெருமையாக நினைத்து வடிகட்டிய ஹெகலின் மானசீக வாதத்திற்கடிமைப்பட்டு செயலற்றுக்கிடந்த கோடிக்கணக்கான பாட்டாளிகளை தனது லோகாயுத வாதத்தால் விலைமதிக்க முடியாத வர்க்கமாக்கி, முடி

# சொல்லும், செயலும்!

(கி. ஆ. பெ. விசுவநாதம்)

இன்னாசிமுத்து உபதேசியார் என்றால் ஈச்சம்பட்டி மக்கள் அனைவர்க்கும் நன்கு தெரியும். அவருக்கு பைபிள் மனப்பாடம். எந்த வசனத்தையும் அவர் பாராமல் ஒப்புவிக்கும் ஆற்றல் படைத்தவர். "கிராமம் கிராமங்களாகச் சென்று பாமர மக்களுக்கு பைபிளைப் போதித்து வர ஒரு உபதேசியார்தேவை" என்று சாண்டகிரின் பாதிரியார் அந்த வட்டத்து 'காட்டய்யர்' அவர்களிடம் கூறியிருந்தார். ஆதலால் அவருடைய சிபார்சின் பேரில் அந்த வேலை இன்னாசிமுத்து உபதேசியாருக்கே கிடைத்துவிட்டது.

அவர் ஒரு நல்லபேச்சாளி; அவருடையஉணர்ச்சி கலந்த பேச்சு எவருடைய உள்ளத்தையும் உருக்கிவிடும். அவரது அருமையான தொண்டு காரணமாக கிராம மக்கள் பலரும் கிறிஸ்து சமயத்தைப் பற்றி நன்கறிந்து கொண்டார்கள். சிலர் கிறிஸ்துவராகவும் மதம்மாறினர். சிலர் மதம் மாறும் நிலையிலும் இருந்து வந்தனர்.

இந்த நிகழ்ச்சி பனைமரத்துப் பட்டியிலுள்ள பரமசிவம் பிள்ளைக்கு ஒரு கலக்கத்தை உண்டுபண்ணி விட்டது. அவர் சிவ பக்தியுள்ள ஒரு பெரிய மிராசுதார். இன்னாசிமுத்து உபதேசியாரின் பேச்சால், பிரசாரத்தால் இந்துமதமே அழிந்து போய் விடும் என்ற பயம் அவருக்கு வந்து விட்டது. அதற்காக என்ன செய்யலாம்? என ஆலோசித்தார். கூட்டினார் கிராமக் கூட்டத்தை.

இறுதியாக சென்னையிலிருந்து ஒரு நல்ல பேச்சாளியை வரவழைப்ப தென்றும், அவரைக்கொண்டு எல்லாக் கிராமத்திலும் திருக்குறள் பிரசாரம் செய்வது என்றும், அவருக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்தை பனைமரத்துப்பட்டி, பரமசிவம் பிள்ளையே கொடுப்பது என்றும், முடிவு செய்யப்பட்டது. அடுத்த மாதமே யாவும் திட்டப்படி நடைபெறத் தொடங்கிவிட்டது.

பட்டிணத்திலிருந்து வந்த பழனியப்ப முதலியாருக்கு 'திருக்குறள் பிரசங்கியார்' என்ற மறு பெயரும் உண்டு. என்றாலும், எல்லாப் புலவர்களையும் போல அவரும் வறுமை வாய்ப்பட்டு, வாடி வருந்தி வந்தவர். இருந்தாலும் பரமசிவம் பிள்ளையின் ஆக்கமும், ஊக்கமும் அவருக்கு ஆறுதலும், தேறுதலும் அளித்தன. அவர் பல்வேறுகிராமங்களுக்கும்சென்று தனது வேலைகளை மிகத்திறமையாக நடத்திவந்தார்.

ஈச்சம்பட்டியைவிட்டு இன்னாசிமுத்து உபதேசியார் எழெட்டு கிராமங்களுக்குச் சென்று வந்தால் பனைமரத்துப்பட்டியை விட்டு பழனியாண்டி முதலியார் பத்துப் பதினைந்து கிராமங்களுக்குப் போய் வருவார். உபதேசியார் பைபிளைப் பற்றியும், பிரசங்கியார் திருக்குறளைப் பற்றியும் தகுந்த மேற்கோள்களுடன் அழுத்தம் திருத்தமாகப் பேசி, கிராமமக்கள் மனதில் நன்கு பதிய வைத்து வந்தனர்.

காலப்போக்கில் பிரச்சாரம் போட்டிப் பிரச்சாரமாக மாறி விட்டதால், ஒருவர் பேச்சை மற்றொருவர் மறுத்துப் பேசுவதும், ஒருவர் கொள்கையை மற்றொருவர் வெறுத்துப் பேசுவதும் இயல்பாகவே நடைபெறத் தொடங்கி விட்டன. இதற்காகவேண்டி பிரசங்கியார் பைபிளையும், உபதேசியார் திருக்குறளையும் படித்து ஆராயத் தொடங்கினார்கள். அந்த ஆராய்ச்சி அவர்களின் பேச்சுக்கு பெருந்துணையாக இருந்து வந்தது.

"இரு பேச்சாளிகளும் எந்த ஊரிலும் நேருக்கு நேராக சந்திக்கவில்லை. வாது புரியவுமில்லை.ஒருவரை ஒருவர் அறியார்" என்பதுதான், ஊரார்களின் நம்பிக்கை. எனெனில்உபதேசியாரின் பேச்சு முறைஎப்படி? என்பதை பிரசங்கியாரும், பிரசங்கியாரின் பேச்சுப் போக்கு எத்தகையது என்பதை உபதேசியாரும் ஒளிந்திருந்து ஒவ்வொரு முறைகேட்டிருக்கிறார்கள் என்பதை ஊரார்கள் எப்படி அறிவார்கள்?

ஒருவர் பேச்சை ஒருவர் கேட்டு பிறகு பேசத் தொடங்கியதால், அவர்களின் பேச்சு முறையிலேயே ஒரு பெரிய மாறுதல் எற்பட்டு விட்டது. திருக்குறள் பிரசங்கியார் தமது பேச்சில் திருவள்ளுவர் கூறிய நீதி நெறி முறைகளையே அதிகமாகப் பேசுகிறார் என்று தெரிந்ததும் இன்னாசிமுத்து உபதேசியார் ஏசுபெருமான் கூறிய நீதி நெறிகளை ஏராளமாகப் கூறத் தொடங்கிவிட்டார். இதனால் கிராமங்களிலுள்ள பொதுமக்கள் இவர்கள் இருவரையும் நன்கு வரவேற்று வந்தார்கள். "எந்த மதமானால்தான் என்ன? எந்த பிரசங்கமானால்தான் என்ன? கிராமத்தில் உண்மையும், ஒழுக்கமும், நீதியும், அன்பும் நிலைபெற்றால் போதும்" என்பதே பொது மக்களின் எண்ணமாயிருந்து வந்தது. சில கிராமத்தினருக்கு இப்பேச்சுக்களைக் கேட்பது ஒரு பொழுது போக்காவும்கூட இருந்து வந்தது. இதற்காக ஒவ்வொரு கிராமத்தாரும் தங்கள் ஊருக்கு எந்தப் பிரசங்கியார் வந்

தாலும் மகிழ்வோடு வரவேற்று, அன்போடு உபசரித்து அனுப்புவார்கள். அதிகம் கூறுவானேன். அடுத்த ஊருக்குப்போய் சேருவதற்கு என்று கட்டுச்சோறு கட்டிக்கொடுத்தனுப்புவதுகூட சில கிராமத்தினர்களின் வழக்கமாகப் போய்விட்டது.

பட்டப்பகல் 12 மணி, பங்குனி வெயில், நடந்த களைப்பு, பசி மயக்கம் இத்தனையும் சேர்ந்து வாட்டியது இன்னாசிமுத்து உபதேசியாரை. ஈச்சம்பட்டி போய்ச் சேர இன்னும் 3 மைல் நடந்தாக வேண்டும். நடக்கவும் முடியவில்லை. நாவரட்சி வேறு. என்ன செய்வார்? பாவம்! கண்ணுக்கெட்டிய தொலைவில் தினைச்செடிகளையும், தென்னை மரங்களையும் கண்டார். அங்கு கட்டாயம் கிணறு இருக்கும் என நம்பி தள்ளாடிச் சென்றார். அவர் எண்ணம் வீண்போகவில்லை. கிணறு இருந்தது. கிணற்று மேட்டில் திருக்குறள்பிரசங்கியார் தனது கட்டுச்சோற்றைஅவிழ்த்து வைத்து உண்டு கொண்டிருந்தார். சோற்றையும், திருக்குறள் பிரசங்கியாரையும் கண்டதும் கட்டாயம் தனக்கு சோறும் கிடைக்கும், களைப்பும் ஒழிந்துவிடும் என்று இன்னாசிமுத்து உபதேசியார் நம்பி ஒருவாறு ஆறுதல் அடைந்தார். காரணம்தான் ஒளிந்திருந்து கேட்ட பிரசங்கத்தில் திருக்குறள் பிரசங்கியார் விருந்தின்பெருமையை விரிவாக விளக்கிப் பேசியிருந்தார் என்பதேயாகும்.

கட்டுச்சோறு கரைந்துகொண்டேயிருந்தது. திருக்குறள் பிரசங்கியார், இன்னாசிமுத்து உபதேசியாரை உணவு உண்ண அழைக்காதது மட்டுமல்ல பாராமல்கூட உண்டு கொண்டேயிருந்தார். தான் வந்திருப்பது ஒரு வேளை அவருக்குத் தெரியாதோ? என எண்ணி அருகில் போய் நின்றார். ஒரு கனைப்பும் கனைத்துப் பார்த்தார். என்ன செய்தும் என்ன? இன்னும் ஐந்தாறு உருண்டைகளே எஞ்சியிருந்தன! அதுவேனும் கிடைத்தால் களைப்பேனும் நீங்குமே என்றெண்ணி கட்டுச்சோற்றுக்கு எதிரில் போய் உட்கார்ந்து பார்த்தார். இரண்டே உருண்டைகள் தானிருந்தன! இதுவும் போய்விட்டால், எப்படி ஊர்போய்ச் சேருவது? என்ற கவலை இன்னாசிமுத்து உபதேசியாரை வாட்டி வதக்கிற்று! அறிமுகமும் இல்லை. பேசவும் நாவெழவில்லை. கேட்கவும் வெட்கம். பசி மயக்கமும் மற்றொரு பக்கம். என்ன செய்வார்? திருக்குறளையாவது ஞாபகப்படுத்திப் பார்க்கலாம் என்று

> "விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
> மருந்தெனினும் வேண்டாற் பாற்றன்று"

என மெதுவாகக் கூறினார். கிடைத்தற்கரிய அமுதமாயினும் விருந்தினர் அருகிலிருந்தால், தனித்துஉண்ணாதே என்பது அக்குறளின் கருத்து. திருக்குறள் பிரசங்கியார் குறளையும் கேட்டுக்கொண்டு கடைசி உருண்டையையும் வாயில் போட்டுக்கொண்டார். உதறினார் சோறு இருந்த துணியை. எடுத்தார் ஒரு அரைச் சோற்றை. அதை ஒரு சிறிய இலைத்துண்டில் வைத்து இருகைகளாலும் தாங்கிப் பிடித்து, எழுந்து நின்று, உடலை வளைத்து வணங்கி,

> "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
> கொள்வர் பயன் றெரிவர்"

எனக்கூறி நீட்டினார். எதிர்பாராத இச்செயலைக் கண்ட உபதேசியார் வெட்கிப்போனார். கிணற்றில் தட்டுத்தடுமாறி இறங்கி, நீரருந்தி களைப்பை மாற்றிக்கொண்டு எவ்வாறோ ஈச்சம்பட்டிக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்.

எண்ணி இருபத்தெட்டாம் நாள், திருக்குறள் பிரசங்கியார் பட்டினம் பழனியப்ப முதலியார் எங்கெங்கோ சுற்றிவிட்டு, பகல் 1 மணிக்கு பசிக்கு உணவு கிடைக்கும் என எண்ணி பயற்றம்பாறை கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். அன்று அவ்வூரில் திருவிழா, ஆதலின் தேர் நிலைக்குப்போய் நின்றபிறகுதான் அவ்வூரார்கள் சோறுண்பார்கள் என்றும் அது மாலை 4 மணி ஆதும் என்றும் தெரிந்ததினால் அங்கு சிறிதும் நிற்காமல் மணல்மேடு கிராமத்திற்குப் போய்விடலாம் என புறப்பட்டு விட்டார். வழியில் களைப்பும், மயக்கமும் கலந்து கால்களைத் தள்ளாடச் செய்தன. இன்னும் கால் மைல் தூரம் சென்றாலும் ஒரு காட்டாறு வரும். அதில் ஊற்று இறைத்தேனும் நீரருந்தலாம் என நம்பி உயிரைப் பிடித்துக் கொண்டு உருண்டும், எழுந்தும் ஒருவாறு போய்ச் சேர்ந்தார். கடைசியாக ஒரு ஆள்காட்டாற்றில் ஊற்று இறைத்து வைத்து, அதனருகில் உணவு உண்பதையும் கண்டுவிட்டார். 'உயிர் பிழைத்தோம்' என எண்ணி அவ்விடத்திற்கு மகிழ்ச்சியோடு ஓடிச்சென்று பார்த்தார்.

ஆம்! அவர் இன்னாசிமுத்து உபதேசியார்தான். அவர் கட்டுச் சோற்றை அவிழ்த்து தனது வேலையைச் செய்து கொண்டிருந்தார், கதை எதற்கு? கடைசியிலாவது தனக்குக் கொஞ்சம் சோறு கிடைக்கும் என நம்பி அந்தச் சுடு மணலில் சுருண்டும், தவித்தும், துடித்தும் கிடந்தும் பார்த்தார். திருக்குறளாரைப்பாரத்தும் பாராததுபோல பைபிளார் சோற்றை உண்டு கொண்டேயிருந்தார். ஒரே உருண்டைதான் மீதி இருந்தது!

அதுவும் போய்விட்டால் ஆபத்தாகுமே! எனப் பயந்த பழனியப்பர், இன்னாசியாரிடம் எதிரில் போய் உட்கார்ந்து,

> "தன்னைப்போல் பிறரை நேசிப்பாயாக!"

என்று கூறி ஏசுபெருமான் கட்டளையை நினைவூட்டினார். என்ன செய்வார்? இன்னாசியார் அந்தச்சோற்றையும் அள்ளி வாயிற் போட்டுக்கொண்டே,

> "பிறர் பொருளை இச்சியா திருப்பாயாக!"

என்று கூறிவிட்டு, துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு போய்விட்டார்.

தமது சொல்லுக்கும், செயலுக்கும் திருக்குறளில் ஆதாரம் தேடி வைத்திருப்பதாகப் பெருமைப் பட்டுக்கொண்டிருந்த திருக்குறள் பிரசங்கியாருக்கு இன்னாசிமுத்து உபதேசியாரும் அப்படி பைபிளில் தேடிவைத்திருக்கிறார் என்பது தெரிந்ததும் வெட்கமடைந்து, விரைந்து சென்றார்.

கதை எப்படி? "நல்ல கதை! நகைச்சுவைக் கதை!" அப்படித்தானே? உங்களுக்கு சிரிப்புக்கூட வந்திருக்கும்! ஆம் கதை எழுதுவதும் சிரிக்கத்தான்! என் பத்திரிகைகளை சிலர் நடத்துவதும்கூட சிரிக்கத்தான்! நம் நாட்டில் இருக்கிற துன்பங்களை, துயரங்களை சிரித்து ஆற்றுவது என்பதுஒரு வழி. அதைத் தவிர வேறுவழியில்லை என்பதைக் கண்ட பிறகுதான் சில பத்திரிகாசிரியர்கள் சிரிப்பாய் சிரிக்கிற கதைகள் சிலவற்றை எழுதி வெளியிட்டு வருகிறார்கள். அல்லவா?

கதையை அல்ல; கருத்தை உணருங்கள். கதையை நினைத்தால் சிரிப்புத்தான் வரும். கருத்தை நினைத்தால் கண்ணீரேவரும். இந்த உபதேசியாரைப் போலவும், பிரசங்கியாரைப் போலவும் எத்தனை மக்கள் இன்று நம் நாட்டில் இருந்து வருகின்றனர். இத்தகைய மக்களின் வாழ்வு நம் நாட்டின் வாழ்வுக்குக் கேடுதரும். அதனை எண்ணியே திருவள்ளுவர்,

"கற்கக் கசடற கற்பவைகற்ற பின்
நிற்க அதற்குத்தக"

என்று கட்டளை யிட்டிருக்கிறார்.

"படி! நன்றாகப்படி! படிக்க வேண்டியவைகளைப் படி! படித்த பின் அதன்படி நடந்து ஒழுகு!" என்பதே இதன் கருத்து. எல்லாவற்றையும் கற்ற இந்த இருவரும் இதைக் கற்றார்களா? கற்றிருந்தால் பிறருக்குப் போதிப்பவைகளில் சிலவற்றையாவது தங்கள் செயலில் காட்டியிருப்பார்கள் அல்லவா? வள்ளுவர் இம்மட்டோடுநிற்கவில்லை. இத்தகைய இழிந்த மக்களைக் கண்டு வருந்தி, சிறிது அதிகமாகக் கடிந்தும் கூறி நமமை எச்சரிக்கை செய்கிறார்.

"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு"

என்று. சொல் வேறு செயல் வேறுபட்டவர்களோடு தொடர்பு கொள்ளாதே! கொண்டிருந்தால் விழித்திருக்கும்போது மட்டுமல்ல; உறங்கும்போதும், கனவிலும்கூட அது உன்னைத் துன்புறுத்தும் என்பது இதன் கருத்து.

பனைமரத்துப்பட்டி பரமசிவம் பிள்ளைக்கு இந்தக் குறள் தெரியும். இன்னாசிமுத்து உபதேசியார் தன்னைக் காப்பாற்றாமல் காட்டாற்றில் தவிக்கவிட்ட செய்தியை பரமசிவம் பிள்ளையிடம் பழனியப்பர் கூறிவிட்டார். பரமசிவம் பிள்ளை மிகவும்வருந்தி இச்செய்தியை நச்சம்பட்டிப் பாதிரியாருக்குத் தெரிவித்தார். நச்சம்பட்டிப் பாதிரியார் இன்னாசிமுத்து உபதேசியாருடன் பனைமரத்துப்பட்டி பரமசிவம்பிள்ளையுடன் வந்து நடந்ததை விசாரிக்கச் சொன்னார். அவர் தென்னைமரத் தடியில் பனைமரத்தளவு சோறுதந்த திருக்குறள் பிரசங்கியாரின் செயலைத் தெளிவாக எடுத்துக்கூறினார். உண்மைகள் விளங்கி விட்டன!

பரமசிவம் பிள்ளையும் பாதிரியாரும் ஒன்றுபட்டு தனித்துப் பேசினார்கள். இத்தகைய திருக்குறள் சொற்பொழிவாளர்களை கிராமமக்களிடம் தலைகாட்ட விடுவது நாட்டிற்கே கேடுதரும் என்றார் பரமசிவம் பிள்ளை. இத்தகைய உபதேசியார்களை ஏசுபெருமான் மன்னிக்கவே மாட்டார் என்றார் பாதிரியார். கடைசியாக இருவரும் அவரவர்க்குரிய சம்பளத் தொகைகளை அவரவர்களிடம் கொடுத்து மக்களை சீர் திருத்தியது போதும்; இனி நீங்கள் உங்களையே சீர்திருத்திக் கொள்ளுங்கள்" என்று கூறி அனுப்பி விட்டார்கள். கருத்துக் கலங்கினார் திருக்குறளார். கண் கலங்கினார் இன்னாசி அண்ணார். இருவரும் ஒன்று கூடி நடந்தார்கள். வரும் வழியில் "அண்ணே! திருக்குறளில் எல்லாம் இருக்கிறது என்று அன்று கூறினீர்களே! நம்முடைய இந்த நிலைபற்றி ஏதேனும் அதில் இருக்கிறதா?" என்றார் உபதேசியார்.

"ஆம்! படித்து, அறிந்து, பிறர்க்கு உபதேசம் செய்து தான்மட்டும் அதன்படி நடந்தொழுகாத மூடனைவிடச் சிறந்த மூடன் உலகத்தில் ஒருவனுமில்லை என்று நன்றாகச் சொல்லி யிருக்கிறது அண்ணே!" என்றார் திருக்குறளார்.

"குறளைச் சொல்லமாட்டீர்களா?" என்றார் இன்னாசியார்.

"ஓதி உணர்ந்தும், பிறர்க்குறைத்தும் தானடங்காப் பேதையிற் பேதையாரில்" என்றார்பழனியப்பர்.

"அண்ணே! இதைக் காட்டாற்றங்கரையிலேயே நினைவூட்டக்கூடாதா? என்றார் உபதேசியார்.

"தென்னை மரத்து நிழலிற்கூட இது என் நினைவிற்கு வரவில்லையே! என் செய்வது?" என்றார் பிரசங்கியார்.

தம்பி! கட்டுரையைப் படித்தாயா? எப்படி இருக்கிறது? நன்றாயிருக்கிறது என்று நினைத்தாயா? இன்னும் நன்றாக எழுதலாமே என்று நினைக்கிறாயா? அதுதான் கூடாது. படிப்பது எழுதுவதற்காக என்றும், பேசுவதற்காக என்றும் நினைக்கிற நினைப்புதான் நம் நாட்டு மக்களைக் குட்டிச்சுவராக்கிவிட்டது. படிப்பது செய்வதற்காக என்ற எண்ணம் நம் நாட்டில் வளர வேண்டும். இன்றைக்கு நீயும் அந்த முடிவுக்குத்தான் வரவேண்டும்.

சொல் வேறு செயல் வேறுபட்டவர்களுடைய கூட்டுறவிலிருந்து விலகு! உடனேவிலகு! ஏனெனில் அது நல் வாழ்விற்கு ஏற்றதொரு நல்ல வழி!

## 'நொண்டிப் பெண்'

★

ஒரு மாணவி


★

தேள் கடி வலி தீர்ந்தது...........
அடுத்து, சேகரும் சாமளாவும்!!

அந்திப்பொழுது. அணி அணியாக நின்ற தென்னை மரங்களும், அழகிய வயல் வெளியும் அண்மையில் வற்றிப்போன ஆற்றின் மணற் பரப்பும் அது ஓர் சிற்றூர் என்பதையும், வேனிற் காலமென்பதையும் சொல்லாமலே சொல்லும்.

கல கலவென்ற சிரிப்பொலி கேட்டது. நான்கு பெண்கள் குடத்துடன் வந்துகொண்டிருந்தனர். நாம் யோசியாமலே அவர்களை மணமாகா மங்கையர்களென்றும், நீர் எடுக்க வந்தவர்களென்றும் கூறிவிடலாம். அந்த நால்வரில், மூவர் நல்ல செல்வான்கள் வீட்டுச் செல்விகள் போலவும், நிறைந்த அழகிய நகைகளை அவர்கள் மேனி தாங்கி நின்றன. ஆனால் அந்த மற்றொருத்தி நிறைய நகைகளைப் பூண்டிருக்கவில்லை யென்றாலும், நல்ல அழகியாகக் காணபட்டாள். இயற்கை அவளை எழிலரசியாகக் செய்திருந்தது.

முகமோ தாமரை, புருவமோ வில், அதன் கீழ் கரிய விழிகள். கரும் விழிகளில் காந்த ஒளி. கொவ்வை உதடு. அதனுள் வெண் முத்துப் பற்கள். போதுமா?...... அழகை மிகை செய்ய.




அந்த அழகி இடையிலே குடத்தைத்தாங்கிய வண்ணம் நடந்தாள். ஆனால் நடையிலே இளமைக்குரிய எழுச்சியில்லை. முகங்கூட சோகத்தை வாரிச் சொறிகிறது. காரணம்!.........யாருக்குத் தெரியும்?......... அவளுக்கல்லவாத் தெரியும்.

கூட வந்த பெண்களிலொருத்தி 'என்னடி சாமு! ...... பேசாமலே வருகிறாயே? ஓகோ! நாளை மாப்பிள்ளை வீட்டார் வந்தால் என்னென்ன நடக்குமோ என்ற யோசனையோ?' என்றாள்.

[சாமு என்றதும் திகைத்துவிடாதீர்கள்! கிருஷ்ணவேணியைக் 'கிட்டு' என்பது போலவும், காமாட்சியைக் 'காமு' என்பது போலவும், சாமளாவை சாமு என்கிறார்கள். அது ஒரு தொத்து நோய்போல பரவி வருகிறது.]

அதற்குள் சாமளா 'போதுமடி அலமு' இந்த மாப்பிள்ளைப் பேச்சே எனக்குப் பிடிக்கவில்லை' என்றாள். இதுசமயம் எதிரே ஆட்டுக்குட்டி யொன்று துள்ளியோடியது. சாமளா குடத்தைக் கீழே வைத்துவிட்டு கருப்பும் வெள்ளையுமான அந்த ஆட்டுக் குட்டியை ஓடிப் பிடித்து அணைத்துக்கொண்டாள்.

தாயைக் காணாது தவித்த அந்த பச்சிளங் குட்டியும் அவளின் அணைப்பில் தாய்மையின் உணர்ச்சியைக்கண்டது. கூடவிருந்தப் பெண்களோ 'என்னடி சாமு, இருட்டாகப் போகிறது நீ என்னவென்றால் குழந்தை மாதிரி ஆட்டுக் குட்டியை அணைத்துக் கொஞ்சி அகமகிழ்கிறாய். இப்பொழுது நீ வரப் போகிறாயா? இல்லையா?' என்றார்கள்.

சாமளாவோ, 'பாவம் ஆட்டுக் குட்டியோ தாயைக் காணாது தவிக்கிறது. நீங்கள் வேண்டுமானால் போங்கள். நான் குட்டியை அதன் தாயிடம் சேர்த்து விட்டுத்தான் வருவேன்' என்றாள். மற்றப் பெண்களோ முகவாய்க்கட்டையைத் தோள்மீது இடித்து விட்டு ஊற்றைப் பார்க்க நழுவினார்கள்.

சாமளா ஆட்டுக் குட்டியைத் தூக்கிக்கொண்டு கொஞ்ச தூரம் சென்றாள். எதிரே சேயைப் பிரிந்த தாயாடு 'பிளிறிக்' கொண்டு வந்தது, சாமளா குட்டியை அதனிடம் விட்டாள். அது ஓடி தாயின் மடியை சப்பியது. தாயாடு சாமளாவை நன்றியறிதலோடு நோக்கியது. அதைக் கண்ட சாமளா பிறவிப் பயனைபெற்றுவிட்டதாக எண்ணிக்கொண்டாள். பின் திரும்பி நடந்தாள்.

இதற்குள் இருள் உலகைக் கவ்வ ஆரம்பிக்கவே நடை ஓட்டமாக மாறியது. அதோ ஊற்றுத்தண்ணீர் மொண்டுக் கொண்டுத் திரும்ப வேண்டியதுதான். ஊற்றை நெருங்கிய சாமளாவின் காலில் ஏதோ சுருக்கென்று தைத்தது. வலி பொறுக்க முடியாமல் 'ஆ! அம்மா', என்றலறியவாறு குடத்தைப் போட்டுவிட்டு காலைப் பிடித்துக்கொண்டே கீழே உட்கார்ந்தாள்.

பின்னால் 'யாரது', என்ன!' என்றோர் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். ஒரு வாலிபன் வந்து கொண்டிருந்தான். அருகில் வந்து மீண்டும் என்னவென்றான்.

காலில் என்னவோ......... என்று தடுமாறினாள் சியாமளா. அவன் நெருப்புக் குச்சியை எடுத்துக் கொளுத்திப் பார்த்தான். ஒரு கருந் தேள் தன் கொடுக்கைத் தூக்கிக்கொண்டு ஓடியது. சட்டென்று அதனை அடித்துவிட்டு, உடனே தன் கைக் குட்

---

அணல் மூச்சு—தொடர்ச்சி

யாட்சி மாண்டு குடியாட்சி ஓங்கவும் 8 மணி நேர வேலை, 8 மணி நேர களியாட்டம், 8 மணி நேர ஓய்வு என ஒரு நாளை மூன்று கூறாக்கி மக்கள் மனதைக் களிக்கச்செய்த மாபெரும் தலைவர்களின் சிந்தனைக்கும் சேவைக்கும் தலைவணங்க உலகப்பாட்டாளிகள் ஒன்றுபட்டுவிட்ட அணல் முச்சே மேதின விழாவாக மலர்ந்ததாகும்.

"வாழ்கமக்கள் தொழிலரசு! வீழ்கமன்னன் நிழலரசு!" என்ற சுலோகத்தை வாண்முட்ட எழுப்பி மன்னன் சிறறத்திற்கிரையாய் சிதைந்த உடலோடு அவர்கள் குடும்பங்கள் நிந்தனைக்குள்ளான நிலையை எண்ணி "விந்தையிலும் விந்தை உழைப்பாளிகளை உதவாக்கறைகள் என்றெண்ணிய வறண்ட நெஞ்சினர் கூற்று" எனக் கொக்கரித்து அவர்கள் கொடிய செயலுக்குக் காட்டியக் கடைசிக் கொடியான அபாயச் செங்கொடியின்கீழ் அனைவரும், பால், நிறம், இனம், நாடு, மொழி,கலையாகியபேதமற்று கைகோர்த்து விட்ட அணல் மூச்சு எரிமலையானதை ஏடுகள் ஏந்தியவண்ணமிருக்கின்றன.

தனியுடைமை மாறினால்,மதம், கலை,ஒழுக்கம முதலியன அழிந்துபடும் என்று ஓலமிட்ட முதலாளிகளை அதட்டி நிறுத்தி, எந்த மதத்தை எந்தக் கலையை, எந்த ஒழுக்க நியதியை புதிய சமுகம் அழிக்கும்? மனிதனுக்கு அபினியாக விளங்கும் மதத்தையா? உழைக்காமல் ஓய்வு பெறும் இனத்தின் கலையையா? கலையின் பெயரால் இழைக்கப்படும் அநீதியையா? ஆம் என்றால் ஒழியட்டும் அவ்வளவும் என்று ஓங்காரமிட்டுத்தொழில் உலகம் புருவத்தைநெரித்து விட்ட முச்சே அணல் முச்சாகும்.

ஆயுத பலத்துடன் குடியரசைப் பிரகடனப் படுத்த முடிவு செய்த "ராஸ்பேல்"இரண்டுமணி நேரத்திற்குள் ஜனங்களின் விருப்பத்தை பூர்த்தி செய்யாவிடில் இரண்டுலட்சம்பேர்களோடு தான் திரும்பிவர நேருமென்ற எச்சரிக்கையை அரசாங்கத்திற்கறிவித்தவுடன், அந்த "ராஸ்பேல்" கொடுத்த காலவரையறைக்குச் சற்று முன்பே அதாவது புரட்சியில் உயிர் நீத்தவர்களின் உடலங்கள் விறைத்துப்போகா முன்னம், தொழிலாளிகள் நிராயுதபாணிகளாகா முன்னம் "முடியரசு வாழ்க! சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஓங்குக!"என்ற பேரொலி பாரிஸ் முழுதும் முழக்கின நாள் மே தினமாகும். அந்த அணல் முச்சு எரிமலையாய் ஏகாதிபத்திய நோக்கங் கொண்டு எதேச்சாதிகாரம் கொண்டு நடக்கும் ஆட்சி எதுவாயினும் அழிந்தேதீரும் என்ற எச்சரிக்கையோடு இதை முடிக்கின்றோம்.

★

டையை எடுத்து, கடித்த இடத்திற்குமேல் கட்டு போட்டுவிட்டு, கடித்தவிடத்தில் பேனாக்கத்தியினால் கீறி, குருதி வெளிப்படுமாறு செய்தான், பின் வத்திக் குச்சியைக் கிழித்து அந்த இடத்தில் சூடு காட்டினான். குளிர்ந்த ஊற்று நீரில் சற்று நேரம் காலை வைத்திருக்கச் சொன்னான். ஒரு வைத்தியர் என்ன சிகிச்சை செய்வாரோ அவ்வளவும் அந்த சற்றுநேரத்தில் அவனும் செய்தான்.

ஆனால் வலிதான் நின்றபாடில்லை. என்? மருந்திடாது.............. என்னதான் செய்து என்ன பயன்? ஆனால் கட்டுப் போட்டதால் விஷமும் ஏறவில்லை. வலியும் கொஞ்சம் தணிந்திருந்தது. இதற்குள் மனமும் வேறு விஷயங்களில் திரும்பி விட்டது.

'யார் இவன்' என்றும், இன்னும் அவனைப்பற்றிப் பலவும் சிந்திக்கத் தொடங்கிவிட்டது சாமளாவின் மனம்!

'வீடு வெகு தூரமோ.........' இது அவனது முதற் கேள்வி. சாமளாவின் சிந்தனை சிதறியது 'இல்லை. அருகில்தான். போய்விடலாம் என்று சொல்லி எழுந்தாள். அவன் குடத்தையும், பையையும் தூக்கிக்கொண்டு நடந்தான். அவன் நொண்டிக் கொண்டே நடந்தாள்.

'நீ யார்? உன் பெயரென்ன?' இது அவனது இரண்டாம் கேள்வி.

"நான் இவ்வூர் கணக்கப் பிள்ளை மகள். மூத்த தாரப் பெண். இளையதாரமாக என் சிற்றன்னையாயிருக்கிறாள். அவளுக்கும் ஒரு பெண் இருக்கிறது. நான்......... "மேலே ஏதோ சொல்லப் போனவள் இரா விளக்குக் கம்பத்தின் அடியில் வந்தவுடன் அவனை ஏறிட்டு நோக்கினாள். அவனது கூரிய மூக்கும் ஊடுருவிப் பார்க்கும் கண்களும் அந்தப் பார் 'வையை மறைக்கக் கண்ணாடியும், சுருட்டை மயிரும் ஒப்பன் ஷர்ட்டும்' உல்லாசமான 'பைஜாமாவும்' அவள் மனக் கண்ணை விட்டகலவில்லை. ஒரு தரம் பார்த்தவள் மீண்டும் அவனைப் பார்க்க வேண்டுமென்று விரும்பினாலும் அச்சம்அவளைத் தடுத்துவிட்டது.

"ஐயா! எங்கள் வீடு இதோ வந்துவிட்டது. நான் இவ்வளவு தாமதித்து வருவதற்கும், அதுவும் உம்முடன் எனணைக் கண்டால் அப்படியே என்னை வெட்டி அடுப்பிலே வைத்து விடுவாள் என் சிற்றன்னை. ஆகவே தயவுசெய்து இத்துடன் நின்று விடுங்கள். உங்கள் உதவிக்குப் பெரிதும் நன்றி" என்றாள். அவன் குடத்தை அவளிடம் தந்து திரும்பினான். அவன் போவதைக் கண்ட அவள் ஏதோ சொல்ல வாயெடுத்தாள், அவன் திரும்பி நின்றான். அவனது தோற்றம் உள்ளத்தை உலுக்கியது.

'என்ன என்றாள் அவன்.

"தங்களைப் பற்றிக் கொஞ்சம்......என்றாள்".

"நான் பக்கத்தூர் என் பெயர் சேகர். 'பொன் மலையில் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறேன். அப்பா ஏதோ அவசரமாக வரச் சொல்லி கடிதம் எழுதியிருந்தார். வழியில் 'ஆ' என்ற சப்தம் கேட்கவே ஓடி வந்தேன். உன்னைச் சந்தித்தேன்" என்றான்.

'நான் வருகிறேன்' என்றான் அவன். அவளும் அப்படியே கூறி நழுவினாள்.

நொண்டிக்கொண்டு வந்த கமலாவைக் கண்ட அவளின் சிற்றன்னை நொண்டுவதன் காரணத்தை உசாவினாள், ஊற்றடியில் தன்னை ஓர் தேள் கொட்டினதையும், அப்போது அங்கு ஓர் பெரிய மனிதர் வந்து உதவி செய்ததாயும் கூறினாள்.

சம்மந்தி வீட்டார் வரும் வேளையில் இப்படியாகி விட்டதே என்று வசை பாடினாள் சிற்றன்னை. கூடவே தாளம் போட்டாள் தங்கை தன வட்சுமி.

என் வசை பாடினாள் தெரியுமா?

வரும் மாப்பிள்ளை ஒரு பணக்காரக் கிழவன்; அவன் தன் கிழத் தன்மையை இளமையாக்கிக் கொள்ள கிழத்திஒருவளைதேடினான். அதற்குப் பணம் 'சகா' சேர்த்தது. பணமும் நகையும் 'பரிசம்' போட்டான் கிழவன். அதைக் காதலித்தாள் சிற்றன்னை. அந்தப் பணத்தைக்கொண்டு தன் மகளின் மணத்தை சீரும் சிறப்புமாக நடத்தலாமென்பது அவள் திட்டம். அப்பாவும் இதற்கி இணங்கிவிட்டார். அவருக்கு என்ன தெரியும். இளைய தாரத்தின் மூலம் தெரியும், அவள் வார்த்தை காதில் விழுவது தெரியும். தலையாட்டத் தெரியும் இவ்வளவு தான்.

பள்ளம், படுகுழியில் விழப்போகிறவள் சாமளா தானே!

பணத்திற்காக பாழுங் கிணற்றில் தங்கள் மக்களைத் தள்ளும் தாய் தந்தையர் வ ா ழு ம் ந ா ட்டில் பிறந்த சாமளா மட்டும் என்ன செய்ய முடியும்? விதியை நொந்துக்கொண்டு சதிக்காளானாள் சாமளா.

சம்மந்தி வீட்டார் வந்தனர். சாமளாவும் கூப்பிடப்பட்டாள். தேள் கடி, மறு நாளும் தீராததாலே சாமளா நொண்டிக்கொண்டே வந்தாள்.

'என்னையா? இது! நொண்டிப் பெண்ணாயிருக்குது.' என்றார் வந்தமாப்பிள்ளை.

ஆ......என்று ஆரம்பித்தார் சாமளாவின் தந்தை. ஆனால் வந்த கிழ மாப்பிள்ளை ஓடியே போய்விட்டார்.

'கிழவனுக்கு கிளிபோல் பெண்.' எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். ஆனால் வந்த மாப்பிள்ளைக் கிழவர் ஓடிப்போனதுபற்றி ஆச்சரிப்படப இடமேயில்லை.

அவர் ஓடிப் போகத் தயாராகத்தான் வந்தார் "நொண்டிக் குதிரைக்கு சறுக்கினது சாக்கு," என்று சாமளா நொண்டி வந்ததைப் பார்த்ததும் அதைச் சொல்லி ஓட்டமெடுத்தார். 'என் தெரியுமா? அவர்

பணமெல்வாம் 'திவால்'. அவர் இதுகாறும் அனுபவித்து வந்தது தன் பங்காளி ஒருவரின் சொத்து. இதை வைத்துக்கொண்டுதான் பூச்செண்டு ஆட நினைத்தார்.

ஆனால் பங்காளிப் பய 'கோர்ட்டுக்கு' இழுத்துக் கொடுத்தான் 'கல்தா' அப்புறம் 'மாப்பிள்ளை' மாப்பிள்ளைதான். பரிசப் பணம் எங்கே? நகை எங்கே? அதுதான் ஓட்டத்துக்குக் காரணம்.

சாமளாவுக்கோ ஒரு தேளாவது தன்னை அந்தக் கிழ மாப்பிள்ளையிடமிருந்து மீட்டதே என்பதில் மிகவும் மகிழ்ச்சி. சிற்றன்னைக்கோ வர வேண்டிய நகையும் பணமும் வராமல் போய்விட்டதே என்ற ஆத்திரம். அந்த ஆத்திரத்தைத்தான் சாமளாவிடம் காட்டி, அன்று சோறு இடாமலே விட்டுவிட்டாள்.

விடுதலைப் பெற்ற சாமளாவுக்கோ பசி வேட்கையில்லை. சில விசித்திர சம்பவங்கள் வாழ்க்கையில் எந்தவித மாற்றங்களை உண்டாக்கி வைக்கிறது என்ற வேடிக்கை சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

மறுநாள் ஒரே தடபுடல். தனலெட்சுமிக்கு அன்று 'ஷோ' காட்சி. அவளுடைய மாப்பிள்ளை வருகிறார். மாப்பிள்ளை பெரிய வேலையிலிருக்கிறார். மாப்பிள்ளையின் தந்தையோ பெரிய தனவந்தர்.

இதைச் சொல்லிச்சொல்லிசிற்றன்னை சாமளாவை 'அதிர்ஷ்டக் கட்டை' என்று திட்டினாள். ஆனால் யாரும் கிழவனை மணப்பது அதிர்ஷ்டம என்று சொல்லமாட்டார்கள்.

சிற்றன்னைக்கு மருமகனாகப் போகும் மாப்பிள்ளை வந்தார். உள்ளேயிருந்த சாமளா ஒருவேளை தனக்கு வந்தவரைப்போல் இந்த மாப்பிள்ளையும் இருக்கிறாரோ என்ற எண்ணத்துடன் எட்டிப் பார்த்தாள் பலகணி வழியாக.

'சுருட்டை மயிர், கூரிய மூக்கு, கண்ணாடி......... ஊற்றடியில் கண்ட அதே வாலிபன்.

'ஆ! நீங்களா' என்று அலறிவிட்டாள் சாமளா.

சேகரும் திரும்பிப் பார்த்தான். 'யாரது' நீயா? என்று அவனும் எதிரொலி செய்தான். கூடியிருந்தவர் திகைத்தனர். சேகரின் தந்தை தன் மகனை நோக்கினார். சேகர் எல்லா விபரங்களையும் எடுத்துச் சொன்னான். தனக்கு அவள்தான் வேண்டுமென்று கூறினான்.

சமயம் பார்த்து அவள் நொண்டியாச்சே என்றாள் சிற்றன்னை.

ஆம்! ஆம்! நேற்று முதல் நொண்டியாகயிருக்கலாம் என்றான் சேகர். சேகரின் தந்தை ஒன்றுமே பேசாது நிச்சய தாம்பூலத்தை சாமளாவின் தந்தை கையில் வைத்தார். அவர் தன் இளைய மனைவியைப் பார்த்தார். அவள், நாங்கள் அவளுக்கொன்றும் நகை போட முடியாதென்றாள். 'பரவாயில்லை, எங்

## பொங்கல் வாழ்த்து

★

(தோ. ப. வேலாயுதசாமி, சலகண்டபுரம்)

பொங்கற் புதுநாள் பூத்திட கண்டோம்
கங்குல் விடிந்தது காரிருள் அகன்றது
தங்கிய செல்வத் தண்டமிழ் நாட்டில்
எங்குப் செழுமை இனிமை விழிந்தது
மக்களின் முகமும் மனமும் மலர்ந்தன
துக்கமும் வறுமையும் தொலைந்து மறைந்தன
நெல்லும் கரும்பும் நிறைய விளைந்தன
வல்லுநர் உழவர் மனமது துளிர்ந்தது
புத்துடை புடுத்திப் பொங்க லருந்திச்
சித்தம் களித்துத் தென்பு கொள் வோமே
அன்பும் கருணையும் அறிவும் பொங்கிட
இன்பமுத் தமிழின் எழிலும் பொங்கிட
வீரமும் மாண்பும் விளங்கிடும் கலையும்
பாரெலாம் புகழ்ப் பண்பொடு பொங்கிட
மங்கள மான வாழ்வில் மகிழ்வோம்
பொங்கலோ பொங்கல் பொங்கலோ பொங்கல்!

ரப்பர் ஸ்டாம்ப்

BABOO NARAYAN & CO.,
RUBBER STAMP MAKERS
CHINTADRIPET, MADRAS.

நல்ல முறையில் குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்

களிடம் நிறைய யிருக்கிறது' என்றார் சேகரின் தந்தை.

'அழகுக் கழகு செய்யும் அழகுக் கலை அவள்.' 'அவளுக்கேன் நகை' என்றான். பின் தடைச் சக்திகள் முறிந்து வீழ்ந்தன. திருமணம் நடந்தது.

தனிமையில் சாமளாவைச்சந்தித்த சேகர்,சாமளா. தேள் கடிஇப்போது எப்படியிருக்கிறது? தேள் கடியுடன் விறுவிறுப்பாக ஆரம்பித்த நம் நட்பு சுறுசுறுப்பாகவே முடிந்துவிட்டது என்று கூறினாள், சாமளா ஒன்றும் தோன்றாதவளாய் அவனின் கண்களைத் தன் இரு கையாலும் மூடி மகிழ்வித்தாள்.

சாமளாவின் உதட்டில் புன்சிரிப்பு தவழ்ந்தது. கண் சேகரின் காலை நோக்கினாலும் கடைக் கண்ணால் கணவனைப் பார்க்கத் தவறவில்லை. இனிப் பேச்சுத் தொடங்கும். ஆகவே அவர்களைப் பேச விடுத்து நாம் இளி விலகிக் கொள்வதுதான் நல்லது.

★

# தூரத்துப் பச்சை

(புத்தனேரி ரா. வெங்கடாசலம்)

“சேகர்! என்ன காரியமப்பா செய்யத் துணிந்து விட்டாய்? யாரோ ஒரு அகதி! பிழைப்புக்காக வந்தவள்! அன்றன்றைய வாழ்வுக்குப் பல்லிளித்துப் பணம் பெருபவள்! அவளுக்கு நீ அடிமை யாவதா? சிந்தித்துப் பார்! உற்றமும் சுற்றமும் விட்டு, உடமைகளை இழந்து, ஊரை மறந்து, உற்ற பல இன்னல்களால் மனமொடிந்து வாழ்க்கையே கசந்து போகும் நிலைக்கு வந்த அகதி ஒருவளிடம் அன்பு சுரக்குமா? அவளை நம்பினால் நீ நிச்சயம் ஏமாந்து போவாய்!”

“மணி! நீ அறிய மாட்டாய்! அவள் சேற்றில் முளைத்த செந்தாமரையப்பா! இன்னல்களால் எல்லோருமே மனமிடிந்தவர்களாகவும், வாழ்க்கையை வெறுப்பவர்களாகவும், ஆகி விடுவார்கள் என்ற நியதியா? நீ தப்புக் கணக்கு போடுகிறாய் மணி! அவள் அப்பேற்பட்ட கோழையல்ல! துன்பத்தில் உழலுபவளானால் துடித்திடமாட்டாளா? என்னைக் கண்டதும் ஆதவனைக் கண்ட அல்லி மலரென அரும்பிய முல்லைச் சிரிப்புடன் துள்ளிடும் புள்ளிமானப்பா, அவள்! அகதி என்றால் அற்பமானவள் என்று எண்ணுகிறாயா? ‘கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே’ என்ற முதுமொழி மறந்தாயா? என்னென்னவோ சொல்லி என் மனதைக் கலைத்து விட நினையாதே! உன் உபதேசம் கடலில் கரைத்த காயமாகத் தான் இருக்கும். விஷயத்தை முற்றிலும் அறிந்து கொள்ளாமல் என் தந்தையின் தூதுவனாக வந்து என் முயற்சியைத் தகர்ப்பது சரியல்ல! உன்னைப் போலுள்ள சிந்தனையாளன் அவசர முடிவுக்கு வருவது அழகல்ல! நான் சொல்வதையும் கேள்! பின்பு நீ நிச்சயம் என் முடிவை ஏற்றுக் கொள்வாய்! அகதிக்கு வாழ்வளித்த அண்ணல் என்று போற்றுவாய்!”

“இது என்ன பேச்சு சேகர்? அகதிக்கு வாழ்வளிக்க இது தான் வழியா? நீ ஒருவளை மணந்து அவளுக்கு வாழ்வளித்துவிட்டால் அகதிகள் கவலை தீர்ந்து விட்டதாக ஆகி விடுமா? நம் பைந்தமிழ் நாட்டிலே பஞ்சத்தாலும், பட்டினியாலும் வாடி வதங்கும் எண்ணற்ற அகதிகள் உன் கருணைக் கண்களுக்குப் படவில்லையா? அவர்களுக்காக நீ என்ன செய்தாய்? எங்கோ வாழ்ந்தவர்கள் இன்று உன் நாட்டில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டவர்கள், அவர்களிடம் உனக்கு அன்பு சுரந்தது என்றால் அது கருணை உள்ளத்தால் அல்ல! கன்னியின் காமக் கண்களின் விஷம்! காசுக்காகக் கற்பைப் பலியிடத் துணிந்து விட்ட காரிகைகள் அகதிகளில் பலர் உள்ளனர் என்பதைக் கண் கூடாகக் கண்டிருந்தும் நீ உன் சிந்தையைப் பறிகொடுப்பதனால்.........”

“அவளிடம் ஒரு தனி அன்பும் கவர்ச்சியும் இருக்கிறது என்று தெரியவில்லையா? மணி! உன் நிலையில்தான் நானும் இருந்தேன். சில நாட்களுக்கு முன் என் அனுபவம் உனக்கு ஏற்பட்டால், உன் தவறான எண்ணம் மாறிவிடும்”.

“எனக்கு உன் அனுபவமும் ஏற்பட வேண்டாம்! அகதிகளின் ஆதரவும் வேண்டாம்! உன்னோடவே நிற்கட்டும்!”

“கேள்! மணி! எங்கள் சந்திப்பு ஏற்பட்ட விதமே ஒரு அலாதி தான்! அன்று நான் மாயாண்டி பார்பர் ஷாப்பில் தலை வெட்டுவதற்காக உட்கார்ந்திருந்தேன். அவள் உள்ளே வந்தாள்! அன்றைய தினசரியில் கவனத்தைச் செலுத்தியிருந்த நான் நிமிர்ந்த போது எதிரிலிருந்த கண்ணாடியில் அவள் உருவம் தெரிந்தது. உனக்குதான் தெரியுமே! மாயாண்டி கடையில் நாலுபக்கமும் சுவரில் கண்ணாடி பதிக்கப்பட்டிருப்பது! கண்ணாடிக்குள் அடுக்கடுக்காக அவள் உருவங்கள் தெரிந்தன. பார்பர் ஷாப்பில் பெண் வருவதா என்ற ஆச்சரியத்தில் அவளை ஏறிட்டுப் பார்த்தேன். இடுப்பில் பாவாடையும் மேலே நீளமான சிற்றாடையும் அணிந்திருந்தாள். நல்ல சிவந்த மேனி! அழகிய சுருண்ட கருங் கூந்தலை இரு சடைகளாகப் பின்னி, முன்பக்கமாகத் தொங்கவிட்டிருந்தாள். அழகும் இளமையும் அரும்பி மலர்ந்த பருவம்! அவள் தோற்றத்திலிருந்து ஒரு பெரிய இடத்துப் பெண் என்பது நன்கு விளங்கிற்று. ஆனால் அவல நிலையை அடைந்து விட்ட அகதி என்பது இவள் மாயாண்டியிடம் இரண்டணாக் காசுக்காக மன்றாடியதில் புலனாயிற்று! அவல நிலை கான வருந்தினேன். மாயண்டி தன் கவலையைச் சொல்லி மறுத்துப் பார்த்தான். ஆனால் அவள் விடுவதாக இல்லை. வேறு வழியின்றி அவன் இரண்டணாவைக் கொடுத்தான். பின் அவள் பார்வை என் மேல் விழுந்தது.

“சுவாமிஜி! எக் ரூப்யா தீஜீயே!” என்று கேட்டுக்கொண்டே என்னருகே வந்தாள். அவள் ஆளை எடை போடவும் கற்றிருந்தால் போலும்! மாயாண்டியின் மதிப்பு இரண்டணா! என் மதிப்பு ஒரு ரூபாய்! நானோ மாயாண்டிக்குக் கொடுக்க எட்டணா வைத்திருந்தேன். அவளுக்கு எப்படிக் கொடுக்க முடியும். ஆசை இருக்கிறது தானம் செய்ய. ஆனால்,

வழி? எட்டணாவை அவளிடம் கொடுத்து விட்டுப் பின்னால் மாயாண்டிக்குக் கொடுத்து விட்டால் போகிறது என்று நினைத்தேன். அதற்குள் நான் மௌனத்தில் இருப்பதைக் கண்ட அவள் அடுத்தபடியில் காலை வைத்து விட்டாள்! அதாவது என் நாடியைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுவதில் தான்! என் உடல் சிலிர்த்தது. அவள் கரம் பட்டவுடன் அவள் கைகளை விடுவித்தேன். அவள்என்சட்டைப் பையில் கையை விட்டு விட்டாள். நான் பணம் கொடுப்பதாகச் சொல்லிக் கையை எடுக்கச் சொன்னேன். அவள் மறுத்தாள். வலுக்கட்டாயத்திலே அவளைத் தள்ளினேன். என் கை அகஸ்மாத்தாக அவளுடைய மார்பிலே பட்டுவிட்டது. தப்பிதம் செய்து விட்டேனே என்ற திகிலுடன் அவள் முகத்தைப் பார்த்தேன். அவள் சிரித்தாள்! அதில் தான் என்ன குழைவு! நானும் சிரித்தேன் அவள்முகப் பொலிவு என்னைக் கவர்ந்தது. அவளுடையகூரியபார்வை எனள்ளத்தே உணர்ச்சி அலைகளைத் தட்டிஎழுப்பியது ஆனந்தமாக அவள் எழிலை அள்ளிப் பருகிக் கொண்டிருந்தேன். திடீரென அவளை இழுத்துவெளியே தள்ளி, "என்ன சாமி! இந்தக்கழுதைங்களுக்கெல்லாம் இவ்வளவு இடம் கொடுக்கப்படாதுங்க! சனியன்!" என்று எரிந்து விழுந்தான். மாயாண்டி. அவன் மேல் எனக்குக் கோபம் கோபமாக வந்தது. அதற்காக அவனைத் திட்டினேனானல் நம்மைச் சந்தேகப்பட்டுவிடக் கூடாதே என்று பேசாமலிருந்தேன். மேலும் தலை வெட்டியகூலியை உடனே கேட்டு விடக்கூடாதல்லவா? அவளே பணம் பெற்றுக்கொள்ளாமல் போய் விட்டாள்! பணத்தை எப்படியாவது அவளிடம் சேர்த்து விட என மனம் துடித்தது. எழுந்து வெளியே வந்து பார்த்தேன். அவள் கடை வாசலில் இன்னும் சிலருடன் நின்றுகொண்டிருந்தாள். அவளைக் கூப்பிட்டு எட்டணாவைக் கொடுத்தேன. அன்பு ததும்பிய கண்களால் என்னைப்பார்த்து வணக்கம் செலுத்தினாள். அவள் தங்கியிருக்கும் இடத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு மீண்டும்சந்திப்பதாகத் தெரிவித்தேன். அவள் முகம் ஆனந்தத்தால் மலர்ந்தது. என் வரவை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகச் சொல்லி எகினாள். என உள்ளமும் அவளுடன் சென்று விட்டது!

மாலையில் அவள் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றேன். அவளைக் காண முடியவில்லை. தினசரி அலைந்தேன் பயனில்லை! எங்கிய மனத்தினனானேன். உள்ளே போய்ப் பார்ப்பதோ அல்லது அவளைப் பற்றிக் கேட்பதோ வீண் சந்தேகங்களுக்கு இடமாகும் என்றெண்ணிப் பேசாமலிருக்கும்படி ஆயிற்று.

நாட்கள் சில சென்றன. மறுபடி அவளைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அகதிகளின் சென்ற கால அனுபவங்களை மறக்கச் செய்து ஊராருடன் ஒன்றி வாழவும் நம் மொழி பயிலவும் வழிவகை செய்யச் சேவை புரியச் சாரணர்களும் சமூகத் தொண்டர்களும் தேவை என்று ஜில்லா அதிகாரியிடமிருந்து சுற்றறிக்கை எல்லா அலுவலகங்களுக்கும் வந்தது. என் அலுவலகத்திலிருந்துயாராவதுபோக முன் வருகிறீர்களா என்று கேட்டபோது நான் மகிழ்ச்சியுடன் முன் வந்தேன்.

முதல் நாள் தொண்டர்களை அழைத்துச் சென்று அவர்களை அறிமுகம் செய்து வைத்தார்கள். நான் அவளைக் கண்டேன். ஆனால் அத்தனை பேர் முன்னிலையில் பேசுவது அழகல்லஎன எண்ணி ஆசையை அடக்கிக்கொண்டேன். அவள் என்னைக் கண்டதும் கை குவித்தாள். என்னை மீண்டும் கண்டதில் அவளுக்கு அளவுகடந்த மகிழ்ச்சி. நான் அவளுடைய குடும்ப சேவையை ஏற்றுக்கொண்டேன். தினமும் மாலையில் அவர்களை ஊர் முழுவதும் சுற்றிக் காட்டுவேன். திரும்பி வந்ததும் தமிழ் சொல்லிக் கொடுப்பேன். வெகு சீக்கிரத்தில் நான் அவர்கள் குடும்பத்தில் ஒருவனாக மதிக்கப்பட்டேன். ஊர் சுற்றும் போதெல்லாம் அவள் என்னை நெருங்கியே வருவாள். அவளை மகிழ்விக்க அவள் விரும்பியதையெல்லாம் வாங்கிக் கொடுப்பேன். நெருங்கியபழக்கம் நேசத்தை வளர்த்தது. இடையிடையே இவள் பெற்றோரிடம் சொல்லிவிட்டு இவளை மாத்திரம் சினிமாக்களுக்கு அழைத்துச் செல்வேன். அன்பை வளர்க்க ஏற்ற இடமல்லவா இவை? வளர்ப்பானேன்? இருவருள்ளமும் ஒன்றாய் இணைந்தன! எண்ணங்களைப் பரிமாறிக்கொண்டோம். எத்தனை நாளைக்குத்தான் மறைமுகமாக கூடி மகிழ்வது? மணம் செய்யத் தீர்மானித்துவிட்டேன். தந்தையிடம் நேர்முகமாகத்தான் கேட்டேன். மறுக்கிறார்! பழமையை வெறுப்பவர் பதறுகிறார்! இப்போது சொல் மணி! என் முடிவு தவறா?"

"சேகர்! இவள் உள்ளன்பினால்தான் உன்னை நேசிக்கிறாள் என்று நீ நம்புகிறாயா? இல்லவே இல்லை! நீ கொடுத்த பணத்துக்கும பொருளுக்கும் காட்டப்படும் சாகஸமப்பா! உன் முன்னாலேயே மாயாண்டியிடம் சரஸமாடி இரண்டணாப் பெற்றவள் உன்னைப்போல் எத்தனை எத்தனை மைனர்களிடம் இந்த விளையாட்டு விளையாடியிருப்பாள் தெரியுமா? இருக்கட்டும். உன்னை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகச் சொல்லிச் சென்றவள் நீ சென்றபோது ஏன் காட்சி அளிக்கவில்லை? நீ என்னதான் சொல்லு அவளை நம்புவது சரியல்ல! காதல் போதையிலே கண்ணிழந்து, தந்தையின் விரோதத்தைப் பெற்றுக் கொள்வது நல்லதல்ல! என்றேனும் ஒரு நாள் அவள் உன்னை எமாற்றத்தான் போகிறாள்! காலம் உன் செய்கை தவறு என்பதைக் காட்டும்! ஆர அமர யோசித்து முடிவு செய்! அவசரம் அழிவுக்கு வித்து! நான் வருகிறேன்."

மணி சொன்னவை, சேகருக்கு வேம்பாக இருந்தது. பொறாமையால் பேசுகிறான் என்றே கருதினான். என்றாலும், கொஞ்சம் மணநாளைத் தள்ளிப் போட முடிவு செய்தான். அதை அவளுக்குத் தெரிவிக்கும் பொருட்டு மறுநாள் காலையில் அவள் இருப்பிடம் சென்றான். அவளைக் காணவில்லை! விசாரித்ததில் எங்கோ வெளியில் சென்றிருப்பதாகத்

தெரிந்தது. வரும்வரை காத்திருப்போம் என்று இருந்தான். அரை மணி நேரத்திற்குப் பின் அவள் குரல் வெளியே கேட்டது. எழுந்திருந்து வெளியே வந்தான். அவன் தலை சுற்றியது! அவள் யாரோ ஒருவருடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள். கூர்ந்து கவனித்தான். இரவு இரண்டாவது காட்சிக்குச் சினிமாவுக்குப் போகத் திட்டமிட்டனர் என்பது தெரிந்தது. கோபத்தால் அவன் உள்ளம் கொதித்தது. "கள்ளி!" என்று அவன் வாய் முணுமுணுத்தது, ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன்போல் வேறுவழியாக வீடு சேர்ந்தான்.

மாலையில் வழக்கம்போல் அவன் வரவில்லை. அவன் முடிவெல்லாம் இரண்டாவது ஆட்டத்துக்கு சினிமா சென்று அவன் நடவடிக்கைகளைக் கவனிப்பது என்பதுதான்.

முடிவுப்படி சென்றான். 'அவனும்' அவளும் இருந்த இடத்திற்குப் பின்னால்போய் அவர்கள் அறியாமல் உட்கார்ந்தான். அவன் கவனம் பூராவும் படத்திலில்லை! அவர்கள் பேச்சில்தான்! அவன் அறிந்துகொண்ட விஷயங்கள் அவனை வருத்தின. தினமும் மாலையிலே தன்னுடன் சரஸம். காலையிலே அந்தக் காலியுடன் களியாட்டம்! விபசாரி! ஏமாந்தவர்களை இளித்த வாயர்களாக்கும் இடும்பி! நல்ல வேளை, மணி நம்மை எச்சரித்தான். அவனால்தானே வழக்கத்துக்கு மாறாகக் காலையில் சென்று கள்ளியின் கயமைத்தனத்தை அறிய முடிந்தது என்று நினைத்ததும் மணிக்கு நன்றி செலுத்தினான். தன்னைப் போலவே மற்றவனும் ஏமாந்துவிட்டதை நினைத்ததும் அவனை எச்சரிக்கை செய்வது தன் கடமை என எண்ணினான்.

தனியாக அவனை அழைத்துவெளியேவிஷயங்களைச்சொன்னான். இவன் நம்பவில்லை என்று தெரிந்ததும் அவன் நம்புவதற்காக அவனை வெளியேநிறுத்தி விட்டு நேரே அவளிடம் சென்றான். சேகரைக் கண்ட இவள் முதலில் திகைத்தாலும் பின்னால் சந்தோஷமாக வாவேற்றுப் பக்கத்தில் உட்கார வைத்தாள். வெளியிலிருந்து பார்த்த மற்றவன் கோபம் பொங்க உள்ளே வந்து அவளை ஏதேதோ சொல்லித் திட்டி இரண்டு மூன்று அடிகளும் வைத்தவிட்டு ஓடிவிட்டான். அவள் கூக்குரலிட்டாள். தன் நிலை மோசமாகிவிடக்கூடாதென்று சேகரும் நழுவிவிட்டான். தியேட்டரில் விளக்குகள் போடப்பட்டன. ஆனால், அவளால் யார் தன்னை அடித்தது என்று சொல்லமுடியவில்லை. விலாசம் தெரிந்தால்தானே?

விடிந்ததும் விடியாததுமாக சேகர் மணி வீடு தேடி வந்தான். நடந்தவைகளைக் கூறி ஆபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றியதற்காகப் பல வழிகளில் நன்றியைச் செலுத்தினான். தந்தையிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கோரினான். அகதிகளுக்குச் சேவை செய்ய இப்போது அவன் தயாராக இல்லை. அத்தனை வெறுப்பு அவர்சள் மேல் அவனுக்கு.

★

# தமிழர் திருநாள்

(கல்லக்குறிச்சி. குமார தணிகாசலம்)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம்

தொழுதுண்டு பின்செல்பவர் என்றசொல்
பழுதில்லை, பாட்டாளி மக்கட் படும்பாட்டாலே,

அழுக்கின்றி அங்கியின் மேல் அங்கவஸ்திரம்
தரித்து,
பழுக்கின்றார் உடல் பளபளவெனப் பகட்டுடன்

பார்முழுதும் ஏர்முனையிலே யென்று
பாட்டாளி மக்கள் கூட்டாளி யறிஞன்

அன்று பகர்ந்த சொல்லை யார் கேட்டார்!
பட்டினி பசி பஞ்சம் வந்திடவே

எட்டினைப் புரட்டுகின்றார் எது செய்யலாமென
எண்ணம் எடுப்பு நடப்பு யெல்லாம் மாற்றி

திண்ணம் செய்திட நல்லன நண்ணி
நல்லறிஞர் சொற்கேட்டு அல்லாதன நீக்கிச்

சொல்லேருழவர் துணை கொண்டு நாட்டில்
நல்லேருழவர் நற்றொண்டை நாளும்

சீருஞ்சிறப்புடன் சிறக்கச் செய்து
யாவரும் நலங்காண யாவரும் சமமென்
றெண்ணி!

பாட்டாளி மக்களின் பட்டினி பஞ்சம் போக்க
கூட்டுப்பண்ணை முறையினை நாட்டினில்
ஆக்கினால்,

நலங்கான நேரும் நல்லன வந்துறும்
அவலம் ஒழியும் அன்பு சிறக்கு மின்பமாக

அதனை யுணர்த்தவே ஆர்த்தெழும் தமிழ்த்
திருநாள்
பார்த்திடுங்க என்று பாட்டாளிகளின் பலனை

கண்டும் கேட்டும் உண்டு முயிர்த்தும்
விண்டிடாது ஏன் பண்டு போலுள்ளீர்?

பழமை மோகமோ? பயங் கொள்ளித் தனமோ
வாழ்க்கை வாழ்வதற்கே வழிவகுத் திடுங்கள்

இழுக்கை நீக்கி! இத்திரு நாளினிலே!

# மாவீரர் வேலாயுதம்

★

(ஆ. இராமசாமி, ஜெயங்கோண்டம்)

உலகத்தின் பல பாகங்களிலும் எத்தனையோ பெரியார்கள் - அறிஞர்கள் - ஆராய்ச்சிக்காரர்கள் தோன்றினர்; வாழ்ந்தனர்; மறைந்தனர். அவர்களில் சில தியாகச் செம்மல்களின் பெயர்கள் தான் உலகில் நிலவி வருகிறது. அதற்குக் காரணம் அவர்கள் செய்த தியாகம்—தன்னலமற்ற சேவை—பரந்தமனப்பான்மை—அஞ்சாதநெஞ்சம்—மக்கள் சமுதாயத்தை வாழ வைக்க வரையறுத்த உன்னத இலட்சியங்களுமாகும். அவர்கள் பெயர் உலகம் உள்ளளவும் நிலவி மறையும் வரை நிலைத்து நிற்கும். அவர்கள் எல்லாம் உல்லாச புரியிலே சஞ்சரித்தவர்கள் அல்ல. இம்சைக்கு ஆளான இலட்சியவாதிகள் - தியாகத்தின் தூண்கள-வைதீகத்தின் விரோதிகள்-சீர்திருத்த வாதிகள்; அந்த இலட்சியவாதிகளை பலிபீடம் கூவி அழைக்கும். கல்லடி-சொல்லடி மட்டுமல்ல; பயங்கரமான சித்ரவதைக்கும் உள்ளாக்கும் அந்த இம்சைக்கு ஆளான இலட்சியவாதிகளில் ஒருவர்தான் நம் வேலாயுதம்.

அவர் உள்ளாசபுரியிலே சஞ்சரிக்கும் உலுத்தர் கூட்டத்தையும், சுற்றுவட்டாரத்தின் சுரண்டலையும், கோயிலின் பேரால் நடக்கும் கொள்ளையையும், மதத்தின் பெயரால் நடக்கும் மடமையையும், தேசியத்தின் பெயரால் நடக்கும் சூழ்ச்சியையும் கண்டு மனம் வெதும்பினர். இவைகளை போக்க, நீக்க, மாய்க்க, மண்ணோடு மண்ணாகபுதைக்க வேண்டுமென்று நினைத்தார். ஓய்வு கிடைக்கும்பொழுது தன்னால் முடிந்தவரை எந்த கூட்டமானாலும் பிரசாரம் செய்தார். அறிக்கைகளும் விட்டார்.

அவர் சுரண்டலை களைய பாடுபட்டதால், காலை நேரத்திலே 1947-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 13-ந்தேதி கொலை செய்யப்பட்டு பலாமரத்திலே ஏற்றப்பட்டு விட்டார். நயவஞ்சகக் கூட்டம் ஏமாற்றி விட்டது. ஆ! அய்யய்யோ, நினைத்தாலே அந்த காட்சியை மனம் துடிக்கிறது. குருதி கொதிக்கிறது, கண்கள் குளமாகிறது. சூழ்ச்சியை ஒழிக்கவந்த தீரன், எதிர்ப்பை துச்சமெனக் கருதும் அஞ்சாநெஞ்சன் வேலாயுதம் சீர்திருத்த பரிசைப் பெற்றுவிட்டார்.

நீதியைப்போதித்த சாக்ரடிஸ் நஞ்சூட்டிகொல்லப்பட்டதைப்போல, நாணயத்தையும் நல்லொழுக்கத்தையும் பரப்பியதற்காக ஏசுநாதர் இரத்தம் ஒழுக ஒழுக, இரும்பாணிகளால் சிலுவையில் அறையப் பட்டதுபோல, வானத்தின் விஞ்ஞான உண்மையைக் கண்டுபிடித்துக் கூறியதற்காக கலீலியோ சித்ரவதை செய்யப்பட்டதைப்போல தன்னலம் கருதாது பிறர் நலத்துக்காக உழைத்த காந்தியார் மதவெறியினால் சுட்டுக் கொல்லப்பட்டதைப்போல, நம் வேலாயுதமும் பழமை பலிபீடத்திலே ஏற்றப்பட்டு மாய்க்கப்பட்டு விட்டார்.

அவ்வுத்தமரின் மனைவியார் தோழியர் செகதாம்பாள்; புதல்வி மங்கையர்க்கரசி-மணிமேகலை மட்டுமல்ல; அவர் பெயரை இதயத்திலிறுத்தியிருந்த மாணவர்கள் மட்டுமல்ல; திராவிடமே கண்ணீர் சிந்தியது. கரை காணாத துக்கத்திற்கு ஆளாகியது. அழுது துடித்தது. சீர்திருத்த பத்திரிகை ஆசிரியர்கள் மட்டுமல்ல; தேசியப்பத்திரிகை ஆசிரியர்களும் சிலர் கண்ணீர் விட்டுக் கதறினர் அந்த அழுகுரலின் எதிரொலி திராவிடத்தின் எந்த பாகத்திலும் ஒலிக்கிறது.

அஞ்சாநெஞ்சம் படைத்த அவர் 'மனம்' வைதீக உலகத்தை வீதி சிரிக்கச்செய்த சாக்ரடிஸ்-கொளுத்தப்பட்ட புரூனோ-தூக்குமேடையேறிய பகவத்சிங்- 'இந்திக்கு தமிழ் நாட்டில் ஆதிக்கமா' என்று சிறையில் உயிர் நீத்த தாலமுத்து-நடராஜன்-மலேயாவில் புன்முறுவலுடன் தூக்குமரத்திலேறிய கணபதியைப் போன்றது, அவர்களின் நெஞ்சுறுதியை ஒத்தது.

அவர் உடையார்பாளையம் வட்டத்தில் செயங்கொண்டத்தை பொட்டிய காடிகுளம் என்ற கிராமத்தில் சாமிநாதன் என்பவருக்கும் பொன்னாட்சி அம்மாளுக்கும் 1910 ஆம் ஆண்டு ஜனவரிதிங்கள் 15-ம்நாள் பிறந்தார். அக்குடும்பம் செல்வாக்குறியதுதான்; பணத்தினாலல்ல; புகழினால் அவர் பல இடங்களிலே ஆசிரியர் தொழில் செய்தார். சென்றவிட மெல்லாம் மக்களைப் படிக்க சொல்லி வற்புறுத்தி வந்தார். அவரின் முயற்சியால் படித்து ஆசிரியர் பதவியில் இன்று பலர் இருக்கின்றனர். 'அவர் துடுக்குமிகக்கொண்டலையும் துணிவுமிக்க ஆரியத்தை'க் கண்டித்தார்; ஆனால் ஆரியர்களின் நண்பராக இருந்தார். அவர் சாந்தத்தின் சொருபிதான்; ஆனால் அஞ்சாநெஞ்சுடையவர். குற்றம் கண்ட இடத்து சாந்தமான முறையில் 'இது தகாது', இது 'தகும்' என்றுரைப்பார். படிக்காதவரிடம் கையெழுத்து போட்டுக் கொடுத்து அவர்கள் பெயரை அதைப் போலவே எழுதிக் கற்றுக கொள்ளச் செய்வார். அவர் கல்வி பிரச்சாரமே முக்கியம் என்று கருதினர்

அவர் ஊருக்கு உபதேசம் செய்து, தன்வரை

# முன்னூறு ரூபாய் !

(மு. கருணாநிதி)

அம்மாவுக்கு கண் தெரியாது. அப்பாநடமாட முடியாதவர். ஒரு வருடமாகப் பக்கவாதம். அக்காள் ஒருத்தி, விதவை. ஒரு குழந்தையை விட்டு விட்டு செத்துவிட்டாள்.

குடும்பத்தைத் தாங்கும் தூண் நான். வெற்றிலை பாக்குக்கடை யொன்றில் பத்துருபாய் சம்பளத்தில் வேலை; அதவும் போய் விட்டது. வேலையிருந்த போதே வீட்டில் இரண்டுவேளைபட்டினி. இப்போது கேட்கவேண்டுமா? நீங்கள் ஏதாவது வழி செய்யுங்கள், இல்லாவிட்டால் ஒரு முழக் கயிறு தான் செலவு! என்று கூறிக் கண்ணீர் வடித்தான் அந்த ஏழை வாலிபன். பெயர் மாத்திரம் லக்ஷ்மிநாராயணன். ஆனால்... தரித்திர நாராயணனாய்த் துடித்தான்.

அவன் வேலை கேட்ட இடமோ...பெரிய ஆபிஸ் அல்ல, அல்லது மில் முதலாளியிடமல்ல, மாதம் நூற்றைம்பது ருபாய் வருமானமுள்ள ஒரு பள்ளிக்கூட ஆசிரியரிடம். தங்கப்பன் உயர் நிலைப்பள்ளியில் கணித ஆசிரியர். நூற்றைம்பதைக் கொண்டு தன் பெரிய குடும்பத்தையே நடத்தகஷ்டப்படும்போது,லட்சுமி நாராயணனைக் காப்பாற்றஎப்படித் துணிய முடியும். தங்கப்பன் இளகிய மனமுடையவர். சீர்திருத்தக்காரர். சீர்திருத்த உலகில் அவரது புனைப்பெயர் மார்க்ஸ்! மரர்க்ஸ் மேடையில் ஏறுகிறார் என்றாலே மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்படும். அவ்வளவு சிறந்த போச்சாளி. ஏழை, ஈவு, இறக்கம்என்றெல்லாம்பேசுகிறாரே, நாமும் கொஞ்சம் கை நீட்டிப் பார்க்கலாமே என்று எத்தனையோ பேர் தங்கப்பனை யாசகம்கேட்டிருக்கிறார்கள். தன் சம்பளத்தில் அவர்களுக்கென ஒருபகுதியை செலவழித்துக் கொண்டிருந்தார் தங்கப்பன். அவர்களில் ஒருவன்தான் லக்ஷ்மி நாராயணன். அவன் கதையை தங்கப்பனால் கேட்க முடியவில்லை அவ்வளவு வேதனை யடைந்தார்.

பத்துநாள்வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டிரு எங்கேயாவது, வேலை தேடிப் பார்கிறேன், என்று உறுதியளித்தார் ஏழெட்டு நாட்களாகி விட்டன. இன்னும் வேலை கிடைத்த பாடில்லை.

ஒருநாள் தங்கப்பனுக்கு, அவரிடம்ஆறுமாதத்துக்கு முன் கடன் வாங்கியிருந்த ஒருதோழரால் அனுப்பப்பட்ட, ரூபாய் முன்னூறு மணிஆர்டர் வந்தது. போன பணம் திரும்பி, வந்த ஆனந்தத்தில், அதை பெட்டியில்கூட எடுத்துவைக்காமல் மேசைமேல் வைத்தபடியே மறந்துவிட்டு பள்ளிக்கூடத்திற்குச் சென்றுவிட்டார். பாடம் நடந்து ,கொண்டிருக்கும் போது பணத்தின் நினைவு வந்தது.லக்ஷ்மிநாராயணன்மேல் திடீரென சந்தேகமும்பிறந்தது.பாடத்தை,சீக்கிரம்முடித்து விட்டு வீட்டுக்குப் புறப்பட்டார். வரும் வழியிலே யெல்லாம் நல்ல உயிர் இல்லை· என்ன தான் நல்லவனா யிருந்தாலும் ரூபாய் முன்னூறு அல்லவா? என்று எண்ணியபடி நடந்தார். வீட்டுக்கு வந்தார். வாசலில் உட்கார்ந்திருக்கும் லக்ஷ்மி நாராயணனைக் காணவில்லை. உள்ளே போனார், பணத்தையும்காணவில்லை.வீட்டில்விசாரித்தார்... பணம் போய்விட்டது . தங்கப்பன் ஒரு அலட்சியமான புன் சிரிப்புடன் மீண்டும் பள்ளிக்குத்திரும்பினார். சேலம் ரயிலடியில் பிற்பகலே வண்டியைப் பிடித்து ஈரோடு வந்து சேர்ந்தான் லக்ஷ்மிநாராயணன். ஈரோட்டில் ரெடிமேடு கடையில் நுழைந்து வெளியேவரும் போது மைனராய் மாறிவந்தான். அவன் மனம் ஏதோ பேசிக் கொண்டிருந்தது. முன்னூறு ருபாய்க்கு ஒரு வெற்றிலை பாக்குக்கடை, தானே முதலாளி, என்று திரும்பத் திரும்பப் பேசிற்று. கடைத் தெருவில் ஒரு பொடிப்பையன், எலும்புந்தோலுமாய் அழுக்குமயமாய்நின்றுகொண்டு ‘அய்யா’ என்றான்.

லக்ஷ்மிநார்ராயணன் அவனைப் பார்த்ததுமே ஏதோ யோசனை செய்துவிட்டான். டே பையா! என்னோடு வருகிறாயா? என் வெற்றிலைபாக்குக் கடையில் வியபாரம செய்ய முடியுமா? என்று அவனைக்கேட்டான்பையன்சந்தோஷமாய்த் தலையாட்டினான். அவனைத் தன்னோடு கூட்டிக்கொண்டான். முதலாளிநடை தானாகவே வந்து விட்டது. 10—30 மணிக்கு ஈரோட்டில் வண்டி! ஒன்றரை டிக்கெட் எடுத்துக் கொண்டு இருவருமே ரயில் ஏறினார்கள். அந்த ஏழைச்சிறுவனுக்கு ஓரே மகிழ்ச்சி. லக்ஷ்மிநாராயணன் பிளேயர்ஸ் சிகரெட்டைப்புகைத்தவாறு கம்பீரமாக ரயிலில் உட்கார்ந்திருந்தான். வண்டி திருச்சியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது.

லக்ஷ்மிநாரரயணன் வெற்றிலைபாக்குக் கடை துவக்கவிழா,குதூகலமாய்நடைபெறுகிறது. முதலாளி ஸ்தானத்தில் லக்ஷ்மிநாராயணன். வேலைக்காரனாய், ஓடும்பிள்ளையாய்,அந்தப்பயல். என்ன

# ஆங்கில நாட்டின் பல்கலைக் கழகங்கள்

(பட்டுக்கோட்டை இரா. சௌரிராஜன்)

நமது பழங்கால நாகரீகம் எவ்வளவு உயர்வாக விருந்த போதிலும், தற்சமயம் நாம் அன்னிய நாட்டாரிடமிருந்து, சமூக சீரமைப்பு விஷயத்தில் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் அதிகம் இருக்கிறதென்பது ஒப்புக்கொள்ள வேண்டியதாகிவிட்டது. அதிலும் சுதந்திரம் கிட்டிய பிறகு, நமது சொந்த நிர்வாகத்தில், அந்த அவசியம் நன்றாய் கண்ணுக்குத்தெரிகிறது. நாடு அடிமைப்பட்டிருந்த காலத்தில் நமது நிலை எத்தனை சோகமாகவிருந்ததோ அத்தனை சோகமாகத்தான் சுதந்திரமடைந்த பிறகும் இருக்கிறது.

ஆகவே, நமது முன்னேற்றம் கருதியாகிலும், அந்நிய நாட்டில் காரியங்கள் நடைபெறும் விதத்தில், நாம் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். அடிக்கடி நம் நாட்டிலிருந்து ஏராளமான நபர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று, ஆங்காங்கு அவர்கள் கண்ட அற்புத விஷயங்களை நமக்கு வந்து சொல்ல வேண்டும். இவ்விதம் காலச் சக்கரத்தின் சூழ்ச்சியில் நமது நாட்டையும் பிணைக்கும் தூதுவர்கள்தான் நமக்கு இப்போது தேவை.

இதுகாறும் நாம் காலப்போக்கை விட்டு விலகி நிற்கவே கற்றுக் கொண்டோம். நம்மைச் சுற்றிலுமுள்ளவர்கள், உறக்கம் தெளிந்து, முன்னேற்றப் பாதையில் ஓட்டம் பிடிப்பதைக் கண்டும், நாம் இருந்த இடம் விட்டு அசையாமல் இருப்பதிலே இன்பத்தைக் கண்டோம். அக்கம்பக்கத்தவர்கள் அரிய முயற்சி செய்து பெரிய பெரிய மாறுதல்களைக் கண்டு, கண்ணுக் கெட்டாத வெகுதூரம் சென்ற பிறகுதான், காலத்தின் தூண்டுதலை நாம் உணர்ந்தோம். அதற்சேற்ப செயலாற்ற எத்தனித்து எழுந்து நிற்கும் இத்தருணத்தில் எண்ணற்ற தடைகள்—பழைய வழக்கம், குருட்டு நம்பிக்கை முதலியன குறுக்கே நின்று தடுக்கின்றன. உண்மையை உணர்ந்தவர்கள் சார்பிலிருந்து இதற்கு யாதொரு ஆட்சேபமும் பிறக்கவில்லை. உண்மைப் பக்தரில் பலர் இதற்கு இடங் கொடுத்துப் பேசுகிறார்கள். இப்படி உண்மைக்கும் பொய்க்கும் ஒப்பந்தம் உண்டாக்கி இடையே பாகச்சுவர் போடப்படுகிறது, நமது நாட்டில் இப்பொழுது.

மேல் நாட்டில் அப்படி இல்லை. குருட்டு கொள்கைக்குக் கீழ்பட்டிருந்த தளையை வெட்டி தன் மதிப்பைக் காக்கக் கற்றவர்களே தலை தூக்க முடியுமென்ற உண்மையை, வெகு காலத்திற்கு முன்னமேயே அவர்கள் கண்டு கொண்டார்கள். ஒரு வகுப்பாருக்கு பெரிய பேறு கிட்டுமானால் அது பிறருக்கும் கொடுக்கத்தக்கது, கேவலம் லோபத்தினால் தனக்கே நஷ்டமுண்டாகும் என்ற மகத்தான உண்மையை உணர்ந்து கொண்டார்கள், இதை அறிந்துதான் காலம் சென்ற கவிஞர் ரவீந்தரும், "இந்த அறிவுச் செல்வத்தை நமக்குக் கொடுக்கும் பொருட்டாக இங்கிலாந்தை தெய்வம் நம்முடைய கரைகளில் கொண்டுவந்து சேர்த்தது" என்று கூறினார்.

எனவே, அந்த ஆங்கில நாட்டிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டிய பல விஷயங்களில் இப்பொழுது பல்கலைக்கழகங்களைப் பற்றி கவனிப்போம். என் பல்கலைக்கழகங்களைப் பற்றி கவனிக்க வேண்டிய அவசரம் என்றால்:—

அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் நமக்கு மனக்கஷ்டத்தையும், பொதுவாக மாணவர்களுக்கு மான நஷ்டத்தையும் உண்டாக்கியது. நேர்மையானநிர்வாகத்தை எதிர்த்து சில மாணவர்கள் கிளர்ச்சி நடத்தி, மரியாதையை மறந்து நடந்து கொண்டது அறிவுள்ளவர்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது மட்டும் அல்லாமல், கல்வித்துறையில் இப்போதைய நிலையிலேயே நிர்வாகம் நீடித்தால் எதிர்கால சமூகத்தின் கதி என்னாவதென்ற கவலை ஏற்பட்டு விட்டது.

## இங்கிலாந்தில்.

பல்கலைக்கழகம் என்ற அமைப்பு தோன்றி 600 வருடங்களுக்கு மேலாகிறது. கடந்த ஒரு நூற்றாண்டுக்குள், மக்களின் எண்ணிக்கையின் வளர்ச்சியை அனுசரித்து, பல்கலைக்கழகங்கள் பெருகி, 4 கோடி மக்களைக் கொண்ட அந்நாட்டில் இப்பொழுது 17 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. சென்ற நூற்றாண்டில் உண்டான விஞ்ஞான வளர்ச்சியை ஒட்டி, உயர்தாக் கல்விப் பயிற்சியின் அவசியத்தை உணர்ந்து ஆங்கில நாட்டில் அரசாங்கம் பல்கலைக்கழகங்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்தியது. சமூக ஆதரவும் பெருமிதமாக இருந்து வந்

---

சுறு சுறுப்பாய் வேலை செய்கிறான் தெரியுமா? வெற்றிலைபாக்குக் கடையும் வியாபாரச் செழிப்பில் வளருகிறது. திருச்சியில் தெப்பக்குளக்கரையில் இந்தக்கடைக்குத்தான் அபார மதிப்பு.

லக்ஷ்மிநாராயணன் கண்ணை விழித்துப்பார்த்தான். திருச்சி ஜங்ஷனில் வண்டி நின்றது. மணி நாலு! பக்கத்திலிருந்த பயலைப் பாத்தான், காணவில்லை. பையைப்பார்த்தான் பணமில்லை. ஒரு பெரு மூச்சு. தங்கப்பன் எதிரே வந்து நின்று சிரிப்பது போலிருந்தது. நல்ல வேளை. வெளியே செல்ல டிக்கெட்டாவது இருந்தது.

●

ஆமையால் அரசாங்க உதவியை எதிர்பாராமலே ஆங்காங்கு கலைக்கழகங்கள் அமைந்து வளர்ச்சி பெற்றன. ஆதிகால முதற்கொண்டு அனைத்தையும் அரசாங்கமே செய்ய வேண்டும் என பொதுமக்கள் அங்கு எதிர்பார்த்தது கிடையாது. எனவே இன்றும் பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் நீதிநிர்வாக விவகாரங்களில் அரசாங்கம் தலையிடாதவாறு தடுத்து, தனியே இயங்கும் வகையில் வளர்ந்து வந்துள்ளன.

சமீப இரண்டாவது உலக யுத்தத்திற்குமுன் மொத்தம் 50000 மாணவர்கள் பல பல்கலைக்கழகங்களில் படித்து வந்தார்கள். மொத்த மக்கள் தொகையில் கணக்குப் பார்த்தால் இங்கிலாந்தில் 900 நபருக்கு ஒருவர் உயர்தரக் கல்வி பயிலுபவராக இருக்கிறார். (அமெரிக்காவிலோ 100-க்கு ஒருவர்வீதம் கல்லூரிகளில்படித்துபட்டம்பெறுகிறார்களாம்) மொத்த எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கு பெண்கள். 5000 மாணவர்கள் அயல் நாட்டிலிருந்துவந்தவர்கள்,

மாணவர்களின் எண்ணிக்கையைப் போலவே ஆசிரியர்களின் தொகையும் நமக்கு ஆச்சரியத்தை உண்டாக்கும் அளவிற்கு அதிகமாக் விருக்கிறது. மொத்தம் 50000 மாணவர்களுக்கு 4600 ஆசிரியர்கள், உயர்தரக்கல்வி போதிப்பவர்கள் இருக்கிறார்கள். அதாவது சராசரி 12 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருக்கிறார் என்பது உண்மை கணக்கு.

மொத்த மாணவர்களில் 43 சதவிகிதம் அநேகமாக ஒரு பாதி மாணவர்கள் உபகாரச் சம்பளம் பெறுகிறார்கள்; திறமையும் ஆர்வமும்உள்ள மாணவர்களுக்கு படிப்பில் வறுமை, ஒரு தடையல்ல.

இவ்வளவு தாராளமாக உதவியளித்து, வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ள மாணவர்களின்ஒழுக்கம் இங்கிலாந்து தேசத்தில் எவ்வளவு கண்டிப்பாய் கண்காணிக்கப்படுகிறது என்பது கீழ்கண்ட விவரங்களே உதாரணமாகும்.

ஒவ்வொரு பல்கலைக் கழகங்களிலும் பல்வேறு கல்லூரிகளின் ஆசிரியர்களில் ஆண்டுதோறும் இருவர் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இவர்களுக்கு ஆங்கிலத்தில் புரொக்டர் (Proctor) என்று பெயர். இவர்களது வேலை, மாணவர்களிடையே ஒழுக்கக்குறைவு ஏற்படாமல் பார்த்துக்கொள்வதுதான். இவர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு புல்டாக்ஸ் (Bull Dogs) என்று பெயரிடப்பட்ட கையாட்கள் உண்டு. எப்பொழுதேனும், மாணவர்கள், புரொக்டரைக்கண்டோ அல்லது நில் என்று கட்டளையிடப்பட்ட காலத்திலோ தப்பிஓட முயன்றால் அப்பொழுது ஓடமுயலும் மாணவர்களை விரட்டிப்பிடித்து வருவது இவர்கள் வேலை. எப்பொழுதும் புரொக்டாரைப் பின் தொடர்ந்து 'புல்டாக்' என்ற இவர்கள் சென்றுகொண்டிருப்பார்கள். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ்போன்ற மாணவர்கள் தங்கிப் படிக்கும் பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் இஷ்டம்போல் இரவு நேரங்களில் வெளியில் நடமாட அனுமதிக்கப் படுவதில்லை. மாணவர்களை எளிதில் அடையாளம் கண்டுகொள்ள வெளியே செல்லும் மாணவர்கள் எப்பொழுதும் ஒருவித அங்கி (Gown) அணிந்து கொண்டிருக்க வேணடும் என்பது இங்கிலாந்தில் பொதுவான விதி. எனவே பொதுவிதியை மீறி நடந்து கொள்ளும் மாணவர்களை வேட்டையாடிப் பிடித்துவரும் அளவிற்கு ஒழுக்கம் பல்கலைக்கழகங்களில் பாதுகாக்கப்படுகிறது அந்த நாட்டில்.

இனி குறிப்பாகச்சில, அதாவது மிகப் பெரியதும், அதிகப்புகழ்பெற்றதுமான ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் மற்றவைகளைவிட சிறியதும் அதிக புராதனமானதுமான செயிண்ட் ஆண்ரூஸ், சமீபகாலத்தில் தோற்றுவிக்கப்பட்ட நவீனமானதுமான மான்செஸ்டர் ஆகிய நான்கு பல்கலைக் கழகங்களைப்பற்றி கவனிப்போம்.

## ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ்:

ஆகிய இரு பல்கலைக் கழகங்களும் 13-ம் நூற்றாண்டின் இறுதியில் 'மாணவர்கள் கல்லூரிகளிலேயே தங்கியிருந்து'' படிக்கும் (Residential) கழகங்களாக அமைந்தன. ஆக்ஸ்போர்டில் 22 கல்லூரிகளும் பெண்களுக்கென தனியே 4 கல்லூரிகளும் ஆக 26 கல்லூரிகள், ஒரே நகரில் ஆக்ஸ்போர்டில் இருக்கின்றன. இங்கு படிக்கும் முறை நம் நாட்டைப் போலல்ல. முற்றிலும் மாறுபட்டது. மாணவர்கள் தினந்தோறும் வகுப்புகளுக்குச் செல்ல மாட்டார்கள். செல்ல வேண்டிய அவசியமுமில்லை. ஒவ்வொரு கல்லூரிகளிலும் பல்வேறு விஷயங்களைப் பற்றி ஆசிரியர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். மாணவர்கள் இஷ்டம்போல் ஏதேனுமொரு, தங்கள் கல்லூரியில்தான் இருக்க வேண்டுமென்ற நிபந்தனை இல்லை. கல்லூரியில் நடக்கும் பிரசங்கத்திற்குப்போய் இருந்து கவனித்து. குறிப்பு எடுத்து வந்து தங்கள் அறையிலேயே படித்து, ஆசிரியர்கள் கொடுத்த வேலைகளை நிறைவேற்றுவார்கள்.

வாரத்திற்கு ஒருமுறையேனும் மாணவர்கள், தங்களின் ஆசிரியர்களை கல்லூரியில் அவர்களுக்கென உள்ள அறைகளில் சந்திக்கவேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களை, தனியாகவோ அல்லது இருவராகவோ சந்தித்து, அவர்களுக்கு சந்தேகம் தோன்றிய விஷயங்களை விளக்கி, மேற்கொண்டு அவர்கள் செய்ய வேண்டிய அலுவல்களை குறிப்பிடுவார். இவ்விதம் மாணவர்கள் தனித்தனியே கவனிக்கப் படுவதால் இங்குள்ள ஒவ்வொரு கல்லூரிகளில் மொத்தம் மாணவர்கள் 170 பேர்களுக்குமேல் இருக்கமாட்டார்கள். பிற்பகல் முழுமையும் மாணவர்கள் விளையாட்டிலும், ஒருவரை ஒருவர் சந்தித்து உரையாடுவதிலும் கழிப்பார்கள். ஆண்டில் ஆறுமாதங்கள்தான் கல்லூரி இயங்கும். ஆறுமாதம் பலவித விடுமுறைகளில் போய்விடும்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திற்கு 18 கல்லூரிகளும், பெண்களுக்கென 2-ம் ஆக, 20 கல்லூரிகள் உள்ளன.

இந்த இரு கல்விக்கழகங்களும் அதிகப் புகழ் பெற்றிருக்கும் காரணமாக இங்கிலாந்திலுள்ள பணம்

இரே. தாண்டவன்

# அன்றைய அரசர் நிலை

இடப்பாடி

"அமைச்சரே. ஆரண்யத்தில் மதவெறியர்களின் அக்கிரமங்கள் அதிகரிக்கின்றன. யாகங்கள் செய்வதாக ஆண்டவனின் பெயரைச் சொல்லி ஆடுமாடுகளை பலியிடுகிறார்களாம். பகலில் பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்று பாமர மக்களிடம் நமக்கெதிராக பிரசாரம் செய்கின்றனர். தாங்கள் கடவுளின் மறு அவதாரமென்றும், நினைத்ததைச் செய்ய வல்லமை தங்களிடம் உண்டென்று நம்பும்படி செய்கிறார்கள். இப்படியே விட்டால் அவர்களின் ஆதிக்கம் வளர்ந்து நாட்டை நாசமாக்க, மடமையை மக்களிடம் போதித்து உழைக்காமல், வாழ வகை செய்வதன்றி அரசியல் காரியங்களிலும் தலையிட ஆரம்பிப்பார்கள். ஆகையால், அவர்கள் செய்யும் காரியங்களை தடுக்க வேண்டும்.

"ஆம் அரசே. உடனடியாக அந்த அக்கிரமத்தை தடுக்க வேண்டும். ஆனால் அவர்கள் அடுத்துக் கெடுக்கும் குணம் படைத்தோர். காரியம் சாதிக்க எதையும் செய்யத் துணிவர். ஆகையால் அவர்களை அடக்க அனுப்பப்படும் ஆள், அவர்களின் சூழ்ச்சிகளில் வஞ்சகங்களில் மயங்காத மனம் படைத்தோனாக இருக்க வேண்டும்." என்று அமைச்சர் யோசனை கூறினார்.

* * *

"தலைவ! வளமையான நாடு இது என்று வந்தோம். சாலை சோலைகள் நிறைந்த இயற்கையெழில் வாய்ந்த நாடுதான். செந்நெல்லும் கரும்பும் விளையும் செழுமையான நாடுதான். அகிலும் தேக்கு உடைய காடுகளைக் கொண்ட நாடுதான். காவேரி, தென்பெண்ணை, பாலாறு என்னும் பல வற்றாத நதிகள் பாயும் நாடுதான். நாடு எவ்வளவு வளமடைந்திருக்கிறதோ அதைவிட பன்மடங்கு நாட்டு மக்களின் மனம் பண்பட்டிருக்கிறது. நாம் அவர்களிடம் செய்யும், மந்திர தந்திரங்கள் மாயா வாதங்கள் பலிக்காது. நமது பேச்சை அவர்கள் நம்பார். அன்பையும் அறநெறியையும் ஆதாரவாகக் கொண்டு ஆட்சி புரிகிறான் மன்னன். ஆகையால் நாம் இன்றே நம்நாடு நோக்கிச் செல்வோம்."

"கோழைகள்! அவசரப் படாதீர்கள். பொறுத்திருந்து பார்ப்போம்."

"பொறுப்பது எதற்கு. நாம் இவ்வளவு நாட்களாக காட்டிலேயிருந்து நாட்டு பாமர மக்களிடம் நமது பணிகளை செய்தும் பயன் எதும் அடைந்தோமில்லை. அரசன் இதை அறியா வண்ணம் செய்தும் நமது எண்ணம் பலிக்கவில்லை."

ஆம், நமது போதனைகளை நம்ப மாட்டார்கள். ஆனால். இதில் பெற்றி பெற்றால், நாமே இந்நாட்டின் சக்ரவர்த்தி. இந்நாட்டின் மன்னன், நம் கைப் பொம்மை. நாம் விரும்பியதைச் செய்யலாம். வேண்டியதைப் பெறலாம.

மக்கள் மடையர்களாகி, மன்னன் மனதில் மத

---

படைத்த செல்வந்தர்களெல்லாம், பெரும்பாலும் இவ்விருவிடங்களில்தான்கல்விபயிலுவார்கள். இதன் காரணமாக இங்கு சம்பளமும் செலவும் மாணவர்களுக்கு மிகவும் அதிகம். ஆண்டு ஒன்றுக்கு 225 பவுன் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. இங்கு ஏராளமாக உபகாரச் சம்பளம் அளிக்கப்படுவதால், பரம ஏழைகளும் இடம்பெற்று, ஏழை பணக்காரனென்ற பாகுபாடு இல்லாமல், சமநிலையில் கலந்து பழகி வருவதால், இவ்விரு கழகங்களும் அதிக புகழ் பெற்று விளங்குவது பொருத்தமுள்ளதாகவிருக்கிறது.

ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் ஆகிய இரு பல்கலைக் கழகங்களுச்கும் ஆண்டுதோறும் நடைபெறும், 'படகுப் பந்தயம்' மிகப் பிரசித்திபெற்றது. தேம்ஸ் நதியில் நடைபெறும் இப்பந்தயத்தைப் பார்வையிட இங்கிலாந்தின் பல்வேறு பாகங்களிலிருந்தும் லட்சக் கணக்கில் மங்கள் வந்து கூடியிருப்பார்கள்.

## செயிண்ட் ஆண்ரூஸ்:

இங்கிலாந்திற்கு வடக்கே ஸ்காட்லண்டு கிழக்குக் கடற்கரையில் உள்ளது செயிண்ட் ஆண்ரூஸ் என்ற சிறு நகரம். இங்கு 650 வருஷங்களுக்குமுன் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இப்பல்கலைக் கழகத்திற்கு மூன்று கல்லூரிகள்தான் உண்டு. இரண்டு கல்லூரிகளிலுள்ள சுமார் 650 மாணவர்கள் 70 உபாத்தியாயர்களால் தயாரிக்கப்படுகிறார்கள். மூன்றாவது டண்டி என்ற விடத்திலுள்ள வைத்தியக் கல்லூரியில் மாணவர்கள் 480. ஆசிரியர்கள் 100. இங்கு படிக்கும் மாணவர்களுக்கு செலவு கொஞ்சம் குறைவு. ஆண்டு ஒன்றுக்கு 120 பவுன் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. இங்கு உள்ள புத்தகசாலையில் 300000 பிரதிகளுக்குமேல் புஸ்தகங்கள்உள்ளன

## மான்சேஸ்டர்:

பல்கலைக்கழகம், பஞ்சு ஆலைகள் நிறைந்த மான்செஸ்டர் நகரில் உள்ளது. இங்கு தொழிற் கல்வி அதிகம். கட்டிட அமைப்பு, நகர அமைப்பு, தொழிற்சாலைகள் அமைப்பு, பிளாஸ்டிக் சாமான்கள் தயாரிப்பு போன்ற பல்வேறு தொழில்களுக்கு இங்கு ஆராய்ச்சி முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்த பல்கலைக் கழகத்தில் கணக்குப் பார்க்கும் பெரிய இயந்திரம் ஒன்று இருக்கிறது. மணிக்கணக்கில் மனிதன் மனதைக் குழப்பக்கூடிய சிக்கலான சில கணிதங்களை இந்த இயந்திரம் சில விநாடிகளில் செய்து முடித்துவிடும். உலகிலேயே இம்மாதிரி இயந்திரம் 6 தான் இருக்கிறதாம்.

இந்த பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு சிலவு மிகவும் குறைவு. ஆண்டு ஒன்றுக்கு 30 பவுன் செலவில் மாணவர்கள் இங்கு கல்வி பயிலலாம்.

நமது நாட்டிலும், மேல் நாட்டிலுள்ளது போல் ஏராளமாக கலைக்கழகங்கள் அமைந்து, கல்லூரிகள் பெருகி, வளர்வதை எதிர்பார்ப்போமாக.

★

போதை யேறினுல் நினைத்ததை முடிக்கலாம். மன்னுதி மன்னரெல்லாம் மண்டலங்களைப் படைத்த மாவீரர்க ளெல்லாம் மதவெறியினுல் மண்டியிட்டு மயங்கிக் கிடப்பதை இவர்களறியார். நீங்களுமா தெரியாம லிருக்கிறீர்கள்? பிரித்தாளும் சூழ்ச்சி நம் மூலபலம். மடமையை மக்களிடம் வளர்ப்பது நமது மரபின் சிறப்பு. ஒன்றுக்கும் அஞ்சாதீர்கள். இளவரசனை இன்மொழிப் பேசி வரவேற்போம். பிறகு நமது வலேயில் இலக்காக்குவோம், வரட்டும்.''

மேற்கண்ட உரையாடல் மதவெறித் தலைவருக்கும் அவரது சீடகோடிகளுக்கும் நடந்தது. தென்னுட்டு மன்னர்கள் தேவதூதர்களின் பேச்சுக்குச் சிரம் சாய்க்கா காலம். அவர்கள் செய்யும் யாகங்களின் மீதும் பலியிடும் தொழில் மீதும் வெறுப்பு கொண்ட காலம்.

அவர்களின் நடத்தைகளையும், நாட்டிலே செய்யும் பிரசாரத்தையும் தடுக்க. நாட்டைவிட்டு ஓட்ட, படை கொண்டு வருகிருன் இளவரசன்.

* * *

இளவரசர் காட்டை அடைந்து களைப்பார ஓரிடத்தில் தங்குகிருர். அந்தி வேலேயில் உலவ தனிமையாகம் புறப்படுகிருர். தென்றலின் இன்ப உணர்ச்சிலே சிறு பறவைகளின் இன்னிசையிலே, இயற்கையின் எழிலிலே மெய்மறந்து வெகு தூரம் சென்று ஒரு அருவியை அடைந்தார். சிறிது நேரம் சென்றதும் அவர் கண்ட காட்சி, ஆச்சரியத்தை உண்டாக்கியது. பொன்னிற மேனியாள் ஒருவள், இடையிலே குடம் கொண்டு எழில் நடைபுரிந்து, இளவரசர் இருக்கும் பக்கமாக அருவியின் கரை நோக்கி வருகிருள்.

இளவரசர் அவளைப் பார்த்த வண்ணமிருந்தார். அவளோ, இவரை உற்றுக் கவனிக்காத போதிலும் அடிக்கடி ஓரக்கண்ணுல் பார்த்தாள்.

"பெண்ணே நீ யார்?''

"மதத் தலைவன் மகள் நான். தாய்கள் யாரென்று தெரிய வில்லையே?''

"நான் இப்புவியாளும் மன்னன் மகன். இந்நாட்டின் இளவரசன்'' என்று கூறியவன் அவளின் அழகைக் கண் கொட்டாமல் பார்த்தான். குறிப்பறிந்த அவளும், கோபப் பார்வையுடன் விலகி சென்று மறைந்தாள்.

கதிரொளி மறைந்தது. காரிருள் படருமுன் முழுமதி முளைத்தது. இளவரசர் பாசறையை அடைந்து படை வீரர்களுடன் பேசிவிட்டு, படுக்கைக்குச் சென்றார்.

"அப்பா! இந் நாட்டின் இவவரசரை அருவியின் மருங்கிலே கண்டு பேசினேன்'' என்று மதத் தலைவனிடம் அப்பெண் கூறினுள்.

"அப்படியா! என்ன பேசினீர்கள்?'' என்று ஆவலோடு மகளைக் கேட்டான்.

"யார்யாரென்று ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொண்டோம், வேறொன்றும் பேசவில்லை. ஆனுல், அவர் பவளவாய் பைங்கிளியே என்று கூற, முழுமதி யொத்த முகங் கொண்டாளே என்று கூறி முத்தமிட, அவர் வாயோ, அதரங்களோ துணியவில்லை. தொட்டு இழுத்து கட்டியணைத்திட அவர் கைகள் துணிவு கொள்ளவில்லை. காட்டிலே தங்கியுள்ள இந்நாட்டின் இளவரசர் நான். அழகு தெய்வம் உனைக் கண்டேன். கடிமணம் புரிந்தோ, காதற் கிழத்தியாகக் கொண்டோ நாட்டிற்குகொண்டுபோய் ஆனந்த வாழ்வு நடத்த ஆசைப்படுகிறேன் என்று வெளியில் கூற அவர் நெஞ்சு உறுதிக் கொள்ளவில்லை. ஆனுல் இவ்வளவு எண்ணங்களும் அவர் பார்வையிலே உதிக்கக் கண்டேன்.'' என்ருன்.

நமது எண்ணம் பலித்தது. மன்னன் மகன், மதத் தலைவன் மகள் மையலிலே சிக்குண்டான். நினைத்ததை நிறைவேற்ற வாய்ப்புக் கிடைத்துள்ளது என்று மனதிற்குள் எண்ணி, "மகளே. மதவலை வீசி மக்கள் மயக்கி நம்நோக்கம் ஈடேற்ற முயன்ரேம் முடியவில்லை. ஆனுல் மாவூரன் மகனே, மங்கை உன் மாயவலையில் வீழ்ந்தான். நம் ஆசை நிறைவேற, நாம் என்றென்றைக்கும் "உழைக்காமல் உல்லாசிகளாக வாழவகை செய்வது உன் கையிலிருக்கிறது.'' என்று விடாமல் பேசினுன்.

"அப்பா, என்ன சொல்லுகிறீர்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லையே.''

"உன்னுல்தான் வளமடைந்த திருநாடாம் இத் தமிழ் நாட்டில் நரம் வாழ்வு நடத்த வழி செய்ய முடியும். ஆகையால் நாளையே இளவரசனை நாடிச் செல். உன் அழகால் அவனை மயக்கு! உன் சாகசச் செயல்களால் அவனைச சஞ்சலப்படுத்து! பிறகு உன்னை அடைய உன் ஆசையைப் பெற என்னை அவன் தேடி வருமாறு செய்.''

"ஆ! தாங்களா மணமான மகளிடம் இப்படிக் கூறுவது. புல்லென்ருலும் புருஷன், கல்லென்ருலும் கணவனுகையால் உன் பதியை வஞ்சியாதே, பதியைவிட்டு பரபுருஷர்மேல் இச்சைக் கொள்வது பாபகரமான செய்கை என்று உபதேசித்த தாங்களா என்னிடம் இப்படிப் பேசுவது நம்தேவ நூல்களாம் இராமாயணத்தில், சீதை இராமன் மேல்கொண்ட பாசமும் அன்பும், அவளின் கற்பின் மேன்மையையும் மகிமையையும் இரவு பகலாக என் போன்றவர்களுக்கு எடுத்தோதிய தாங்களா, இப்படிக் கூறுகிறீர்.''

"அடி அசடே. உலகமறியாப்பேதை நீ. சீதையின் கற்பிலே களங்கம் ஏற்படவில்லையென்ருல் கர்ப்பிணியைக் காட்டிலேக் கொண்டு விடுவானு? எவ்வுயிரையும் தன்னுயிர்போல் காக்கும் இராமன்! பேதைப் பெண்ணே, அரசன் நம் ஆணைக்கு அடிபணிந்தால், மடமை மக்களிடம் வளர்ந்தால், நாம் கற்பிக்கும் உயர்வு தாழ்வு பேதங்களைக் காத்துவளர்க்க காவலரின் ஏவலாளரும் நாம் புனையும் கற்பனை கதைகளைக் காவியங்களாக ஆக்க, அரசாங்கக் கவிகளும் காத்து நிற்பர். அப்பொழுது உன் உருவம் கற்சிலையாக கோவிலில் நிற்க, கற்புத் தெய்வமாகப் போற்றப் படுவதை நீயே பார்க்கலாம். வாள்பிடித்து போர் செய்யும் இம்மன்னன் என்தாள் பணியும் தாசனுக

சிற்பம் செதுக்கப்படும். அது ஒரு சிறந்த கலையாக ரசிக்கப்படும். ஆகையால் மகளே, நாளை நீ நன்றாக அலங்கரித்துககொள். அருவி நோக்கிச்செல். உன் பொன்னிற திருமேனியைக்கண்டு இளவரசன் தன் நிலை மறக்கும்படி நடந்து கொள். அவனை உன் அழகால் அடிமையாக்கு. பிறகு என்னிடம் அழைத்துவா.''

இரவு கழிந்தது. மறுநாள் மாலை வருமுன் மதோன்மத்தர்களின் அட்டகாசத்தை அடக்க வந்த மன்னன் மகன், மங்கை நல்லாளின் மதிமுகம் மனதிலிருத்தியவாறு மலையருவி அடைந்தான். அழகு நங்கையும் அங்குச்சென்றாள். இருவர் கண்களும் சந்தித்தன. பிறகு கருத்துகள் பரிமாறப்பட்டன. காதற் கிழத்தியாக இருக்க காரிகையும் இசைந்தாள், வைதீக முறைப்படி மதத்தலைவனின் அடிபணிந்து ஆசீர்வாதம் பெறவேண்டுமென்ற நிபந்தனையின் பேரில்.

அரசனின் குமாரன் அழைத்து வரப்பட்டான் மத வெறியர்கள் முன். அழகு அணங்குகள் ஆனந்த நடனமாட, பாவையர் பண்பாட்டிசைக்க, வேதியர் வேதங்கள் ஒத, தாடிவளர்த்தோர் தவநிலையில் சாட்சியளிக்க மஞ்சள் குங்குமப் பொட்டிட்டு, மலர் மாலை சூட்டி மன்மீது அமரவைத்து வரவேற்றார்கள்.

''இளவரசே! ஏழைகள்யாம். எதும் அறியாதவர்கள். இந்நாட்டின் எந்தல் எங்கள்மீது கோபம் கொண்டு கொடுமைகள் இழைக்க உங்களை அனுப்பியுள்ளார் போலும்!''

அன்பை ஆதரவாக கொண்டு அறம்பல புரிந்து அரசுபுரியும் எங்களுக்கு எதிராகக் கிளம்பியுள்ளீர்களாம். போர்பல புரிந்து பகைவர்களை வென்று வெற்றிமாலைசூடி விருதுகள் பலபெற்ற எங்களை இழித்து கூறுகிறீர்களாம். ஆகவே உங்கள் அறியாமையை நீக்க அனுப்பப் பெற்றேன்.''

மன்ன! ஆண்டவன் தியானத்திலே மனதைச் செலுத்தி மக்கள் நல்வாழ்வுவாழ விரும்புகிறவர்கள் யாம். மண்ணாசைக் கொண்டு மன்னர்கள் போர்புரியும் குணத்தையும் பொருளாசைக்கொண்டு மனித குலம் பெருமையில் சிக்குண்டு அக்கிரமங்களும் அநீதிகளும் புரியாவண்ணம் அஹிம்சையும் சாந்தியும் நிலவ, சதா சர்வேசுவரனை நினைத்து வேண்டி வேதங்கள் ஓதிதியும் யாகங்கள் செய்யும் நல்லெண் கொண்டவர்கள். பாராளும் ஆசை எமகளுக்கில்லை. உங்களைப் பகைத்துக் கொள்ள, நாட்டிலேகலையைக் காக்க அறம், அறிவு அன்பை வளர்க்க ஆண்டவனிடம் பக்தியைப் பரப்ப பாடுபடுகிறோமேயன்றி ஆதிக்கம் செலுத்த அல்ல.''

''அப்படியா இவ்வளவு நல்லெண்ணம் கொண்ட நீங்கள் இவ்வாரண்யத்திலேயே இருப்பதேன்? நாளையே என்னுடன் நாட்டிற்கு வாருங்கள். உங்கள் நோக்கம் நிறைவேற நான் உதவுகிறேன். அம்மையர்களின் ஆடல் பாடல்களை அரசர் கண்டால் அளவிலா ஆனந்தம் சொள்வார். வேண்டிய பரிசுகள் பெறலாம்.''

மதவெறியும் அதன் தலைவர்களும் வேந்தனுக்கெதிராக கிளம்பியதை தடுக்கச் சென்ற வீரன் வேல்விழியாளின் அன்பைப்பெற அவர்களை அழைத்துக் கொண்டு வருகிறான்.

மன்னனே வெஞ்சமர் புரிந்து வெற்றி முரசம் அதிர வெண் சங்கம் முழங்க, வீரனாக தன்மகன் வரா விட்டாலும் வீணர்களை அடக்கித் திரும்புவான் என்று எண்ணி இருமாந்திருந்தான். மைந்தனோ விரோதிகளை விரட்டிவிட்டோ சிறைப்படுத்தியோ அல்ல, பகைவர் தலைவனை பல்லக்கில் எற்றி பவனி வருகிறான்.

மதவெறியர்கள் நோக்கமும் அவர்கள் கொண்டுள்ள நல்லெண்ணமும், சேவா உணர்ச்சியும் செய்கின்ற சத்காரியங்களும் கலையின் பால் கொண்டுள்ள மோகமும் அற்புத நடனமும், பற்றி தந்தையிடம் தனயன் எடுத்துரைதது நாட்டின் நலம் காக்க அவர்களை அரண்மனையிலே வைத்துக் கொள்ளவும் செய்தான். மகன், அவர்கள் பால் வைத்துள்ள மனதை மாற்ற முடியாமல் ஒப்புக்கொண்டான் மன்னனும் வேண்டா விருப்புடன். ஆனால் தந்தைக்குத் தெரியுமா தன்னரும் மைந்தன் மையலில் சிக்குண்டான் என்று.

* * *

அன்று அரண்மனையில் நாரிமணிகளின் நடனம் ஆரம்பிக்கப்பட்டது. மதத் தலைவன் தக்க மரியாதையுடன் வரவேற்கப்பட்டு ஆசனம் கொடுக்கப்பட்டான் நடனம் துவக்கப்பட்டது. மதத் தலைவன் பாட அன்ன நடையார்கள் ஆடினார்கள். ஆனால் யாரறிவர் அவர்கள் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருப்பர் என்றும், கலை சேவையில் கொலை தொழில் புரிய சதி உருவாகியிருக்கின்றது என்றும், மதத தலைவன் சுடலையில் ஆனந்த நடனம் புரிந்த பரமனைப்பற்றி பாட, சுந்தராங்கிகள் அற்புத நடன மாடினார்கள். ஆபத்துகளில் ஆதரித்த ஆண்டவா, இன்னல் பலவற்றிலிருந்து ஈடேற்றிய ஈசா, இச்சமயம் எங்களை நம்ப மறுக்கும் இவர்களிடமிருந்து காராயோ' என்று பாடும் போது சபையில் அமளி எற்பட்டது. மன்னன் மாண்டு வீழ்ந்தான் அம்பு எய்தப்பட்டு.

அரண்மனை அந்தகாரத்தில் மூழ்கியது. மதத் தலைவன் வேண்டுதலுக் கிணங்கியே பாராள்வோனை பரமன் கொன்றான். என்ற கருத்து அங்குள்ளோர் மனதில் உதித்ததே தவிர சூழ்ச்சியால் முன்னேத் பாட்டால் அம்பு கொண்டு தாக்கி உயிர் போக்கினர் என்று அவர்கள் நினைக்கவில்லை. ஆகவே மதவெறிக் கூட்டத் தலைவர்களுக்கு அடிபணிந்தார்கள். கடவுளின் மறு அவதாரமென்று கொண்டாடினார்கள். அதே நேரத்தில் உழைக்காமல் உல்லாசிகளாக வாழ நினைத்த உலுத்தர்கள் உவகை பூத்தனர். வேந்தன் இறக்த வேதனை தரும் நாளிலே வெற்றி கொண்டாடினர்.

இளவரசன் இராஜ்யபாரமேற்ற இரண்டாண்டுகளுக்குப் பிறகு, வளம் நிறைந்த பொன்னாடு எழில் வாழ்ந்த இன்பம் திளைத்தத் திருநாடு, எடுப்பார் கைப்பிள்ளையாய்த் தேய்ந்து சீரழிய ஆரம்பித்தது.

★

33 - 36 PAGES MISSING IN BOOK



# பெண்ணாசையும்—மண்ணாசையும்.

## "கலைமணி"

வானத்திலிருந்து பூமிக்குத் தாவுகிற விண்மீனை நோக்கிக்கொண்டிருந்தான் சுக்ரீவன். பின்னால் அனுமன் வந்து நின்றான்.

சுக்: வா அனுமா வா.

அனு: தலைவ, என்ன ஆழ்ந்த யோசனையிலிருக்கிறீர்கள்?

சுக்: அதோ! அந்த வட்டத்துக்குள் ஒரு வால் நட்சத்திரம் தோன்றியது. பின் வாயுவேகத்தில் மறைந் தொழிந்தது.

அனு: தங்கள் எண்ணத்துக்கு சாதகம் தான் செய்கிறது.

சுக்: எப்படி ?

அனு: வால் நட்சத்திரம் தோன்றுவது நாட்டின் அரசனது ஆவியைப் பறிக்கு மென்பது ஆரிய பண் பாட்டின் சோதிடக் கூற்று.

சுக்: அதைப்பற்றி நமக்கென்ன?

அனு: தங்கள் அண்ணன் வாலியின் முடிவுக்கு அது வழி செய்தால்......

சுக்: மெய்யாகவா, நிச்சயமாக வழி செய்யுமா?

அனு: அது செய்யா விட்டாலும் நான் நிச்சயமாக செய்வேன்.

சுக்: எப்போது?

அனு: அவர்கள் வந்துக் கொண்டிருக்கிறார்கள்.

சுக்: உம்... எனக்கு நம்பிக்கையில்லை. முன்பு கூடத்தான் ஏதோ பிரமாதமாக செய்து விட்டதாக கூறினாய் அதன் பலன் இன்று நாம் காட்டில் மறைந்து வாழவேண்டியிருக்கிறது.

அனு: இல்லை முன் மாயாசூரன் வதைதிலே அதிக நம்பிக்கைவைத்தேன். குகைக் குள்ளே போரிடும் போது நாம் குகை வாயிலை மூடிவிட்டால் இருவரும் போரிட்டு மடிவார்கள் என்று நம்பினேன். இப்போது நம்பிக்கை வேறு விதத்தில் உருவாகி வருகிறவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. சிறந்த வில்லாளிகள்.

சுக்: எந்த வில்லாளிகளானால் என்ன? வாலியிடம் அதெல்லாம் ஒன்றும் பலிக்காது.

அனு: அவர்கள் நேர் நின்று போரிடப் போவதில்லை. மறைந்து நின்று விஷம் தோய்ந்த பாணத்தால் வாலியின் உயிரைப்போக்குவார்கள்.

சுக்: எப்படி முடியும்! வாலியின் கோட்டை அவ்வளவு வலுவற்றதல்லவே!

அனு: கோட்டைக்குள் போக வேண்டிய அவசியமேயில்லை வாலியை எப்படியாவது

வெளியே கொண்டு வந்து விடவேண்டும். தனிமையில் வாலியை சதி மூலம் கொன்று விடலாம்;

சுக் : வாலி கோட்டையிலிருந்து வெளியே கிளம்பினல் படையில்லாமலா கிளம்புவான். படைவரும் போது நாமாவது எந்த ஆரிய வீரர்களாவது ஓரம் செல்ல முடியுமா?

அனு : இதோபார் சிவலிங்கம் இப்படி லிங்கத்தை வாலியின் மனைவியிடம் காட்டி விட்டால் போதும் தூக்கிக் கொண்டு கீழ் கரை கோடி சென்று விடுவாள் சிவ பூசை செய்ய, அந்த சமயம் வாலியிடம் சந்தேகங்களைக் கிளப்பிவிட்டு விட்டால் வாலி பின் தொடர்வான் அப்போது காரியம் பலிக்காமல் எப்படி போகும்?

சுக் : தாரை வெளியே வருவாளா? என் கண்மணி வருவாளா ஏது இந்த படிகலிங்கம்?

அனு : அந்த ஆரிய புத்திரர்களிடமிருந்து தான் வாங்கி வந்தேன். தாரையின் சிவபக்தியை நான் அறிவேன். காட்டிவிட்டால் போதும் உடனே கீழ்கரை ஓடி விடுவாள்.

சுக் : அவளை நான் சந்திக்க முடியுமா?

அனு : அவசரப்படக்கூடாது வாலிபோன பின் தாரை உமக்கல்லாது வேறு யாருக்கு அதற்காகத்தானே இவ்வளவுபாடும்.

சுக் : சரி எப்படியாவது என் கண்மணியை என்னிடம் சேர்ப்பது உன் பொறுப்பு.

அனு : சரி, சரி அப்படியே ஆகட்டும்... நான் சென்று அவர்களை சந்திக்கிறேன் போகிறுன்.

வனத்தின் ஒரு பகுதியில் இராம இலக்குமணர் வந்துக் கொண்டிருக்கின்றனர்.

இலக் : அண்ணு இந்த மாறு வேடத்தோடு, படையின்றி சென்று நாம் என்ன சாதிக்கமுடியும்?

இரா : படையுடன் சென்றுதான் என்ன சாதிக்கமுடியும்?

இலக் : உங்கள் நோக்கம் ?

இரா : தம்பி வாலி விந்தியத்தின் வாயிலில் இருக்கும் வரைக்கும் நாம் தென்னுட்டை பிடிப்பது என்பது குதிரைக் கொம்புதான்.

இலக் : அதற்கு நாம் தனியே சென்று என்ன சாதித்து விடமுடியும்?

இரா : படையுடன் சென்று தோல் வியுறுவதைக் காட்டிலும் தனியே செல்வது தான் நல்லது. தென்னுட்டு இராவணனை வெல்வதற்கு வடநாடே திரண்டெழுந்தாலும் முடியாது. ஆனல் ஒன்று இராவணன் சீதையை சிறையெடுத்தான் என்ற அபவாத பழியைக் கிளப்பிவிட்டு விட்டோமானல் வள்ளுவன் நெறியைப் பின் பற்றும் தென்னுட்டார் அதை வெறுப்பர். நாட்டிலே நமக்கு கையாள் பிடிக்கலாம், சூதினலும் சூழ்ச்சியினலும் காரியத்தைச் சாதிக்கலாம்:

இலக் :- ஓ அதற்குத்தானு இந்த நாடகம்.

இரா :- மண்ணை பெண்ணைக் காட்டித்தான் பெறவேண்டும். மண் பெறுவது அவ்வளவு எளிதல்ல. அதிலும் தென்னுட்டு மண் ஓரடி ஓராயிரம் பொற்காசு பெறும், நாலாயிரம் ஆனிரை கன்று பொறும். ஆரிய தர்மத்தை தழைக்க வைக்கவேண்டுமானல் நாம் எதையும் செய்யத் தயாராக இருக்கவேண்டும்.

இலக் :- நேற்று நர்மதையின் வடபால் தங்களை வந்து கண்டவன் யார்?

இரா :- வாலியின் தம்பி சுக்ரீவனின் நண்பன், நமக்கு வழிகாட்டி, அவன் வாலியின் ஒழிப்பில் முதல் அங்கம் வகிக்கிறுன். வாலி வீழ்ந்தால் சுக்ரீவன் அரசனுவான். நாளா வட்டத்தில் என் ஆறு மாதத்திற்குள்ளாகவே வாலியின் மாபெரும் சைன்யத்தைக் கூட்டிக் கொண்டு நாம் இராவணன் மேல் படையெடுக்க முடியும்.

இலக் :- சைன்யம் எப்படி நம்மோடு சேரும்?

இரா :- சுக்ரீவன் அரசனானபின் நாம் நமது பிரச்சாரத்தை தொடங்கலாம். இராவணன் சீதையை சிறை யெடுத்து சென்றதுபற்றியும் அங்கு செய்யும் கொடுமை பற்றியும் கூறி அக்கொடியோனை யொழிக்கக்கிளம்புங்கள் என்றால் கிளம்புகிறார்கள். மேலும் நாம் அனுமனை விட்டு, போய் பார்த்துவிட்டு வந்தது போல் சொல்லு என்றால் அவன் ஒன்றுக்கு நான்காக அளக்கிறான், அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமல்லவா?

இலக் :- இதனால் அண்ணிக்கு இழுக்கு ஏற்படுமல்லவா?

இரா :- என்ன இழுக்கு? நாடு பிடிக்க நாம் செய்யும் தந்திரமா இழுக்கு. இல்லை, நாம் செய்யும் இந்த சரித்திர வரலாறுதான் என்றென்றைக்கும் நமக்கு பெருமையை அளிக்கப்போகிறது.

இலக் :- சரி, சுக்ரீவன் எப்படி நம்மோடு நட்பு கொண்டாடுவான்? அவனுக்கும் அவன் அண்ணனுக்கும் ஏற்பட்டதகராறு யாது?

இரா :- நாம் மண்ணாசை கொண்டு வேலை செய்கிறோம். அவன் பெண்ணாசை கொண்டு பேதலிக்கிறான். அவளின் அண்ணன் மனைவி தாரை மிகவும் அழகியாம். இவனுக்கு அவள் பேரில் அதிக ஆசையாம் முன் ஒருதரம் வாலியை குகையுள் அடைத்துவிட்டு தாரையோடு கூடிக் கிடைந்தானாம். சண்டைமுடிந்து வெளி வந்த வாலி தம்பியின் அடாத செய்கை கண்டு அடித்து நாட்டை விட்டே துரத்தி விட்டானாம். பெண்ணாசை எளிதில் மறையக் கூடியதா? அண்ணனைக் கொன்றாவது அணங்கை அடைய வேண்டுமென்று அரும்பாடு படுகிறான்.

இலக் : நாம் சென்று மாபெரும் வாலியைக் கொன்று விடமுடியுமா.

இரா : தூரத்தே மறைந்து நின்று வில்லால் அடிப்பது பின் எதற்கு தான் சிறந்த வில் வித்தையைப் பயின்றிருக்கிறேன்.

இலக் : அண்ணா அதோ.........

(தூரத்தே அனுமான் வருகிறான். இருவரும் அவனை நோக்கி செல்கிறார்கள்).

வாலி அரசிருக்கையில் அமைர்ந்திருக்கிறான். ஒருவன்வந்து அவனிடம் ஒரு ஓலையைக் கொடுக்கிறான் வாலியின் புருவம் சுளிக்கிறது. விர்ரென்று எழுந்து நடக்கிறான். நேரே குதிரையேறி கீழ் கரை செல்கிறான். அங்கு.........

சுக் : பிரியே வந்தாயா?

தாரை : நீங்களா, இங்கே எங்கே?

சுக் : நீ இங்கு பூஜைக்கு வருவாய் என்று எனக்குத் தெரியும் ஓடோடி வந்தேன்.

தாரை : இல்லை...இனி நீர் என்னை மறந்து விடவேண்டியதுதான். அவர் காதில் கேட்டால்......

சுக் : அண்ணன் காதில் தானே...கேட்காது நிச்சயமாக கேட்காது. நமக்கும் கிஷ்கிந்தைக்கும் மூன்று காதமிருக்கிறது.

தாரை : நான் பூஜை செய்யப் போகிறேன்.

சுக் : இந்தப் பூஜையை விடவா, வா, நீ என் தோளைத் தழுவாது என் தோள் வலியும் போய் விட்டது.

தாரை : என்ன இது விபரீதம்.

சுக் : விபரீதமல்ல, வெகு நாளைக்குப்பின் கெஞ்சுகிறேன். மறுக்காதே, உன் பவழவாய் இதழோடு என் இதழ்களை பொருத்தாவிடில் என் உயிர் தரிக்காது.

தாரை : அன்பரே அடாது, நான் அவருடைய பத்தினி சோரம் போவது மன்னிக்க முடியாத குற்றம். தயவு செய்து மறந்துவிடுங்கள்.

சுக் : மறப்பதா ! நடக்காது பெண்ணே நடக்காது. குற்றம் என்பது என்ன? என்னுடையதா குற்றம்? நீ அழகாகயிருக்கிறாயே அது குற்றம். உன் கண்கள் பேசுகின்றனவே, அவைகள் குற்றம்.

தாரை: மெய்பாகவா அன்பே.

சுக்: அதை என்னிடம் ஏன் கேட்கிறாய், இதோ என் இதயத்திடம் கேள் அது கூறும்,

தாரை: சுக்ரீவன் மார்பில் புதைக்கிறாள் பின்னால் வாலியின் கை சுக்ரீவன் பிடறியைத் தாக்குகிறது, திரும்புகிறான். வாலி நிற்பதைக் காண்கிறான். ஓடுகிறான். வாலியும் பின் துரத்துகிறான் மரத்தின் மறைவில் நின்றுக் கொண்டிருந்த இராமன் அம்பெய்கிறான். விஷ அம்பு வாலியின் இருதயத்தை நோக்கிப் பாய்கிறது.

வாலி: யாரது! (அம்பைக்கையினால் பிடுங்குகிறான்) யாரது? (இராமன் பின்னும் மறைகிறான்) ஏய் மறைந்து நின்று வில்லாலடிக்கும் அந்த பேடியார். வீரமிருந்தால் வெளியேவா (ஊத்துக்கத்துகிறான்).

தன் காரியம் முடிந்ததும் இராமன் வெளியே வருகிறான்.

வாலி:- ஓ ஆரிய புத்திரர்களா? அடேய் நான் உனக்கு செய்த தவறு என்ன? குற்றமென்ன?

இரா:- குற்றம் செய்ய வேண்டிய அவசியமே யில்லை. எளியோனுக்கு உபகாரம் செய்வது தான் என் தர்மம்.

வாலி: யார் எளியோன்? எது தர்மம்? பிறன் மனைவியை இச்சித்த, அதுவும் தாய்க்கு சமானமான அண்ணனின் மனைவியை இச்சித்தவனையா நீ இரட்சிப்பது? நல்ல நியாயம். பெண்ணைசை கொண்டவன் பால் நீதியுளது என்று நம்பி பேடிபோல் என்னை மறைந்து விஷ முள்ளால் குத்திவிட்டாயே பாதகா? ஐயோ (திக்கலும் திகைப்பும் வாயை அடைக்கிறது) தலையைச் சுற்றுகிறது...உம், பாதகனை பழி வாங்கக் கூட முடியாது போலிருக்கே வஞ்சகம் வென்று விட்டதே! (தலை சாய்கிறது).

மண்ணைசை வென்று விட்டது. சுக்ரீவனின் பெண்ணைசை நாட்டை அந்நியரின் காலடியில் கிடத்தியது.

—திரை விழுகிறது—

——

எமது வாடிக்கைக் காரர்களுக்கு
எமது மனமார்ந்த பொங்கல் வாழ்த்து.

PANDEE'S DRAPERY
(பாண்டீஸ் டிராபெரி)

பி. அண்டு ஸி. மில் ஜவுளி, இதர மில்
கை நெசவு ஜவுளி வியாபாரம்,
25, மணிகார சவுல்ட்ரி ரோட்
(பில்தோட்டம் அருகில்)
வண்ணாரப்பேட்டை, :: சென்னை.
உரிமையாளர்:- எம். ஆர். பாண்டியன்.

கிருஷ்ணா & கோ.,
20-A, எல்லிஸ் ரோடு, சென்னை-2.

தையல் மிஷினை குறைந்த செலவில் குறித்த காலத்திற்குள் உத்திரவாதத்துடன் ரிப்பேர் செய்து கொடுக்கப்படும்.
உரிமையாளர்;- என். கிருஷ்ணன்.

# “ வீரர் பரம்பரை ”

என். எஸ். இளங்கோ

நாட்டு விடுதலைக்காக போராட தியாக தீயிலேத் குதிக்க ஆர்வத்தோடு ஆயிரமாயிரம் வீரர்கள் கூடி நின்றார்கள், மதுரை மாநாட்டிலே! மாநாட்டின் வெற்றி ஒரு சிலரின் ‘கௌரதையை’ குலைக்கிற அளவுக்கு வந்து விட்ட படியினால் அவர்களின் சதி வேலையை துவக்கினார்கள்! பல தோழர்கள் வீதிகளிலே தாக்கப்பட்டார்கள், தாய்மார்களின் உடை நடு வீதியிலே களையப்படுகிற அளவுக்கு காலித்தனம் மிகுந்தது; கடைசியாக மாநாட்டு பந்தல் நெருப்பு வைக்கப்பட்டது. தலைவர் கட்டளையோ அமைதியாக கலையுங்கள் என்பதே! ஆத்திரம் கொண்ட கூட்டம் அமைதியாக கலைந்து ‘வெற்றி’ கண்டோரின் கேலிப்பேச்சு மானத்தை பிடுங்கிய போதிலும் பொறுமையோடு கலைந்தனர்!

நாங்கள் என்ன அந்த ஊரிலே எங்கள் கல்லறை இருக்கவேண்டும் என்ற ஆசையிலா வந்தோம்? நாங்களும் புறப்பட நேரம் பார்த்துக் கொண்டே இருந்தோம். நடு நிசியாகவே ஊர் அடங்கியிருக்கும் என்ற எண்ணத்தோடு மதுரையை விட்டு நழுவ ஆரம்பித்தோம். எங்கள் மோட்டார்கார் சத்தம் போடாமல் மதுரையின் வீதிகளிலே ஓடி பின் காரைக்குடி பெரும் பாதையிலே திரும்பிற்று. பின் எங்கள் கார் 55, 60. என மையில் காட்டிற்று.

கொஞ்ச தூரமே சென்றிருப்போம். வானம் கருக்க ஆரம்பித்தது. “வீர் வீர்” என்ற சூராவளிக் காற்றும் அத்துடன் பெரும் அளவில் மழையும் கொட்ட ஆரம்பித்தது. எங்காவது சற்று தங்கிப் போகலாம் என்றே கருதினோம். நள்ளிரவு, மக்கள் அயர்ந்து தூங்குகிறநேரம். நாங்கள் எங்கே தங்குவது? காரும் மிக மிக மெதுவாகச் சென்று வெளிச்சம் தெரிந்த ஒரு வீட்டின் முன்னே நின்றது. பலர் கூட்டமாக நின்றனர்.

கொஞ்சம் ஒதுக்கமாக காரைவிட்டு விட்டு சத்திரம் போல காணப்பட்ட அந்த வீட்டின் திண்ணையில் சற்று ஒதுங்கினோம்! எங்களை ஒரு வராவது வரவேற்காதது ஆச்சரியமாகவே இருந்தது. அவர்கள் அழைக்காவிட்டால் தான் என்ன ? கொஞ்சம் மழை விட்டதும் புறப்படலாம் என்று கருதியே திண்ணையில் ‘அமர்ந்தோம்.

என்ன இருந்தாலும் மனிதனுக்குள்ள பண்பு உள்ளே என்ன நடக்கிறதென்பதை பார்க்க தூண்டுகிறதல்லவா? எங்களிலே ஒருவர் பெண், வெடுக்கு, வெடுக்கென பேசுவாள். பெயர் ராணி. உள்ளே சற்று தைரியமாகவே சென்றாள். அவளின் உடையையும் அழகான தோற்றத்தையும் கண்ட அவர்களில் யாரும் அவளை தடை செய்யவில்லை! நேரே உள்ளே சென்றவள் திரும்பி வந்தாள்.

“தலைப்பிரசவமாம். வேதனைப்படுகிறாள் பாவம்!”

அப்பொழுது தான் நாங்கள் புரிந்து கொண்டோம் அங்கிருந்தவர்களின் மூக வாட்டத்திற்கான காரணத்தை சற்று நேரம் எல்லோரும் மௌனமாகவே இந்தோம்.

“வீர்” என்ற சத்தத்தை தொடர்ந்து ராணி வெளியே ஓடி வந்தாள்.

“ஆண் குழந்தை! தங்க விக்கிரகம் போல” என்றாள்.

“என்? கால் கைகளை அசைக்கவே இல்லையா?” என்றார் எங்களுடன் இருந்த நகைச்சுவை விரும்பி!

அது வரையிலும் எங்களுக்கு பக்கத்லே இருந்த பொக்கவாய் தொண்டு கிழமான பெரியவர் ஒருவர் தன் கச்சத்திலிருந்து ஒரு சிறு பொட்டனத்தை எடுத்தார். ராணியின் கையில் அதை கொடுத்தார்,

“அம்மா, ஓடு இதை கொண்டுபோய் அங்குள்ளவர்களிடம் கொடு” என்றார்

“சூரணம் போலும்!” என்றாள் ராணி.

“இல்லை விழுதியாக இருக்கும்” என்றார் நம் பழைய நண்பர். பெரியவர் எங்களை எல்லாம் கூர்ந்து

கவனித்தார். எங்கள் தோற்றமும், சோழ நாட்டவர்களாகிய எங்களின் பேச்சும் பாண்டிய நாட்டவரான அவரினின்றும் எங்களை பிரித்தது! தலையை அசைத்து விட்டு கூறினார்.

"சூரணமும் அல்ல, விழுதியும் அல்ல தம்பிங்களா; வெரும் மண் தம்பி, வெறும் மண்" என்றார் அழுத்தம் திருத்தமாக!

"மண்ணா? குழந்தைக்கா?"

"அது வெறும் மண்ணல்ல தம்பி! வீரம் விளைந்த "மண்! தண்ணீரில் இந்த மண்ணைப் போட்டு, பிறந்த குழந்தைக்கு அந்த நீரை கொடுத்தால் வீரம் விளையும் தம்பி நாட்டு பற்று மிக்கவனாக இருப்பான்! அதுவும் ஆண் குழத்தையல்லவா?"
வேறு யாரோ உள்ளே இருந்து வெளியே வந்தார்கள். மண்கட்டிய காகித பொட்டணத்தை கொடுத்தனுப்பினார் பெரியவர். சற்று நேரத்தில் அந்த மண்ணூறிய நீரை குழந்தைக்கு கொடுத்தார்கள் என்பதையும் தெரிந்து கொண்டோம்!

ராணிக்கு வாய்துடுக்கு! கேட்டாள்:

"அந்த குழந்தை பிழைக்கவா போகிறது?"

"தங்கச்சி! அந்த குழந்தை பிழைப்பது மட்டுமல்ல! தமிழனுக்கு பிறந்தோம் என்று தலை நிமிர்ந்து நிற்கும்! அந்த மண்ணெடுத்த இடத்தின் மகத்துவம் அது, அது! பெரியகதை!" என்றார் பொக்கைவாய் கிழவர்.

வயது போனவர்கள் கதை சொல்ல எப்போழுதுமே தயார், நானோ எதடா தொல்லை என்று கூட கருதினேன். ஆனால் பெண்களோ கதை என்றால் விடுவார்களா? கதை சொல்ல தூண்டினாள். பின் கூறினாள்:

"என்ன கதையாகத்தான் இருந்தாலும் மண்ணுக்கு வீரம் இருக்க முடியாது பெரியவரே!" என்றாள்:

பெரியவர் சிரித்தார். நான் வானத்தை நோக்கினேன். மழை நன்றாக பெய்து கொண்டிருந்தது! நேரம் போகவேண்டாமா? சொல்லட்டுமே என வாளா விருந்து கேட்டேன்.

"திண்டுக்கல் கோட்டை அப்பொழுது பலம் பொருந்திஇருந்தது, கூடவும் கும்பினியார்கள் தங்கள் படைகளின் கேந்திரஸ்தானமாகவும் அதை கொண்டிருந்தார்கள். இரண்டு இளைஞர்கள் கையில் விலங்கு பூட்டப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தார்கள் கோட்டையின் பந்தோபஸ்தான இடத்திலே! பக்கத்திலே இரண்டு வெள்ளைக்காரர் வீரர்கள் குண்டு பூட்டிய துப்பாக்கியோடுநின்றார்கள்! இருபது அடிக்குமுன்னால் தூக்குமேடை பயங்கரமான காட்சி அளித்தது! சுருக்கிடப்பட்ட கயிறுகள் வரிசையாக தொங்கி கொண்டிருந்தன. எத்தனை வீரர்கள் தூக்கிடப் பட்டார்களோ அந்த மேடையில்?

கோட்டையின் மறு பாக்கத்தில் மணியோசை கேட்டது வெள்ளைக்கார வீரர்கள் இருவரும் நிமிர்ந்து நின்றனர். அடுத்த நிமிஷம் அந்த சதுக்கத்தின் ஓரத்தில் திட்டிவாசல் திறக்கப்பட்டது! சுமார் பத்து பனிரெண்டு வீரர்கள் கொண்டு வந்து நிறுத்தப் பட்டார்கள்! நல்ல கட்டமைந்த உடல். வீரர் பரம்பரை அவர்கள் என்பது அவர்களின் ஒளி பொருந்திய முகமே காட்டியது! அந்த வீரர்கள் அத்தனைபேரும் தூக்குமேடையிலே நிறுத்தப்பட்டார்கள் இளைஞர்கள் நிற்கும் இடத்துக்கும் வீரர்கள் நிற்கும் இடத்துக்கும் சுமார் இருபது அடிகள் இருக்கும்.

கும்பினிக் காரர்களின் 'கும்மாந்தன்' அதிகாரம் தொனிக்க பேசினான்:

"நீங்கள் அத்தனை·பேரும் இந்த இளைஞர்களுக்கு முன்னே தூக்கிடப்படபோகிறீர்கள்! நீங்கள் சாவதற்கு முன்னே எதாவது சொல்லவேண்டியிருந்தால் சொல்லுங்கள்".

பல வீரர்கள் என்னென்னமோகூறினர். இரண்டு இளைஞர்களும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த பயங்கரமான காட்சி எதிரே நடந்தேறியது! ஒருவர் பின் ஒருவராக சுருக்கிடப்பட்ட கயிற்றிலே தொங்கினார்கள்! ஆனால் அந்த சிறுவர்களோ கொஞ்சம் கூட அஞ்சினவர்களாக தெரியவில்லை. ஒவ்வொரு வீரனுடைய உயிர் பிரிகிறபோதும் நெஞ்சை உயர்த்தி கண்களைமூடி இறுதி வணக்கம் செலுத்தினர். கடைசியாக இரண்டு வீரர்களே பாக்கி!

"சின்ன மருது! எதாவது கூறுவதாக இருந்தால் கூறலாம்!" என்றான் கும்மாந்தன்.

மருது கூற ஆரம்பித்தான்:

"நாட்டுக்காக உழைத்த நான் தூக்குமேடையிலே நிறுத்தப்பட்டுள்ளேன். உலகத்திலேயே மாபெரும் தவறு இருக்க முடியுமானால் அது நாட்டுக்குழைத்தவர்களை தூக்கு மேடையிலே எற்றுவதே! அவனவன் நாட்டுக்கு அவனவன் போராடுகிறான்: அதிலே யார் குற்றவாளி? யார் குற்றமற்றவன்? உண்மையில் இந்த தூக்கு மேடையிலே எற்றப்படவேண்டியவர்கள் நாங்களல்ல! பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து இந்த நாட்டுக்கு வந்து இந் நாட்டுக்

குறியவர்களை தூக்கு மேடையிலே எற்றுகிறீர்களே அந்த நீங்கள் குற்றவாளிகள்! பால் மணம் மாறாத இந்த இளம் குழந்தைகளின் முன்னே நாங்கள் சாவதை வேடிக்கை காட்டுகிறீர்களே இது கொடுமை மனித நீதிக்கெல்லாம் அப்பால் பட்டது!

"இந்த இளம் குழந்தைகளால் என்ன செய்து விடமுடியும்? அவர்களை புரட்சிக்காரர்கள் என் விலங் கிட்டு நிறுத்தியிருக்கிறீர்களே, நீங்கள் கோழைகள்!

"இளைஞர்களே! நீங்கள் எவ்வாறு இந்த கொலை காரர்களிடம் அகப்பட்டீர்கள்? வீரத்திற்கு மதிப்பளிக் காத இந்த சதிகாரர்களிடம் எவ்வாறு சிக்கினீர்கள்? நீங்கள் யாரென்பதை தெரிந்து கொண்டீர்களா?..."

வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டான்! அவன் கண்களுக்கு முன்னே பல பல நிகழ்ச்சிகள் வந்து வந்து போயின. வாயடைத்தது. அவனும் அவன் சகோதரன் பக்கத்திலே நின்ற பெரிய மருது வும் சிவகங்கை சீமையை சேர்ந்தவர்கள். கும்பினி யார்களின் நாடு பிடிக்கிற ஆசை மேலும் மேலும் அதிகமாகியது. அவர்களை எதிர்த்து நின்றவர்கள் பாஞ்சாலங்குறிச்சியை சேர்ந்த கட்ட பொம்மு ஊமைதுரை, கட்டபொம்மு 1799-ம் ஆண்டு அக்டோ பர் மாதம் 16 தேதியன்று கயத்தாறு கோட்டை வாச லில் புளிய மரத்திலே தூக்கிடப்பட்டான். ஆனால் ஊமை துரையோ பாளையங்கோட்டை சிறையிலே அடைக்கப்பட்டான் அதனின்றும் தப்பித்துக்கொண்ட ஊமைதுரை மறுபடியும் பாஞ்சாலங் குறிச்சி கோட் டையை செப்பனிட்டான் மருது சகோதரர்களின் பக்க பலத்தை கொண்டு மருபடியும் போர் முழக்கம் செய்தான் ஊமைதுரை! அந்த போரிலே கோட்டை தகர்க்கப்படுகிற வரை போராடினார்கள், அதில் சிக் கிய ஊமைதுரை பாஞ்சாலங் குறிச்சியிலேயே பீரங்கி மேடையில் தூக்கிடப் பட்டான் இந்த பழைய சம்ப வங்கள் அவன் கண் முன்னே தோன்றியது:

பின் தொடர்ந்தான்:

"ஊமை துரையும் நாங்களும் போராடினோம் கோட்டையின் ஒரு பகுதியில் சக்தி இருக்கிற வரை ஒரு துப்பாக்கி எங்களிடம் இருக்கிற வரையில் போராடினோம். கடைசியாக நாங்கள் பிடி பட்டோம்.

"எங்களுக்கு முன்னே தான் கோட்டை இடித்து தரைமட்டமாக்கப்பட்டது! எங்கே மறுபடியும் அந்த மண்ணிலே வீரம் விளையுமோ எனக்கவலை கொண் டார்கள் கும்பினியார்கள்! தம்பி உங்கள் தாய் நாட் டின் மண்ணிலே, உங்கள் தந்தையாரும் மூதாதை யாரும் வாழ்ந்த நாட்டின் மண்ணிலே, கலப்பையில் கழுதைகளை பூட்டி உழுதார்கள்......! தமிழனும் தமிழச்சியும் கூடி குலவிய இடத்திலே காறி உமிழ்ந் தார்கள்! தமிழ்கலையும் காவியமும் வளர்ந்த இடத் திலே அகமும் புறமும் வானளாவ எழும்பிய இடத் திலே எருக்கம் செடிகளின் விதைகளை தூவினார்கள் உங்கள் தந்தையரின் கண் முன்னே தான் உங்கள் தாய் நாட்டுக்கு இவ்வளவு அவமானமும் நடந்தது!

நாட்டின் செழுமை அற்றுப்போக, புல் பூண்டு கள் முளைக்கா தொழிய உப்பை வாரி வாரி இறைத் தார்கள். உங்கள் தந்தைக்கோ பேசவாய் இருந்திருக்கு மானால் ஆயிரமாயிரம் கூறி இருப்பார். அவரோ வாய் பேசமுடியாதவர், ஊமை! தமிழகத்திலே வீரத்துக்கு எடுத்துக் காட்டாக, இருந்து அன்னியனை அண்ட முடியாமல் செய்த ஊமைதுரை!......"

இளைஞர்களின் கண்கள் நெருப்பை போல சிவந் தன! வீரர் பரம்பரை என்றதும் கொஞ்சம் நிமிர்ந்து நின்றனர்! அந்த நிலையை கண்டதும் புன் னகை பூத்தான் சின்ன மருது! பெரிய மருது பேச ஆரம்பித்தான்:

'கும்பினியார்களுக்கு எங்கள் நன்றி! தூக்கு மேடையிலே நிற்பவர்களின் பேச்சு காற்றிலேதான் கலக்கும். எங்கள் பேச்சோ வீண் போகவில்லை. பாஞ் சாலங்குறிச்சி மண்ணுக்குடையவர்களிடையே நின்று பேசிக் கொண்டிருக்கிறோம்! நாங்கள் தூக்கிடப்படு வதை கண்டு நீங்கள் அஞ்சவேண்டும் என நிறுத்தப் பட்டிருக்கிறீர்கள். ஒரு வேளை நீங்களும் தூக்கிடப்பட் டாலும் படலாம்! நாம் கூண்டுக்கிளிகள்! ஆனால் என் நம்பிக்கை வீண்போகாது. என்றைக்காவது ஒரு நாளைக்கு இந்த வெள்ளைக் கொக்குகள் இந்த நாட்டைவிட்டு பறந்து தான் போகப் போகின்றன, நீங்கள் சாகாவிட்டால் உங்கள் கடமையை நிறை வேற்றுங்கள். கோழைகளாக அஞ்சிவாழாதீர்கள். தாய்நாடு அருமை தமிழகம் அன்னியனிடம் சிக்கி சீரழிவதை கண்டு வாளாயிராதீர்கள், வருங்காலம் தன் கடமையை செய்யும், எங்கள் இரத்தம் வீண் போகாது!" கறுப்பு துணியை அவர்களின் தலையிலே முக்காடிட்டார்கள் ஒரு அலட்சிய பார்வையை கும் மாந்தன் மேல் வீசி ஒரு புன் சிரிப்பை இளைஞர்களின் மேல் வீசி கறுந்துணிக்குள்ளே தலையை விட்டார்கள் அடுத்த நிமிடம் இரண்டு உடல்களும் உயிரற்று தொங்கின!

கண் கொட்டாது அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த இளைஞர்களின் கண்களிலே நீர் துளித்தது!

* * *

இதுவரை அமைதியாக கேட்டுக் கொண்டே வந்த நாங்கள் பெருமூச்சுவிட்டோம்.

“ஆமாம் தாத்தா? அந்த இளைஞர்கள்யாரென்றே தெரிந்து கொள்ளாமலா இருந்தார்கள்?” ராணி குறுக்கிட்டாள்.

தாத்தா கொஞ்சம் பொடி எடுத்துப் போட்டுக் கொண்டார். பின் தொடர்ந்தார்.

“ஆம் யாரென்றே அவர்களுக்கு தெரியாதுதான் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை வீழ்ந்த பொழுது ஊமைதுரை தான் பிடிபட்டாரே ஒழிய அவரின் மனைவியும் மகன்கள் இருவரும் தப்பித்து விட்டனர். நாடு முழுவதும் ஒற்றர்களை ஏவினார்கள்! வெறும் மண்ணையே கழுதை கட்டி உழுதவர்கள் அவரின் பரம்பரையை விடுவார்களா?”

*　　　　*　　　　*

“சிவகங்கையின் வீதிகளிலே ஒரு குடியானவன் கன்றீந்த மாடு ஒன்றை விரட்டிக்கொண்டு வந்தான், அந்த காலங்களில் எல்லாம், பணம்படைத்தோரும் அரண்மனை வாசிகளும் பசு கறந்தபின் மலடாகும் காலங்களில் கிராம வாசிகளிடம் ஒப்புவிப்பது வழக்கம். அவ்வாரே ஊமைதுரையின் மனைவி குடியானவன் ஒருவனிடம் ஒப்பு வித்திருந்தாள். அவள் சிவகங்கையிலேஇருக்கிறாள் என கேள்விபட்டஅவன் அங்கு தேடிச் சென்று அவளை ஏற்றுக்கொள்ளவேண்டினான். அவளோ தானல்ல என்று மறுத்தாள்! “உன்னுடையதுதான்” என வாதியும், “என்னுடையதல்ல உன்னுடையதே’ எனப்பிரதி வாதியும் கூறும் இந்த விசித்திர வழக்கு மக்களிடையே பரபரப்பை உண்டாக்கி பின் நாடுமுழுவதும் பரவிற்று! இதை கேள்வியுற்ற கும்பினி ஒற்றர்கள் சிவகங்கையில் கூடி அவளின் வீட்டை சோதனையிட்டார்கள். ஆனால் அவளோ அவள் ஒருத்தியாகவே இருந்தாள். ஆனால் சந்தேகம் பலத்தது. ஒரு மாபெரும் சூழ்ச்சி உருவாயிற்று. அந்த ஊரிலே இருந்த பத்து வயதுகுட்பட்ட குழந்தைகள் அத்தனை பேரும் ஊர்மைதானத்தே கூடவேண்டும் எனபறையடித்தனர்.

வீரத்தாய் இப்பறை கேட்டு வெகுண்டாள் எவ்வாறாயினும் தன்மக்களை காப்பாற்ற வேண்டும். அவர்கள் நாட்டு விடுதலை போராட்டத்தை தொடர்ந்து நடத்த வேண்டும் என கனவு கண்டாள் அது வெறுங்கனவாகிவிடுமோ என அஞ்சினாள். பறையடிப்பவன் கூவினான்:

“மறைந்திருப்பவர்களும், மறைத்துவைப்பவர்களும் கொடும் தண்டனைக் குள்ளாவார்கள்......இது கும்பினியாரின் கண்டிப்பான உத்திரவு!......”

ஒரு வேளை அவர்களை தாய்தகப்பன் பெயர் கேட்டால்...? யாரின்பெயரைகூறுவர் தன்னரும்குழந்தைகள்? பெயர்கூறாது நிற்பரே! அதுதானே தேவை தேடி அலையும் கும்பினியாருக்கு. கெட்டது குடி மறைந்தது வீரர் பரம்பரை என்றே எண்ணினாள்”

“ஊர் பொதுவிடத்தே இளைஞர்கள்கூடினார்கள். பெற்றோர்களும் மற்றோர்களும் என்ன நடக்குமோ என அஞ்சி ஆங்காங்கு கும்பலாக கூடி நின்றார்கள். கும்பினியாரின் ஒற்றர்களில் முக்கியமானவர்கள் ஒரு குதிரை படையை வீதிகளிலே செலுத்தி மைதானத்திலே நிறுத்தினார்கள்.

ஒற்றர் தலைவன், பரங்கி ஒருவன் மட்டும் குறுகுறுத்த பார்வையோடு நெஞ்சை நிமிர்த்தி நின்ற இரண்டு இளைஞர்களை கண்டான். சந்தேகம் வலுத்தாலும் வாளா இருந்தான். ஊமைத்துரையின்மனைவி என சந்தேகப்பட்டவள் குதிரை வீரர்களால் ஆக்கப்பட்ட வட்டத்திற்குள்ளே கொண்டு வந்து நிறுத்தப்பட்டாள். ஒருவன் ஒவ்வொரு குழந்தையின் தாய் தந்தையரின் பெயரை கேட்டுக்கொண்டே வந்தான் மற்றொருவன் வீரத்தாயின் முக மாற்றங்களையே கவனித்துக் கொண்டுவந்தான்.

அந்த இருவர்கள் வந்தார்கள்: சிங்கம் போன்ற கர்ச்சனையில் அதிகாரத் தோரணையிலே கும்மாந்தன் கேட்டான்: “நீங்கள் யார்?”

எவ்வளவு தான் கட்டுப் படுத்தியும் முடியாமல் தன் காதுகளை மட்டும் கூர்மையாக்கி கொண்டு அவர்கள் கூறப்போவதை உன்னிப்பாக கவனித்தாள் வீரத்தாய்!

‘நான் தமிழன்!” என்றான் சின்னவன்!

“நான் தமிழ்ச்சியின் மகன் என்றான் பெரியவன்.

தாயின் முகம் மலர்ந்தது—கும்மாந்தன் திடுக்கிட்டான்—ஊர் மக்களோ நிமிர்ந்து நின்றார்கள்—புதிய உரம் கண்ட பயிர்கள் போல.

தாய் பெயருக்காக எவ்வளவோ கேட்டும் பயனில்லை. ஆனால் இந்த ஒரு காரணத்திற்காக அவர்களை கைது செய்தால் கலெக்டர் ஒத்துக் கொள்ள மாட்டானே! நாட்டுப்பற்றினால் ஒரு வேளை, கூறியிருந்தால், எனவே வேறு வழியை பின்பற்றினார்கள். வட்டத்திற்குள்ளே தின் பண்டங்கள்—வித விதமான வர்ணம் பூசிய பொம்மைகள் யாவும் வைக்கப்பட்டன! நடனம்புரியும்நடராஜப்பெருமானின் விக்கிரகம் ஒரு இளைஞன் மனதை கவரும். இராமனின் சிலை மற்றவனின் குறி.

கும்மாந்தன் பேசினான்:

“உங்களை எல்லாம் நாங்கள் கண்டதற்கு மிக மிக மகிழ்கிறோம். இதோ இந்த பொருள்களில் தேவையானவைகளை நீங்கள் எங்கள் பரிசாக எடுத்துக் கொள்ளுங்கள். வீடு திரும்புங்கள்.”

அத்தனை இளைஞர்களும் ஓடினார்கள். தேவைப் பட்டவைகளை எடுத்துக் கொண்டார்கள். ஒவ்வொருவரும் கலைய ஆரம்பித்தனர். தாய் மகிழ்ந்தாள்-தன் பரம்பரை காப்பாற்றப்பட்டதே என்று.

ஆனால் பெரியவன் ஓடினான் சிறியவன் ஓடினான். அவர்களும் தேவைப்பட்டதை எடுத்தார்கள். கும்மாந்தன் கைது செய்தான் அவர்களை! ஊமைதுரையின் மக்களே அவர்கள்—பாஞ்சாலங் குறிச்சி மண்ணுக்குடையவர்களே அவர்கள் என நிச்சயம் கூற தயாராக இருந்தான்!

இதுவரை அமைதியாகவே கேட்டுக் கொண்டு வந்த ராணி இடைமறித்தாள்.

"என்ன தாத்தா? என்ன தான் அவர்கள் அப்படி எடுத்தார்கள்?" என்றாள்.

கிழவனார் தன் பொக்கை வாயைக் காட்டி சிரித்தார். பின் தொடர்ந்தார்.

"பாஞ்சாலங் குறிச்சி மண்ணுக்குடையவர்கள் என்பதை காட்டி விட்டார்கள். வீரம் விளைந்த மண்ணிலேதான் பிறந்தோம் என்பதை நிரூபித்து விட்டார்கள்! பெரிபவன் எடுத்தது துப்பாக்கி! சின்னவன் எடுத்தது உடைவாள்!"

நானும் திடுக்கிட்டேன் இதுவரை கதை கேட்டு வந்த எங்களை அந்த பெரியவர் எவ்வளவுக்கு கவர்ந்து விட்டார்! அந்த மண்ணுக்கு அவர் காட்டிய மரியாதையை நாங்களும் காட்ட ஆரம்பித்தோம்!

"இப்பொழுது பிறந்த குழந்தைக்கு கொடுத்தோமே மண்-அது பாஞ்சாலங் குறிச்சியிலே எடுத்தது வீரம் விளைந்த மண் வீரத்தையே உண்டாக்கும்' என்று முடித்தார்.

"தாத்தா அந்த மண்ணிலே கொஞ்சம் இப்பொழுது வேண்டுமே இருக்கிறதா?" என்றாள் ராணி.

"ஏனம்மா உனக்கு பிறக்கிற குழந்தைக்கு கொடுக்க இப்பொழுதே பத்திரப்படுத்தப் போகிறாயா?" என்று பெரியவர் சொன்னதும் ராணி வெட்கத்தால் குனிந்தாள். நாங்கள் எல்லோரும் சிரித்தோம்!

அவள் நிமிர்ந்தாள் "இல்லை தாத்தா இந்த 'ஆம்பிளைகளுக்கு' கொடுக்க!" என்றாள்.

நான் சிந்தித்தேன் மதுரை மாநாட்டிலிருந்து வெளியேறிய எங்களையே அவள் சுட்டுகிறாள்!

வானத்தை பார்த்தேன். பொழுது விடிய ஆரம்பித்திருந்தது. மழையும் கொஞ்சம் நின்றிருந்தது. நாங்கள் அந்த ஊரை விட்டு புறப்பட்டோம்.

———


காரம், குணம், மணம் நிறைந்த




# எவரெஸ்ட் சிகரத்தைப்போல் உயர்ந்தவை!

சென்னை நகரத்திற்கும், ஏஜண்டு இல்லாத இடங்களுக்கும் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை!

விபரங்களுக்கு:

**கே. எஸ். எஸ். அய்யாசாமி,**
எவரெஸ்ட் சுருட்டுத் தொழிற்சாலை,
விருதுநகர்.

# வாழ்க்கைப் போராட்டம்

பு. தி. லோகநாதன்

பரந்து கிடக்கும் இப்பாரிலே பிறக்கும் உயிர்கள் ஜீவன்கள் பலப்பல. இறப்பவையும் அதற்குச் சமம்! உலகில் உயிர்த்து இறந்துபடும் நோக்கந்தான் யாது? பிறப்பது ஒரே விதமானாலும் - இறப்பதும் - அதன் குறிக்கோளும் அதே மாதிரிதானா? இவை இயற்கையின் விளையாட்டா அல்லது நம்மிடையிலே தோன்றி மறையும் மேடுபள்ளங்களின் எவுதலினாலா?

பூவுடையூர், ஒரு சிறு நகரம், நகரத்தின் நாகரீகமும், கிராமத்தின் இயற்கை வனப்பும். வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற சிற்றூர். ஊருக்கு இடையிலே ஒரு நீர்ஓடை அதற்கு அழகு செய்தது. புறத்தே ஓர் குன்று; சுற்றிலும் பச்சைப்பசேலென்று உலகை உயிர்விக்க உணவு நல்கும் நன்செய் நிலங்கள் பயிருடன்விளங்கின. வீதிகள் விசாலமானவை. ஆங்குள்ள வீடுகளும்—குடிசல்களும் ஒவ்வொருவிதமாக பல கோணங்களில் கட்டப்பட்டிருந்தன.

அதன் இயற்கை தோற்றமும் — எழிலுமே ஒரு விதம். வாழ்வு வளமுற்று, எண்ணியதை நிறைவேற்ற வல்ல வாய்ப்பும் இருந்து, வறுமைப் புயல் வீசாது மகிழ்ச்சியுடனிருக்கும் ஒருவனுக்குத்தான் சிந்தனை—கவியுள்ளம், அழகை ரசிக்கவும் அமைதியை அனுபவிக்குமான பண்புகள் ஏற்படும். வறுமைப் புயலால் தாக்குண்டு. நிலைகொள்ளாது அலையும் சிறகு போல, சமூகத்திலே தாழ்த்தப்பட்டு பொருளாதாரத் துறையிலே சுரண்டப்பட்டு வாட்டமுற்று இருக்கும் ஒருவனுக்கு கவியுள்ளம் எது? நித்திய வாழ்க்கையை நடத்தவியலாமல், நீர் மல்கும் கண்களாய்—ஏங்கி நிற்கும் ஏழைகள்—பஞ்சைகள் கவியாக இயலுமோ? உள்ளமும் இயற்கையில் ஈடுபடுமா? நெஞ்சில் குமுறிக்கொண்டிருக்கும் எரிமலையின் தன்மை வெளிப்படும் நேரமல்லவா? இவற்றில் சிக்கிய சிந்தனை, இயற்கையின் இன்பம் பிறவெல்லாம் பொசுங்கியன்றோ போகும்!

மணவழகி அவ்வூர் தாழ்த்தப்பட்ட ஒருவரின் கீழ்ஜாதியான-ஹரிஜனன்மகள். பொருளாதாரத்திலே ஓரளவு மேம்பட்டவர்கள். அந்த ஊர் ஆரம்பப் பள்ளியில் படித்துத் தேறினாள். அப்பள்ளியில் 8-வது வரையில் உண்டு. எனவே அவளுடைய தகப்பனார் மேல் படிப்புக்காகச் சென்னைக்கு தன் உறவினர் ஒருவரின் வீட்டுக்கு அனுப்பிவைத்தார்.

மணவழகி உயர்தரப்பள்ளியில் (High School) சேர்ந்து செவ்வனே படித்து வந்தாள். காலம்; தேதி, மாதம். வருடமென வளர்ந்து தனது 18-வது வயதில் S.S.L.C. தேர்வில் தேறினாள்.

பருவத்தின் விளிம்பிலே நிற்கும் மணவழகி, சிவந்த மேனியும், கண்டவரைக் கருத்தழிக்கும் தோற்றமும் உடையவள். சிற்றிடையாள், மலர் முகத்தாள்; குறுகுறுத்த பார்வை; வெங்கலத்தோனி, சுருண்டு வளைந்து கட்டுக்கடங்காது நிற்கும் கூந்தல் காற்றிலே ஊசலாடியது. நற்குணமும் உடையவள்.

கோடை விடுமுறையில் சொந்த ஊர் சென்றாள். தந்தையின் மகிழ்ச்சி கரைபுரண்டோடியது, பருவமடைந்த மங்கைக்கு படித்த படிப்பு போதுமென்று எண்ணி, தகுந்ததோர் மணவாளனைத் தேடி மணவழகிக்கு மணமுடித்துக் காண விழைந்தது அவர் மனம். தன் பெண் மனமொத்த காதலனுடன், வாழ்க்கைத்துணைவனுடன் இன்பத்தோடு இல்வாழ்க்கையை நடத்தி, அவர்களின் இன்பத்தின் எல்லையென பிறக்கும் குழந்தை அதை அன்புடன் தாலாட்டி, கொஞ்சிக்குலவி; தவழ்ந்து பிறகு விழுந்து, எழுந்து, தத்தித்தத்தி நடக்கும் காட்சியும், அது தன் மழலை மொழியால் பெற்றோரை மகிழ்விக்கும் சிறப்பும் என்ன நேர்த்தி! தான் மகள் வீடு சென்றால் "தாத்தா, தாத்தா" என ஓடிவந்து மார்புறத் தழுவிக் கொள்ளும் ஒரு பேறு கிடைக்குமானால்......? என கனவுலகம் சென்று கொண்டிருந்தது அவர் தந்தையுள்ளம்.

தன் எண்ணத்தை மகளிடம் கூறினார், ஆசையையும், தன் முதுமையின் நிலையையும், அவள் பருவத்தின் தோற்றத்தையும் சுட்டிக் காட்டினார்.

"நீங்கள் சொல்வது சரிதான். இருந்தும்...... என்றால்......" என்று முணகினாள்.

"எம்மா! உன் எண்ணந்தான் யாது? மறைக்காதே! மறைப்பின் மக்களின் மாண்பு மங்கி மடியும்!" என்றார்.

"நான் இன்னும் கொஞ்சம் கற்றுத் தேறி அனுபவம் பெற்று சீரும் சிறப்புடன் விளங்க வேண்டுமென்ற எண்ணங்களுடன் உள்ளேன், இது தங்களுக்கு பெருமை அளிப்பதல்லவா? எனக்கும் நன்மைதானே?"

"உள்ளதுதான், இருந்தாலும்..........." என்று இழுத்தார்.

ஆரம்பப் பள்ளியை முடித்து, உயர்தர பாடசாலையிலும் தேர்ந்து மேலும் கல்லூரி படிப்பின் ஆரம்பத்திலே உள்ளாள். கல்லூரிச் செய்தி கேட்டதினால் ஓரளவு தெரிந்தவர், ஆதலால் கலங்கினார். பருவத்து மங்கை நல்லாள் பலருடன் சேர்ந்து பழக வாரம்பித்தால்.........நிலைமை என்னவாகும்? ஆண்களும் பெண்களும் சேர்ந்து வாழும் இடம் கல்லூரி ஆயிற்றே! பருவத்தின் சேஷ்டையால். சூழ்நிலையின் சந்தர்ப்பத்தால் காதல்—கீதல் என்று கருத்தழிந்து, காமுற்று கெட்டலையும் குணம் வந்தால்......? மலரில் தேன் உண்ட வண்டு, தேன் முற்றுப் பெற்றால் வேறோர் மலரை நாடுவது போல அவனியில் பல ஆண்களும் உள்ளனரே! பெண்களைமயக்கி தன் இச்சையைப் பூர்த்திச் செய்து கொள்ளும் வரை "நீ இல்லையேனில் நானில்லை; என் உலகமே இல்லை!" என்று காதலுரைகள் கூறி எமாற்றுகின்றனர். எத்தர்உரை கேட்ட எமாளிகள் மயங்கிவிடுகின்றனர். விருப்பம் ஈடேறியவுடன் கன்னி வேம்பென கசக்கிறாள். சாறுபிழிந்த சக்கை ஆகிறாள். முடிவிலே கைவிடப்படுகிறாள். கற்பழிந்த பறிபோன நிலையிலே ஆண்கள் எவ்வளவு அக்கிரமங்கள் செய்தாலும் அது அவனியிலே தெரியவில்லை—தெரியப்படுத்தவில்லை. பெண், ஆண் செய்த குற்றத்தை—செய்கையைச் செய்தால் அது பார் முழுவதும் பரப்பப்பட்டு கேலி பேசுவோர் மக்கள். கண்டனமும் செய்வர்.

கல்லூரி மனிதனின் அறிவை படிப்பு என்ற சாணைக் கல்லால் தீட்டி கூர்மையாக்கிடும் ஓர்இடம். தொழிற்சாலை! அது பலருக்கு பலவிதமாகத் தோன்றுகிறது—பயன் படுத்துகிறார்கள்.

மலையடிவாரம்; அதைச் சார்ந்த ஒரு காடு. இயற்கையின் இருப்பிடம் என விளங்கியது. ஓங்கி வளர்ந்து வானவீதியிலே உலவும் முகிலைக் கிழித்து அண்டத்தையளாவி நிற்கும் பெருமரங்கள். மாந்தர் உட்புகா வண்ணம் செடி. கொடிகளால்—முட்களால் பின்னப்பட்டு, விலங்குகளின் கோரச் சத்தம் எதிரொலித்துக்கொண்டிருந்தது. சிறு நீர் தேங்கும் குட்டைகள். மலர்ந்த மலரின் மணம் எங்கும் பரவி நின்றது. சிறியதும் பெரியதுமான பாறைகள் சிறு குன்றுகளென ஆங்காங்கு சிதறிக் கிடந்தன. பறவைகளின்கதறல்களும் வனத்தின் வனப்பினால் இனிய கானமென ஒலித்தது. அந்திவேளை மந்தாரமான வெளி; அமைதி ஆழ்ந்த மௌனப் பிறதேசம். ஓர் மயில் தன் தோகையை விரித்து நடனம் ஆடுகின்றது தன்னை மறந்து கேளிக்கையின் இன்பத்திலே திளைத்திருந்தது. மயில் ஆடிடும் நடனத்தின் உச்சநிலை, அதைச் சூழ்ந்து நிற்கும் இயற்கை வனப்பும், பின்னணி கீதமாக ஒலிக்கும் குயில்களின் இசையோசையும் காண வாய்ப்புப் பெற்றனர் மூன்றுபேர்.

மயிலின் உருவம்—நடனத்தின் மேன்மையை வனத்தின் வளமிக்க வனப்பையும், ஒருங்கே திரட்டி சிந்தனைக்கு ஒரு நல்ல விருந்தாக்க சித்திரம் தீட்டிட முனைகின்றான ஒருவன்!

ஆடும் மயிலைக் குறிபார்த்து அதை வீழ்த்தி இறைச்சியை நாவிற்கு நல்விருந்தளிக்க, தன் தோளிலே தொங்கிக் கிடக்கும் வில்லை அம்பை வைத்து நான் எற்றி குறி பார்க்கிறான் ஒருவன்!

கவியுள்ளத்தின் துணைகொண்டு கண்முன் காணும் காணற்கரிய காட்சியைத் தான் கண்டது போதாவென்று, பாரிலுள்ள மக்களும் காணட்டும் உணர்ந்து, ரசித்து, இன்பமெய்தட்டும் என்று கவி புனைந்திட எடும் எழுத்தாணியும் கைகளிலே எந்துகின்றான்!

ஆரண்யத்திலே ஆடிடும் மயிலைக் கண்ணுற்ற ஆடவர் மூன்று பேர். எககாலத்திலே ஓரே சம்பவத்தை ஒரே இடத்தில் காணுகின்றனர். இருந்தும் அவர்களின் எண்ணம் ஒருவருக்கொருவர் மாறுபடுகின்றது. செயலும்—கருத்தும் வேறுபடுகின்றன! கவியாகின்றான் ஒருவன்! ஓவியனாகின்றான் ஒருவன்! அதன் உயிரைக் கவரும் கருத்து கொண்ட காலனாகின்றான் மற்றொருவன்!

கல்லூரிலேயும் இது போன்றே மாணவர்களில் பலரகம் உள்ளனர். கல்வி பயிலும் இடம், கல்வியின் தன்மை கொள்ளும் கருத்துரை ஒன்றேயானாலும் ஓவியன்; கவி; காலன் என்ற விதங்களும் தோன்றுகிறது. இத்தகைய பல சிந்தனைச் சுழலிலே அவர் மனம் சிக்கிச் சுழன்றது.

தகப்பனின் ஆழ்ந்த யோசனையைக் கண்டு தன் வேலையைக் கவனிக்கச் சென்றவள், மீண்டும் திரும்பி வந்து "எனனப்பா எதோ மௌனத்திலாழ்ந்து விட்டீர்! என்னவோ கூற முன்பட்டீர் அதற்குள்ளாக...!" என்றாள்.

"மகளின் இன்ப வாழ்வையும்; அவள் அடையும் பெறுமையையும். புகழும் விரும்பாத தந்தை யார்? உன் நலனைக்குறித்துத்தான் — எதிர்கால வாழ்க்கை

## கண்கவர் கலர்கள்! கருத்திற்கிசைந்த டிசைன்கள்!
## காணத் தவருதீர்கள்!

சேலை, சிட்டி, வாயல்ஸ், ஜாக்கட், பாவாடை, பெட்ஷீட், முதலியவைகளுக்கு அழகிய டிசைன்களால் கெட்டிச் சாயத்தில் அச்சு அடித்துக் கொடுக்கப்படும்.

சினிமாக்களுக்கு சேலைகள் ஜாக்கட்டுகள், முதலிய ரகங்களில் அழகிய டிசைன்களால் வேலை செய்துத் தரப்படும்.

சேலை, வாயல், ரகங்களுக்கு பலவித கெட்டிச் சாயங்கள் தோய்த்துத் தரப்படும்.

**எஸ். வி. கிரி கோ.**

வியாபாரிகளுக்கு விளம்பர பைகள் துணிகளிலும், கித்தான்களிலும், நேர்த்தியான "ஸ்பிரே" வேலையால் தயார்செய்துக் கொடுக்கப்படும்.

**151, தங்கசாலைவீதி, சௌகார்பேட்டை, ஜி.டி. சென்னை.**

அதில் நீ காணப் போகும் போராட்டம்; அதைத் தகர்த்து வெற்றிபெற உன் எண்ணம் ஈடுபடும் என்று யோசிக்கலானேன்''

"யோசனையின் எல்லைதான் என்னவோ? நான் அறிய......" என்றாள்.

"நீ எனக்கு ஒரே மகள். என் மரு உறுவம் சிறு வயதிலே தாயன்பைப் பெறாதவள். உன் மனம் வாட்டமுறா வண்ணம் உன்னை சீருடன் வளர்த்தேன் கல்வியறிவும் போதுமான அளவு புகட்டினேன். எனவே மணமுடித்து தந்தையின் கடமையைச் செய்து விடவேண்டும் என நினைத்தேன். ஆனால் நீ இன்னும் "கற்க விரும்புகிறேன்" என்கிறாய் உன் மனம் கோணக் கூடாது என்றுதான் இன்று உன் எண்ணத்திற்கு இணங்குகிறேன் நான். உன் மகிழ்ச்சி என் ஆனந்தம். நீ உன் நினைவை தீய வழியில் செல்லவிடாது நல்வழியில் செலுத்த வேண்டும் என்பதே என் அன்பான கட்டளை!"

"அப்பா! உங்கள் அறிவும் பொருள் செறிவும் கொண்ட போதனையைக் கேட்க நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தந்தை என்றாலும், பெரியவர் என்னும் காரணத்தால்தான் சொனனதுதான் சரி என்று பிடிவாதம் செய்யாது நல்லதொரு முடிவைக் கண்டு அனுமதியளித்ததற்காக உங்கள் பால் நான் நன்றியும் வணக்கமும் செலுத்துகிறேன். நான் உங்கள் கீர்த்திககும் எனக்கு களங்கமும் உண்டாக்கும் வண்ணம் என் செயல் இராது. உங்கள் கூற்றுப் படியே என் சிந்தையை நல்வழியில் நாடவிட்டு பல உண்மைகளை அறிந்து சிறப்படைவேன்" என்று உவகை மிகுதியால் நன்றியோடு கூறினாள்.

கல்லூரியில் சேர்ந்தாள் மணவழகி. அனைவரின் நன்மதிப்பையும் பெற்றாள் இவளது கள்ளங் கபட மற்ற பேச்சும். கூர்ந்தமதியும் உள்ள இவள் பால் பலரும் அன்பு கொண்டார்கள். ஆசிரியரின் நன் மதிப்பையும் பெற்றாள் பாவை மணவழகி.

கல்லூரியில் "தமிழர் மன்றம்" என்று ஒரு கழகம் இருந்தது. இதில் இவளும் ஒரு உருப்பினராய் இருந்தாள். அதிலே நடக்கும் கூட்டங்களில், மாநாடுகளில் சிறந்த சொற்பொழிவாற்றுவாள். இவளது பேச்சைக் கண்டவர் வியந்தனர். அவள் பேச்சு சிந்தனைக்கு ஓர் விருந்து. பழமைக்கும், பாசத்திற்கும் பரமவிரோதி. அணி அணியாக உருண்டோடி வரும் அடுக்குச் சொற்களும், நிலைமையை விளக்க பல கருத்துள்ள ஆதாரங்களை காணமுடியும் அவள் பேச்சிலே புத்துலகைக் காணவிழையும் புதுயுலகச் சிற்பிகளில் இவளும் ஒரு வீராங்கனையாக திகழ்ந்தாள் எண்ணத்தின் குமுறல்களினூடே சிதறும் ஓரிரு முத்துக்களும் காணலாம்.

"தமிழர் மன்ற" த்தின் செயலாளனாக பணியாற்றினான் மணவாளன் நற்பண்பும், ஆற்றலும், அறிவும் கொண்டவன்சிறந்தபணியாளன் அழகனுங்கூட!

கூட்டங்கள் நடத்தவும், அதில் பேசுவதற்காகவும் நடவடிக்கைகளில் தொண்டாற்றவுமான காரியங்களில் இருவரும் சந்திக்கவும், நெருங்கிப்பழகவும் சந்தர்ப்பம் எற்பட்டது. இது காலப் போக்கிற்கும், சூழ்நிலைக்கும் தக்கவாறு நேசங் கொண்டனர். நேசம் நீண்டு காதலாகி மலர்ந்தது. கல்லூரி காதலர்களிருவரும் கருத்து ஒருமித்து இரண்டு காதல் உள்ளங்களும் உரசலால்களிப்பிலே மூழ்கியது.

இந்நிலையைக் கண்ட மற்ற மாணவர்கள் மனம் புழுங்கினர் பொச்சரிப்பும் கொண்டு—புரளி செய்யவும் ஒருப்பட்டார்கள். உற்ற நண்பர்கள் ஒருசிலர் எசலுக்குள்ளான இளம் காதலர்கள் நிலை குலைந்தார்களில்லை. காலமும் நடந்து சென்றது.

கல்லூரி இறுதி தேர்வுக்குப்பின் சொன்னவைகளையே திரும்பச் சொல்லும் பழகிய கிள்ளைகள் நிரம்பிய புத்தகச் சுவடியை அரிக்கும் பூச்சிகள் நிறைந்த இடமான கல்லூரியை விட்டு வெளியுலகை அடைந்தனர். வாழ்க்கை என்ற போருக்கு ஆயத்தமாயினர்.

மணவழகியின் மனத்தையறிந்து, அவள் விரும்பிய மணவாளனைத் தேர்ந்தெடுத்து; மணவழகி-மணவழகனுக்கும் சிறப்புற மணமுடித்தார். தன் சொத்திலே ஒரு பகுதியும், நல்லதொரு அலுவலையும் ஊதியத்துக்கு தேடித்தந்து தனிக் குடித்தனம வைத்தார். தம்முடன் அவர்களையும் வைத்துக் கொண்டால் அவர்களின் மாசுமறுவற்ற காதல்—மணவாழ்க்கைக்கு ஒரு களங்கமாக—தடையாக இருக்கும் என்ற காரணத்தால், நற்பண்பும், அறமும், மறமும் கூடிய அவர் அவர்களை தனி வாழ்க்கையை நடத்தவிட்டார். இதுவே சிறந்த செய்கை என்றும் எண்ணினார். அவர்கள் அடையும் மகிழ்ச்சியிலே தூரத்திருந்தே பங்கு கொண்டும், பிழை நேருங்கால் ஆய்வுரை கூறியும் ஆதரவு நல்கி வந்தார்.

அவர்களின் இல்வாழ்க்கை சிறப்புறவே நடந்து வந்தது. அவர்களின் அன்புக்கு அடையாளமாக, மேலும் பெருக வாய்ப்பளித்தது ஓர் ஆண் மகவு. இவர்கள் தங்கள் வாழ்நாளிலே அடைந்துவரும் மாற்றங்களையும்—உலகின் பெரும் போராட்ட நிகழ்ச்சிகள் அத்தனையும் கண்டு கலங்காமல்—தன் பாதையினின்றும் நகராமல் காலத்தின் சக்கரம் உருண்டோடி கொண்டிருந்தன.

இருந்த இடத்திலிருந்து அலுவலின் காரணமாக வேற்றூருக்கு மாற்றப்பட்டார்கள். ஆங்குள்ள சீதோஷ்ணம்-நீர்நிலை-வசதியற்ற தன்மைகள் என்ற

இன்னபிற காரணங்களால் மணவழகனின் உடல்நிலை நோய்வாய்ப்பட்டது.

கூற்றுவனின் கொடுங் கண்கள் இவர்களின் அமைதி நிறம்பிய வாழ்க்கை—குடும்பத்தை காண நேர்ந்தது போலும்! வரவர மணவழகியின் கணவனின் தேகநிலை சீணித்துக் கொண்டே வந்தது. உயிருக்கு மன்றாடி, மரணம் என்ற வழக்கில் வெற்றி காண மருத்துவன் என்ற வழக்கறிஞரின் துணை நாடினர் இயற்கையின் இளகிய மனதாலோ அல்லது மருத்துவரின் திறத்தாலோ மணவழகன் தேறினர். அவர் மீண்டும் பழய நிலையை அடைய ஓராண்டு காலம் கழிந்தது. இதன் பயனாக அலுவலகத்தினின்றும் இவருக்குச் சீட்டுக் கிழிந்தது. கையிலிருந்த ஓரளவு பணமும் விரையலாயிற்று! எனினும் கவலை கொண்டார்களில்லை!

நல்ல நிலையை அடைந்து வேலைக்குத் தேடினர், தேடி அலைந்து அலுவலகங்கள் பல. எறாதபடி இல்லை! எழுதாத மனுக்கள் இல்லை! கண்டவர், கேட்டவர், அன்பு கொண்டவர் என பலரிடம் "வேலை தேவை" என்ற விளம்பரமும் கொடுத்தாயிற்று இந்த இடைக்காலத்திலே உதவியவர் மாமனர். அவரும் இயற்கையின் கொளாறினால் இறந்தார்.

இச்செய்தியைக் கேட்டு சொந்த கிராமத்தையடைந்து மாமனருக்கு "நீத்தார் கடன்" என்ற சடங்கும் இன்னபிறவும் நிறைவேறியது. அவரிடம் இருந்த கொஞ்ச நஞ்சமிருந்த பணத்தையும் கொண்டு ஒரு பத்திரிகை நடத்தலானர்கள். தன் பேனு என்ற ஆயுதம் கொண்டு தற்கால சமுதாயத்தின் சீர் கேடான முறையையும், நாட்டிலே நடமாடும் சச்சரவுகளையும், வஞ்சகம், சூழ்ச்சியையும் தாக்கிச சாடலானர். இவைகளின் கர்த்தாக்களை காரணத்தோடு கண்டித்துத் தலையங்கங்கள் தீட்டலானன். இதன் பலன் பலரின் விரோதம்! சிலரின் நட்பு!! உத்தமனின் உயிருக்கே உலைவைக்க முயன்றனர் உன்மத்தர்கள்! எனவே மத்திரிக்கைத் தொழில் இலாபம் இல்லை நஷ்டமே எற்பட்டது. தோவ்வி என்ற முடிவைக் காணலுற்றான்! கையிலிருந்த பணமும் வெற்றி கொண்டவர்களிடம் சரண்புகுந்தது!

மீண்டும் பழையபடியே வேலை தேடும் படலம் ஆரம்பம் ஆயிற்று! மனுக்கள் குவிந்தன. "பார்க்கிறேன், ஆகட்டும்! இய்லையே!" என்ற பதில்கள் வழக்கமான குரலொலியாயிற்று.

சீனுவின் வரலாற்றை சீர்தூக்கிப்பார்த்தால், வரலாற்று ஆசிரியரின் பேனு முனைகள் "வழக்மாக சீனு தோல்வியடைந்தது" என்ற வாசகத்தைக் கொண்டு வரலாறு எட்டை சித்தரிக்கின்றன.

சீனு—மணவழகன்—வாழ்க்கை மூன்றும் ஒரு நிலையுள்ள மூன்றுகோணங்கள்தான் போலும்!

வியாபாரமும் நடத்திப் பார்த்தான்; மோசம என்ற சரக்கின்மையால் நஷ்டம் வந்து கடை மூடியாயிற்று. அதிலும் தோல்வி—வெற்றியில்லை!

தொழிலாளி ஆகலாமென்றெண்ணினன்: அவனது உடல்நிலை இடந்தராத காரணத்தால் அதை கைக்கொள்ள முடியவில்லை. அதிலும் தோல்வியே முன் நின்றது!

இதே அளவில் அவனது வாழ்க்கை என்ற பாதையைக் கடக்க நடத்திய போராட்டப் படலங்கள், இதன் கால அளவு மூன்று ஆண்டுகள்!

அவனது சிறு தொகையும் விரைந்தன. சிறுமை வலுமை என்பவைகள் அவனைப் பீடித்தது. மனைவியின் அழகு—அதை மிகப்படுத்திக் காட்டும் ஆபரணங்கள் எல்லாம் வாழ்க்கை என்ற சோலையிலே வறுமை வீசிய சூருவளியின் வேகத்தில் வீழ்த்தப்பட்டது.

நல்ல குடியிலே பிறந்து நற்குணங்களைத் தன்னகத்தே கொண்டு, படித்துப் பட்டம் பெற்று, சீர் திருத்த மனப்பான்மையும். அழகும் ஆண்மையும் கொண்ட ஒருவனுக்கு இவ்வுலகிலே இன்புற்றிருக்க, வாழ்க்கையெனும் களத்திலே எதிர்ப்படும் போராட்டங்களில் வெற்றிபெற—ஆழ்கடலைக் கடக்க சமுதாயம் எனும் ஒரு மரக்கலம் கிடைக்கப்பெறவில்லை. மானிடரின் மாண்பையும் மிகைப்படுத்திக் காட்ட வல்ல வாழ்க்கையின் இலட்சியத்தை அடைய ஒரு உதவியும் காணவில்லை—காணமுடியவுமில்லை.

அவனது முயற்சி இன்மையா? வீணு? வகை அற்ற எமாளியா? "இல்லையே" என்ற பதிலைத் தவிர்த்து வேறில்லை. வெற்றி வேண்டும்—தோல்வி கூடாது; இன்பம் வேண்டும்—துன்பம் வேண்டாம் என்று கூறுகிறுன், இதன் கருத்துதான் யாது?

உத்தியோகம் தேட முன் பணம் தேவை, வியாபாரம் நடத்த பணம் இன்றியமையாதது. சீக்கிரம் அலுவலின் போட்டியிலே கலக்க சிபார்சு வேண்டுமானல் லஞ்சம்—பணம் தேவை! எதற்கும் பணம்! எங்கும் பணமயம்! உலகமே பணத்தின் சக்தியில் அடிமைபட்டிருக்கிறது போலும்!

வாழ்க்கையில் பலவிதப்போராட்டங்கள் நிகழ்கின்றன

——

# கடமை

வைத்தியவள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமி.

கடமை என்பது உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்திலுள்ள ஒவ்வொருமானிடவர்க்கத்திற்கும், அவரவர் வாழ்நாட்களில் தவருது ஒழுகி நடந்து வரவேண்டியவைகளில், தலைச்சிறந்து விவங்கி வருவதாகும்.

இத்தகையவைகள் மக்கள் வயதிற்குத் தக்கபடியாகவும், குடும்பங்கள் தகமைக்குத் தக்கபடியாகவும், இனங்களுக்குத்தக்கபடியாகவும், வாசிப்புக்குத் தக்கபடியாகவும், உத்தியோகத்திற்குத் தக்கபடியாகவும், வியாபாரத்திற்குத் தக்கபடியாகவும், இப்படி அவரவர்கள் வாழ்க்கைகளுக்குத் தக்கபடியாகவும், அமைந்திருக்கிறது.

எத்தகைய கடமைகளாக இருந்தாலும் அவைகளுக்கேற்றவர்கள் யாராகவிருந்தாலும் பேதமின்றி, கடமைப்படி ஒழுகுவதில் மட்டும் தவருமல் ஒழுகிவரும் கட்டுப்பாட்டில் விலகியவராக மாட்டார்கள் என்பதே இதில் மிகவும் வலியுறுத்தப்படுவதாகும்:

அவரவர் கடமைகளை அவரவர் பின்பற்றி நடப்பதின் நடத்தைகளுக்கு ஏற்றபடிதான் அவரவர்களுக்குள்ள எற்ற தாழ்வுகளுக்குத் தக்கபடியாகவே மதிப்பு, அந்தஸ்து முதலியவைகள் அமைய ஏற்படுகிறது. இதை நாட்டில் நாம் அன்ருடம் பார்த்து வருகிறோம். அத்துடன் ஊரிலுள்ள பெரிய மனிதர்கள். மக்களை கணிசித்து பார்க்க, கடமையை ஒழுகி வருவதையே அளவு கோலாக வைத்து ஒவ்வொருவரையும் கணிசித்துக்கொள்வதைக் கைகொண்டு வருகிருர்கள் என்ருல், உலகத்தில் கடமைக்கு எவ்வளவு முக்யத்வம் அமைத்திருக்கிருர்கள் என்பது புலனுகும்.

ஆகையால் கடமையைப் புறக்கணிப்பவர் ஒரு நாளும் பெரிய மனிதராக மாட்டார் என்பது ஆன்ருேர்களின் கருத்தாகும். ஏனெனில் கடமையை புரக்கணித்து நடப்பவர்கள் ஒரு கால் பெரிய மனிதர் கூட்டத்தில் சேர்ந்திருந்தாலும், அவர்களைப்பற்றி உலகத்திலுள்ளோர். இவனுக்கு கடமையை கடைபிடிக்க முடியாமல், அதை மறைத்துக்கொள்ளவே இந்தமாதிரி கூட்டங்களில், கலந்து கொண்டு, விளம்பரப்படுத்திக் கொள்ளுகிருன் என்று, அவனைக்காணுத இடத்திலாவது பேசிக்கொள்வார்கள். இவைகளையும் நாம் நாட்டில் பார்த்தும், கேட்டும் வருகிறோர். நல்லது, கெட்டது, இவைகளுக்குள்ள மதிப்பு, எங்கும், எப்பொழுதும் யாராகவிருந்தாலும், கொடுத்தேத்தீருவார்கள்;

ஒருவரை மற்ருெருவன் ஏமாற்ற நினைப்பு வரும்முன் அவன் நடத்தையையும், கடமையையும், அவனையும் 'முதலில் ஏமாறவைத்துவிட்டபிறகுதான். பிறரை ஏமாற்ற எண்ணுகிறது என்பனத எவன் தன் நினைவின் கண் நிலைக்கும்படி செய்து கொள்கிருனே, அப்படிப்பட்டவன் யாரையும் ஏமாற்றமாட்டான். ஏமாரவும் மாட்டான்.

இதுபோலவே மற்ற தீங்குள்ள செய்கைகளையும் சிந்தனைக்குக் கொண்டுவந்து யோசிப்பவனும் யார்மாட்டும், தீங்கிழைக்க எண்ணமாட்டான். அப்போது அவனும்; தன் கடமையிலிருந்து, தவரியவன் ஆகமாட்டான்.

ஒரு தமிழ் புலவன் சுமார் 25 ஆண்டுகளுக்குமுன், தான்பாடி இருக்கும் பதிகம் ஒன்றின் செய்யுளில்: அவனது வழிப்படும் தேவதையை "மூலமேயான நீ யாவர்க்கும் அன்னையாம் மொழியு மனைவர்தனையராமல், மொய்த்து நினையா சிப்பதேதெனில் நம் கடமை, முற்றுணருதேநல்குவாய்" என பாடி இருக்கிருன். என்ருல் தெய்வத்துக்கும் கடமை என்பதொன்றுண்டு என்றும், அத்தெய்வத்தை வழிபடுபவனுக்கும் கடமை உண்டு என்றும் நிரூபித்துவிட்டு, இவ்விருவர்களுடைய கடமைகளையும் நம்மில் இருவருக்கும் உள்ள கடமைகளைத் தவரில்லாமல் நடந்தேரிவர அருள்பாவிப்பாய் என்பதாக, அப்புலவன் தன் வழிப்படு கடவுளாகிய அம்மாளை பிரார்த்திக்கிருன்.

இதனுல் கடமையானது யாவர்க்கும். இன்றியமையாததாகும்.

# வியன்னா வீதியிலே !

கே. இராதாமணாளன்.

விசாலமான வீதிகள்! அபூர்வ வேலைபாடுகள் மிக்க அழகிய கட்டிடங்கள்! கண்களைக் கூசச்செய்யும் ஒளிமிக்கவிளக்குகள்! பார்க்குமிடமெங்கும் கெம்பீரமான உருவச்சிலைகள் உல்லாசமாக நடந்து செல்லும், ஆடம்பர உடை உடுத்திய சீமான்கள்! அவர்களுக்குச் சிங்கார ரசம் தரும் சிற்றிடை சிங்காரிகள்!

அகனற தெருவொன்றின் கோடியில் நின்று கொண்டு, ஆச்சரியம் நிறைந்த கண்களோடு வியன்னா நகரின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான் ஒரு வாலிபன்! அவனுக்கு வயது சுமார் பதினெட்டுதான் இருக்கும்! அவனது ஒரு தோளில் தொங்கிக்கொண்டிருந்தது, கயிற்றில் சேர்த்து கட்டப்பட்டிருந்த ஓவியப் படங்கள். கையில் சிறிய பெட்டி! பட்டிக்காட்டிலிருந்துவந்தவன். ஆகவே பட்டணத்தைப் பரக்கப் பரக்கப் பாத்தான்! கிராமத்தை விட்டு ஏன் வந்தான்? ஒருவரும் துணையற்ற அவன் ஓவியக்கல்லூரியில் சேரவந்தான்! பெற்றோர் அற்ற ஏழை அவன். நகருக்கு வந்தபோது அவனிடமிருந்தது எட்டரை ரூபாய்

வியன்னா நகரம் அப்பொழுது விசித்திரமாக அவனுக்குத் தோனறியது! அந்நகரில் ஒரு பக்கத்தில் செல்வத்தில் சீமான்கள் புரண்டு கொண்டிருந்தனர். மறுபக்கத்தில் மீளாதவறுமையில் துடிதுடித்துக் கொண்டிருந்தனர், ஏழைகள்!

நகரை அடைந்த சில தினங்கள் கழித்து தன் விருபபப்படி ஓவியக்கல்லூரியில் சேர்ந்து படிக்கச் சென்றான். கல்லூரியின் அருகே சென்றதும் திடுக்கிட்டு நின்றான்! நூற்றுக் கணக்கான மாணவர்கள் தன்னைப் போலவே ஓவியக் கல்லூரியில் சேர வரிசையாக நின்று காத்துக்கொண்டிருப்பதைக் கண்டான். இவ்வளவு பேரில் நமகெங்கே இடம் கிடைக்கப் போகிறதென்று எண்ணினான்! அவன் உள்ளத்தில் கவலை தோன்றியது ஆனாலும் தைரியத்தைக் கைவிடவில்லை! வரிசையில் சேர்ந்து நின்றான். படிக்கட்டின் மீது நின்றுகொண்டிருந்தகல்லூரிதலைவர், விண்ணப்பதாரிகளின படங்களைப் பரிசீலனை செய்து கொண்டிருந்தார். தலைவரது அங்கீகாரத்தைப் பெறுமளவுக்குத் தன்னுடைய படங்கள் நன்றாக இருக்குமா என்ற சந்தேகம் வாலிபனின் உள்ளத்தில் எழுந்தது! "ஏன் நன்றா யிராது" என்று தன்னைத்தானே வினவிக்கொண்டான்.

அவன் முறை வந்தது! எழுதிவைத்துக் கொண்டிருந்த சித்திரங்களை நீட்டினான். அவற்றைப் பார்த்ததும் கல்லூரித்தலைவர் சிரித்துவிட்டு கூறினார், "நீ ஒரு ஓவியனாக இயலாது! பாதை தவறி வந்துவிட்டாய்! போ!" என்று.

இதைக் கேட்டதும் திகைத்து நின்றுவிட்டான்! தன் ஆசை அவ்வளவும் தூள் தூளாகிவிட்டதை எண்ணி கண்ணீர் விட்டான்! நீண்டநேரம் கற்சிலையைப்போல மௌனமாக நினறான்! எவ்வளவு நேரம்தான் அங்குநிற்க முடியும், நின்று தான் பயனென்ன?

எந்தக் கலையைக் கற்க தன் தந்தையோடு போராடினானோ, அதே கலை இப்பொழுது அவனின் வாழ்விற்கு வழிகாட்ட மறுத்துவிட்டது!

வீதிகளில் அலைந்து திரிந்தான்! கையிலிருந்த காசெல்லாம் கரைந்து விட்டது. வேலைக்காக அலைந்தான். கிடைக்கவில்லை. உண்ண உணவில்லை! உறங்க இடமில்லை! "அய்யோ பாபம்" என்று பரிவோடு கூற எவருமில்லை! நாம் ஏன் வாழவேண்டும் என்று எண்ணினான்! தற்கொலை செய்துகொள்வதென்ற முடிவிற்கு வந்தான்!

அந்த வாலிபன் யார்? உணவும் உடையுமில்லான் பராரியாகத் திரிந்த அந்தக்காளையார்? வாழவழி தெரியான் தற்கொலை செய்துகொள்ள அணிந்தஅவன்யார்? அவன்தான் அகில உலகையும் ஆட்டிப்படைத்தவன்! போர் போர் என்று இரத்த வெறிபிடித்தலைந்தவன்! உலக வீரர்களில் ஒருவன்—மறக்க முடியாது! அந்த வாலிபன்தான் அடோல்ப் ஹிட்லர்! 1907-ம் ஆண்டு ஆதரவற்ற அனாதையாக வியன்னா வீதிகளில் அவன்சுற்றித்திரிந்துககொண்டிருந்தான்!

வாழ்வில் ஏற்பட்ட கசப்பினால் தற்கொலை செய்துகொள்ள தீர்மானித்தான்! சாவதைவிட வாழ்ந்துதான் பார்ப்போமே என்ற ஒரு ஆசை குறுக்கிட்டு அவன் முடிவை மாற்றியது!

கூலிவேலை யொன்று கிடைத்தது! கிடைத்த சொற்பக்கூலியைக் கொண்டு, ஒரு சிறிய அறையை வாடகைக்கு எடுத்தான். அந்த அறையில் காற்றோட்டம் கிடையாது, வெளிச்சம் கிடையாது ஆனால் துர்நாற்றமும் கீழே ஈரமும், புழுக்கமுமிருந்தன. அந்த இடத்தில் தான் ஹிட்லர் வசித்து வந்தான்.

தொழிலாளியாக இருந்தபோது பல செய்திகளைப் பற்றி அரிந்துகொள்ளவும் புரிந்துகொள்ளவும் சந்தர்ப்பம் கிடைத்தன். கார்ல் மார்க்ஸின் சமூகவாதத்திற்குத் தொழிலாளரிடையே நல்ல செல்வாக்கும் ஆதரவுமிருந்தது! அப்பொழுதுதான் சமூகவாதம், பொதுவுடமை இவற்றைப்பற்றி ஹிட்லர் அறிந்துகொண்டார்.

யூதர்களின் ஆணவ செல்வாக்கு, முதலாளிகளின் ஆக்ரமிப்பு, தொழிலாளர்களின் வருத்தம் ஆகியவற்றைப்பற்றிமுதன் முறையாக வியன்னாவில்தான் ஹிட்லர் சிந்திக்கத்தொடங்கினான்.

ஹிட்லரின் வாழ்க்கையில் வியன்னாவாசம் தான் மிகவும் முக்கியமானது. வியன்னாதான் அவன் பிற்கால வாழ்வை அமைத்துத்தந்தது! அங்கு அவன கற்ற அனுபவபாடமே, ராஜி கட்சியின் ஆரம்பத்திற்குக் காரணமாயிற்று. அந்நகரில் ஐந்தாண்டுகள் அவன் தங்கி வாழ்க்கை கசப்பு அவ்வளவையும் சுவைத்துப்பார்த்தான்.

வறுமையோடு போரிட்டான். ஏழைமக்களின் வாழ்வு என்னவென்பதைத்தானே அனுபவித்து அறிந்துகொண்டான்.

ஓய்ந்த நேரங்களில் பற்பல நூல்களைப் படித்து வரலானான். வறுமை வளர வளர அவனது அறிவும் வளர்ந்துகொண்டு வந்தன.

வியனா வீதிகளில் ஏழைத்தொழிலாளியாகத் திரிந்துகொண்டிருந்த ஹிட்லர் உலகத் தலைவர்களில் ஒருவனாகத் திகழ்வான் எனறு அன்று யாரும் எதிர்பார்ககவில்லை! பிறர் ஏன்? அவனுக்கு அது தெரியாது!

---

## "பொது மக்கள் தீர்ப்பென்றால் நிலைமை என்னும்"

(ஆர். வேலுசாமி பேராவூரணி)

—

ஆளட்டும் அறநெறியை முன்னிறுத்தி
அதில் நமக்கு அட்டியில்லை ஆனால் நாடு
மீளட்டும் வெள்ளையனின் பிடியினின்று
மிடிமையெலாம் போக்கிடுவோம் உங்கள் வாக்கால்;
வாழட்டும் மங்களமாய் மஞ்சள் பெட்டி
வகைசெய்வோம் என்றதெலாம் மறந்து யாரோ
மாளட்டும் நமக்கென்ன பதவிமட்டும்
வளரட்டும் என்றுள்ள நிலையிருந்தால்

அழியட்டும் நம்தேவை நல்கா ஆட்சி
அமையட்டும்சரியான மக்கள் மன்றம்
ஒழியட்டும் பொல்லாதபகைவர் சூழ்ச்சி
ஓங்கட்டும் இந்நாட்டின் மறவர் மீட்சி
கழியட்டும்கருத்தொவ்வா மனுவின் சாட்சி
காணட்டும் செந்தமிழின் கனிந்த மாட்சி
கிழியட்டும் பழமை கீதம் வேதம்
கிளைக்கட்டும் இலக்கியங்கள் தமிழ்ப்பூங்காவில்

இடியட்டும் மதவெறியின் இருண்ட கோட்டை
இலங்கட்டும் எல்லோரும் கேளிர் என்று
மடியட்டும் மககள் உழைப புரிஞ்சும வேட்டை
மகிழட்டும சமவாழ்வில் நாடு அதற்காய்
ஒடியட்டும் எலும்பெல்லாம ரத்த வெள்ளம்
ஓடட்டும அறப்போரில் இறுதி மூச்சும
பொடியட்டும இவை இன்னாள் பொருததிருந்த
"பொது மக்கள் தீர்ப்பென்றால் நிலமை என்னும"?

# முன்னேற்றம்

(சத்தியவாணி முத்து)

கற்கால முதல் தற்கால வரை மனிதன் படிப்படியே நாகரீக வாழ்க்கையிலும், வாழ்கையின் உயர்தரத்திலும் முன்னேற்றமடைந்துவருகிறான். முன்னேற்றமடைய மனிதப் பண்பு பெருகி, அவசியம், முயற்சி, அறிவு வளர்ச்சி, உயர்நோக்கு, தன்னலம், சுற்றுச் சார்பு இவைகளின் விளைவால் எழுச்சி உண்டாகிறது. சமூகத்திலுள்ள வித்தியாசங்கள் எழுச்சிக்கு விறுவிறுப்பைத் தருகின்றன’ மாநிலத்தில் மனிதன் தோன்றியது ஐந்து லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு என்றும், அப்படித் தோன்றிய, முதல் மனிதன் ஜாவாவில் தோன்றினான் என்றும் உயிர்நூல் ஆராய்ச்சியாளர்கள் அறைகின்றனர். இவ்வளவு காலம் கடந்தும், மனிதனது பகுத்தறிவு மிஞ்சிய இக்காலத்திலும், பொதுவில் நாகரீகம் திகழ வேண்டி நிற்க, மக்களில் ஒருபெரும்பகுதி அநாகரீக அடிமை வாழ்வில் ஒரு சுகபோக சுயநல சிறு பகுதியினரால் ஆழ்த்தப்பட்டிருக்கின்றனர். அடிமை வாழ்வில் ஒரு பகுதியை அழுத்தினால்தான் அதிகார வர்க்கப் பகுதி உண்டுகொழுத்து உலவலாம் என்ற சுயநலம் தூண்ட, பொருளாதாரம் என்ற சுருக்குக் கயிற்றைக்கொண்டு சமுதாயம் என்ற இரும்புப் பிடி இறுக்குகிறது. பொருளாதார இறுக்கம்வலுக்க, வலுக்க அடிமை அநாகரீகனாகிறான். மனிதத் தன்மையிழந்து மாவினமாகிறான்.

ஆக்கிரமிப்பு மதம், மொழி இவைகளின் மூலமாக ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமைகொண்டு சுயநலத்தோடு சுரண்டித்தான் கொழுத்துவந்திருக்கிறது. இதனால் அடிமையான நாட்டின் பொருளாதாரம், சுயேச்சை, அறிவு வளர்ச்சி யாவும் பாதிக்கப்படுகின்றன. இதுபோன்ற ஆதிக்கத்தினால் அவதியுற்ற நாடுகள் பல. பொருளாதாரத் துறையில் அவைகள் சிக்குண்டு புலம்பித் தவித்துப் பொருமி நிற்கின்றன. இவைகள் சரித்திரம் கூறும் சான்றுகள். மேனாட்டில் மதத்தின் பெயரால் அடிமைத்தனம் அடிகோலப்பட்டது. ஆனால் இந்நாட்டு அடிமைத் தனம் வேறு. மதத்தின் மந்திர சக்தியால் மக்களை மதியிழக்கச் செய்து பொருளாதாரத்தை அடியோடு சீர்குலைத்து அடிமையிலும் கேடாய் அழுத்தப்பட்டிருக்கிறது. இந்நாட்டில் இந்நிலையில் இந்தியாவில் எண்ணற்ற பெரும் பகுதி மக்கள் சீர்குலைந்து அவதிப்படுகின்றனர். ஆரிய ஆதிக்கத்தை விட ஆரிய மதத்தின் சூழ்ச்சியால் அடிமைகளாக்கப்பட்டனர், ஆதிகுடிகள். என் இன்றும் அதே நிலையில் உள்ளனர். அவர்கள் ஆட்சி ராமராஜ்யம் எனப்பட்டது. மதம், தேவ மதம் என்றும், மொழி, தேவ மொழி என்றும் கூறப்பட்டன’ சூழ்ச்சிக்கும், கொடுமைக்கும் அஞ்சி மக்கள் மாக்களாயினர். எதிர்த்தெழுந்த சமணமும், பௌத்தமும் தகர்த்துத் துரத்தப்பட்டன. இந்தியாவில் ஆரியத்திற்குப் பயந்து ஓடி, பௌத்தம் சீனாவில் ஒளிந்து பிரகாசிக்கின்றது. இங்கு ஆரியம் ஏதேச்சாதிகாரம் செலுத்துகினறது ஏன்? அது உலகம் போற்றும் உத்தமர் காந்தியாரின் உயிரையும் கவ்வியது.

பொருளையும், வியாபாரத்தையும் பெரிதெனக் கொண்ட ஆங்கிலேயர் மதத்திலும், சமூகத்திலும் நோக்கம் செலுத்தாது ஆட்சி நடத்தினர். அடிமை வாழ்விற்கு இன்றும் உயர்வு ஏற்படவில்லை. இந்நிலையில் ஆதி குடி அவதியில் அமிழ்ந்தும் அழிந்தும் போனான் திக்கற்று, கேட்பாரற்று, கீழ் மகனானான்.

மேனாட்டு அடிமையை விட கீழானவனாகவும், தீண்டாதவனாகவும் ஒதுக்கப்பட்டவனுமாக ஆனான். மற்றவர்கள் பூதேவர்களென்றும் உயர்ந்தவர்களென்றும் கருதப்பட்டனர். ஆதியன் அரக்கனானான், சண்டாளனானான். துவேஷம் கர்பிக்கபபட்டது. இந்நிலை இன்னும் இல்லாமலில்லை. காலம் மாறுகிறது. ஆனால் பழங்குடியின் அந்திவானம் இருட்டை நோக்கி விரட்டப்படுகிறது.

அமெரிக்க நாட்டு அடிமைகளான நீக்ரோக்களின நிலை வேறு; உணவு, உடுக்கையில் மற்றவர்களோடு சமத்துவமுண்டு. அந்தஸ்தில் மாறுபட்டிருக்கலாம், ஆனால் தாழ்ந்தவனை அண்டவிடாமல் தொடாமல் தீட்டு என்ற அசம்பாவிதத்தைக் கற்பித்திருப்பதுபோல் அந்நாட்டிலில்லை. பழங்காலத்தில் ரோம நாட்டிலும் அடிமை வாழ்வின் கதி இந்நிலையிலில்லை. ஹீலட்ஸ் என்பவர் இவ்வளவு இழிவாகக் கருதப்படவில்லை. பில்ப்பியஸ் பாட்ரீசிய வித்யாசங்கள் இவ்வளவு விபரீதமானவையல்ல, ஆனால் நியாயத்திற்கும் நேர்மைக்கும் புறம்பான கோட்பாடுகள் இந்நாட்டில் ஆரியரால் ஏற்படுத்தப்பட்டது. அவர்களின் சூழ்ச்சி அவர்களின் சுயநல சுகஎகபோக வாழ்விற்கே தான் அடிகோலியது.

இந்நாட்டில் சுதந்திரம் சுயேச்சையென்று பேசப்படுகிறது. யாவரும் சரிசமமானவர் என்று கூறப்படுகிறது அதுவும் அமரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்ற இந்நாட்டுப் பிரதமரால். ஆனால் இங்குள்ள நிலையென்ன? தாழ்த்தப்பட்டவன் கண்டதென்ன? பொருளாதாரமற்ற வாழ்க்கையில் சுகாதாரம் யாதெனத் தெரியாது வானமே கூரையாய். சாலைபுரமே ஒதுக்கிடமாய் மழையிலும் பனியிலும் வெய்யிலிலும் வாடி வதைகிறான். அழகிய நகரமென அழைக்கப்படும் சென்னையிலே இக்கதியென்றால் நாட்டுப்புற பாங்கில் நலியும் அவன் கதி தான் என்ன’ ஆண்டைக்கு உழைத்துழைத்து கால்வயிற்றுக் கூழுக்கும் பரிதவிக்கும் நிலை எதனால்? ஆயுள் பூராவும் அடிமையாகயிருக்க அடிமை ஓலையென்றும், கடன்பத்திரம்

என்றும் எழுதித்தந்து ஆயுள் அடிமையாகி ஊதியமின்றி "பறை வயிறு அறை வயிறு தானே" என்ற ஆண்டைகளின் பழமொழிக்கு இலக்காகி பகலென்றும் இரவென்றும் பாராது 24 மணி நேரமும் ஆடிக் காற்றிலும், ஐப்பசி பனியிலும் அலைந்து அவதியுற்று உழைத்து, தையில் தானியத்தை ஆண்டையிடம் குவித்துக் கொட்டிவிட்டு வெறுங்கையுடன் திரும்புவதை நினைத்தால் நெஞ்சம் குமுறுகிறது. உடைந்த உள்ளத்திலிருந்து வெளி கிளம்பும் எரிமலை போன்ற உணர்ச்சி தன் உரிமையை கேட்க நாடுகிறது. ஆட்சியாளரின் போக்கை சீர்தூக்கி பார்க்கிறது பொருளாதாரக் குறையை நிறைவேற்ற முற்படுகிறது. ஆகவே இன்றியமையாத பொருளாதார முன்னேற்றமின்றி பழங்குடிமகன் ஒரு சிறிதும் முன்னேற்றமடையமாட்டான். ஒரு சில சுயநலமிகள் கொழுத்திருக்க பெருநில மக்கள் பலர் வாடிவதங்குவது நாட்டின் நலனைப் பாதிக்கும் என்பதை ஆளும் அதிகாரவர்க்கம் அவசியம் உணர வேண்டும். சுயேச்சை சரிசமம் எனப்பேசப்படும் வாய்ப்பேச்செல்லாம் வெறும்மேல் பூச்சாகும். பொருளாதாரத்துறையில், ஆட்சியில் உள்ளவர்கள் ஆழ்ந்த. அவசியமான திட்டங்களைத்தீட்டி நசுக்கப்பட்ட மக்களுக்கு நலன் வளரும் வண்ணம் ஆவன செய்வது அவர்களது தலையாய கடமையாகும். இதுவே இந்நாட்டு தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு முக்கியமான வழியாகும்.

---


பொங்கல் திருநாள்!
புதிய டிசைன்களில் சிறந்த
தயாரிப்பு.

**D. A. சேகர் & பிரதர்ஸ்**

(டேய்லரிங் மார்ட்)

**26**. V. P. கோயில் தெரு,
குயப்பேட்டை, மயிலாப்பூர்,
சென்னை 4.

எமது வாடிக்கைக் காரர்களுக்கு
பொங்கல் வாழ்த்து !!



பொங்கற் புதுநாளில் எனது
வாடிக்கைக் காரர்களுக்கும்,
மற்றும் அனைவருக்கும்
எனது மனமார்ந்த

**வாழ்த்தினையும்,**

**வணக்கத்தையும்**

தெரிவித்துக் கொள்கிறேன்.



எமது ஜெயசிங் மார்க்
துவரம்பருப்பு பெயர்பெற்றது.
"புரட்சி வீரன்" மார்க்
உளுத்தம் பருப்பு ருசிகரமானது.

**V. T. பெரியசாமி**

பருப்பு வியாபாரம், (விபகோ) சப்ளையர்,
11, ராஜகோபால் நாயுடு தெரு,
வண்ணை, :: மதராஸ் 21.

# தொழிலாளரும், நாட்டுப் பிரிவினையும்

(பொன்மலை பராங்குசம்)

"திராவிட நாடு திராவிடருக்கே" என்னும் இதய கீதம் இன்று, திக்கெட்டும் பரவி வருகிறது. மாற்றுக் கட்சித் தோழர்களிடையே கூட ஓரளவு மன மாறுதல் உண்டாகி வருவதை காணுந்தோறும் நாம் பூரிப்படையாமலிருக்க முடியாது.

ஆந்திராவை நீக்கிக் கணக்கிட்டாலும் தமிழகத்தின் ஜனத்தொகை சுமார் 3 கோடியாகும், அதாவது 300 லட்சம் மக்கள் கொண்டது நம் நாடு.

இலங்கையின் ஜனத்தொகை மொத்தம் 70 லட்சந்தான. ஆனால் அவர்கள் இன்று இந்திய யூனிய ஆதிக்கத்துக்கு மட்டுமல்லாது வேறெந்த அந்நிய ஆதிக்கத்துக்கும் கைகட்டி வாய்பொத்தி தங்கள் நாட்டை ஆளவேண்டிய இந்நிலையில இல்லை. இலங்கையின் சுயராஜ்யம் அவ்வளவு தன்மானத்துடன் விளங்குகிறது.

ஆனால் நமக்குக் கிடைத்த சுயராஜ்யமோ என்றால் வெள்ளையர் பிடிப்புக்குப் பதிலாக வடநாட்டு மததிய ஆட்சியின் கெடுபிடிக்கு நமது மாகாண அமைச்சர்கள் அடங்கி நடக்க வேண்டியிருக்கிறது,

நம்நாட்டுத் தொழில் வளர்ச்சி முதல் கல்வி அபிவிருத்திவரைக்கும் வடநாட்டிலுள்ள மத்திய ஆட்சிபீடத்தினர் தலையாட்டினால்தான், நம் மாகாண ஆளவந்தார்களும் அசைய முடியும்,

நம்நாட்டில் ஒரு பஞ்சாலை, அல்லது ஒரு பெரிய தொழில் நிலையம், புதியதாகத் திறக்கப்பட வேண்டுமானால் நம் மந்திரிமார்களுக்கு, நல்ல எண்ணமிருந்தாலும், வடநாட்டு மத்திய சர்க்கார், அனுமதியில்லையெனில் என்றும் செய்ய முடியாது.

இன்று நம் நாட்டுத் தொழிலாளர் நிலையைப் பற்றி யான் அதிகம் விவரிக்கத் தேவையில்லையென்று கருதுகிறேன். சுமார் 5 லட்சம் நெசவுத் தொழிலாளர்க்கு சரியான வேலையில்லாது தவிக்கின்றனர். கள்ளிறகும் தொழிலாளரோ வேறு தொழிலுக்கும் வழிவகையின்றி வாடுகின்றனர். முதலாளித்துவத்தின் மூர்க்கத்தனததினால் மற்றும் பல தொழில் நிலையங்களில் போராட்டம். இவ்வளவுக்கும் அரசியலாரோ எனின் பத்திரிகைகளில் அறிக்கைகள் விடும் கண்துடைப்பு வேலையில் இருந்து வருகிறார்களேயன்றி நடைமுறையில் எல்லாம் பூஜ்யந்தான்.

இந்நிலைக்குக் காரணம் என்ன? நம்நாட்டு அரசியல் முறை அவ்வளவு மட்டரகத்திற்கு வந்துவிட்டது. நம் மந்திரிகளுக்கு நாட்டின் முன்னேற்றத்தில் அக்கரையிருப்பினும், அவர்களால் ஒன்றும் செய்ய முடியாத பொம்மைகள் போன்று சூத்திரக்கயிறு வடநாட்டு மத்திய ஆட்சிபீடத்திலிருந்துஆட்டப்படுகிறது.

வேலையற்றோருக்கு வேலை கொடுக்கவும், வறுமையை ஒழிக்கவும், நாட்டின் பொருளாதாரம் உயர வேண்டும். அதற்கு அடிப்படையாக தொழில்வளர்ச்சி துவரிதமாக முன்னேற வேண்டும்.

நம் திராவிடத்தில், இந்தியாவின் மற்ற எந்த பாகங்களையும்விட இயற்கை வளர்ப்பம் மிக அதிகம். ஆனால் அரசுரிமைதான் மிக மோசம். அவ்வுரிமை அடையாதவரை தொழில் வளர்ச்சியோ, பொருளாதார முன்னேற்றமோ, உழைப்பவர்க்கு உரித்தான நிரந்தர உரிமையோ பெற முடியாது.

இன்று ஒரு தொழிலாளி தனது 10 அணா தினக்கூலியை 14 அணாவாக உயர்த்திக்கொள்வதற்கு எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்கு உட்பட வேண்டியிருக்கிறது. நியாயமான—நிரந்தர உரிமையைப்பற்றி பேசினாலோ வடநாட்டு ஏகாதிபத்தியம் அதுவும் நம் மந்திரிகள் மூலமாகவே அடக்குமுறை தர்பார் நடத்துகிறது.

எனவே, நம் நாட்டு அரசியலில் நமக்கு முழுப் பொறுப்பிருப்பின் இன்றுள்ள தொழிலாளரின் பரிதாப நிலையை மிகவிரைவில் மாற்ற முடியும். பல பெருந்தொழிற்சாலைகளை நிறுவி வேலையில்லாத் திண்டாட்டம் தலைகாட்ட முடியாது செய்யலாம். இல்லாவிடில் ஏதோ சாதாரண சிறு காரியங்களை, மலையை தோண்டி எலியைப் பிடித்ததுபோலத்தான் தொழிலாளர்கள், போராட்டம் என்ற பேரால் காலத்தை வீணாக்க நேரிடும்.

ஆகவே, திராவிட முன்னேற்றக்கழகத்தின் உறுதியான கொள்கையாகிய திராவிடநாட்டுப்பிரிவினைக்குத் தொழிலாளர் தோழர்கள் மற்ற எல்லோரைக் காட்டிலும் அதிக ஊக்கமும் உணர்ச்சியும் காட்ட வேண்டுவது இன்றியமையாததாகும்.

நம் திராவிடம். தொழில் அரசாக ஆகவேண்த்மானால் முதாலாவதாக நம்நாடு எந்த ஏகாதிபத்திய இணைப்பிலும், பிடிப்பிலும், மேற்பார்வையிலும் இருடுதல் கூடாது என்பதை சென்னை மாகாணத்தொழிலாளர் தோழர்கள் உணர்ந்து திராவிடநாட்டுப பிரிவினைக்குப் பேராதரவு காட்டுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

## அந்தோ அழகிரி!

(அ. ச. பாலு, பொள்ளாச்சி)

அழகிரி ! அழகிரி !! அழகிரி !!!

அறிவியக்கத் தளபதியாய்
அமர்ந்திருந்த அழகிரி
அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை
அண்ணா எங்கள் அழகிரி.
உறுதி மிக்க திராவிடர்க்கு
உண்மைத் தொண்டன் அழகிரி
ஊர் முழுதும் பகுத்தறிவை
ஊட்டிச் சென்ற அழகிரி !

சூழ்ச்சியாலே கடவுள் பேரில்
சொல்லி வைத்த ஏடுகள்
தோற்றுவித்த சாதிகளால்
துயர் மிகுந்த கேடுகள்
ஆட்சி செய்து திராவிடத்தை
அழிக்கவிடோ மென்றவர்
அறிவுகொண்டு சிந்திப்பீரென்
றார்த்தெழுந்து நின்றவர் !

ஆரியத்தின் ஆணிவேரை
ஆட்டிவிட்ட அழகிரி,
அனற்பொறி பறக்கப் பேசும்
ஆற்றல் மிகுந்த அழகிரி,
போரியக்கிப் புதுமை தந்த
புரட்சி வீரன் அழகிரி,
போய் மறைந்தா யெண்ணில் நெஞ்சு
புண்படுதே அழகிரி !


எங்கள் வாடிக்கைக்காரர்களுக்கும்,
அபிமானிகளுக்கும் எங்கள்
மனமார்ந்த பொங்கல்
வாழ்த்துக்கள் !

எங்கும் புகழ்பெற்ற

சக்தி

பரிமள சீயக்காய் தூள்

எண்ணெ ஸ்நானத்திற்கு ஏற்றது.

*

66 ஹிலால்வாஷிங்சோப்,
சந்திரா நீலகிரி தைலம்
முதலியன தயார் செய்கிறோம்.

*

உரிமையாளர் :
P. A. இளங்கோ.
தயாரிப்பு :—
66 ஹிலால் சோப் தொழிற்சாலை
44, கடை தெரு, கூடலூர். O. T.

# இக்பால்

K. A. மதியழகன்

“லைலா-மஜ்னு” இவை இரண்டு வார்த்தைகள் கொண்ட வெறும் சொற்றொடரல்ல; இரண்டு “வாழ்வின்” சோகத் தொடர் கதை. லைலா அழகுத் திருமதி; அவளின் அன்பன் கைஸ். இருவரிடையேயும் காதல் துளிர்த்தது; பள்ளிப் பருவம் முதல் இருவரும் துள்ளி விளையாடினர். அவனுக்கு அவள் என்றால் அழகின் எல்லை. அவளுக்கும் அவன் அப்படித்தான். பேசும் இரண்டுள்ளத்தின் காதலினை புட்டுப் புட்டுப் புகன்றார். பெற்ற “எமன்”கள் கேட்கவில்லை. லைலா வேறொருவனுக்கு விற்கப்படுகிறாள். வேதனை கொள்கிறான் கைஸ். விம்மி விம்மி அழுகிறாள் லைலா. கட்டுப்பாடு அவர்களின் காதலை தீய்க்க முடியவில்லை. கைஸ் பித்தனாகிறான், அவள்மேல் கொண்ட பிரேமையால். லைலாவின் இதய தாபத்தை உணர்கின்றான் கட்டிய கணவன். காதலனைச் சேர் என கட்டவிழ்த்து விடுகிறான் கன்னியை. லைலா இழந்த காதலனைத் தேடி அழுகிறாள், அராபிய பாலைவன வெளியிலே. மஜ்னுவும் மங்கையின் நினைவாலே அலைந்து திரிகிறான். சாவின் முனையிலே சந்திப்பு நிகழ்கிறது. இந்த உள்ளத்தைக் குலுக்கும் நிகழ்ச்சி அராபிய இலக்கியத்திலே மட்டுமல்ல, இஸ்லாமியரின் இதயத்திலே யெல்லாம் காதலின் வெற்றிக்கோர் எழிலோவியமாய் இன்றும் விளங்கி வருவது; காதலின் வெறியை, சக்தியை, மேம்பாட்டை, உறுதியை உலகுக்குக் காட்டும் உன்னதமான சம்பவமாய் பலகவிஞர்கள் தீட்டினர். ஆனால், அதே இஸ்லாமிய சமுதாயத்திலே தோன்றினான் ஓர் புரட்சிக் கவி. அவனே புதுமையின் தூதுவன். வெறும் உணர்ச்சிக்கு மட்டும் அவன் அடிமையல்ல, ஊராருக்கு உண்மையை உரைக்க வேண்டும் என்ற உறுதியும் பூண்டவன். மக்களின் கருத்திலே இருக்கும் பழைய மாசை—மௌடீகத்தைப் போக்க வேண்டுமென்ற மட்டற்ற ஆவல் அவனுக்கு. அந்தக் காரியத்திற்கு மக்களுக்குத் தெரிந்த “லைலா-மஜ்னு” இலக்கியத்தையே பயன் படுத்தினான். அவனுக்கு காதல்வெறி மட்டுமில்லை, கருத்து வெறியும் நிறைந்திருந்தது. தனது காவிய மொழிகளிலே தீட்டினான். கைஸ்—லைலா காதலர்கள். லைலா ஒட்டகத்தின் மீது செல்வாள். அப்போதெல்லாம் அந்த ஒய்யாரியின் எழிலைப் பருகுவான். இதேபோலத்தான் மேதினியிலே உள்ள மக்கள் என்ற கைஸ், உலகப் பொருள்கள் என்ற லைலா மீது வாஞ்சை பொழிகின்றனர். ஆனால், அவள் ஏறி வரும் பழைய கருத்துக்கள் என்ற ஒட்டகம் கிழமாகி விட்டது. எனவே உலக மக்கள் என்ற கைசுக்கு புதுக் கருத்துக்கள் என்ற புது ஆசைகளைத்தான் தூண்டிவிட வேண்டும் என்று இப்படிக் கூறினான். “லைலாவின் ஒட்டகம் கிழமாகிவிட்டது; கைசின் உள்ளத்தில் நாம் புது ஆசைகளை எழுப்புவோம்” இந்த முறையில் தான் கொண்டிருந்த நோக்கத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தியவன், இஸ்லாமிய இன எழுச்சியின் உருவம், ஈடு இணையற்ற கவிஞன் இக்பால்.

உர்து கவிதா வானத்திலே ஒளிவிடும் நட்சத்திரமானார் இக்பால். இவரின் உதயம் பலருக்கு திகில்—திகைப்பைத் தந்தது. இக்பால் வெறும் சொல்லடுக்கு செப்பிடு வித்தை செய்யவில்லை. வீழ்ச்சியுற்ற இனத்தின் விடுதலைக்கு வெடிகுண்டுகள் தயாரிக்கும் வேலை கவிஞனுடையது எனக் கண்டார். வீண் வேதாந்தங்களை விருத்தமாகவோ, வெண்பாவாகவோ செய்வது வீணர் வேலை—விவேகியான கவிஞனின் கற்பனை அதற்கு விரயமாக வேண்டுவதில்லை என அறிந்தார். கவிதை கலா ரசிகர்களின் சோம்பேறி வாழ்விற்கு நிலாச் சோறாக இருக்கக்கூடாது.

செயலாற்றும் கரு சிங்கங்களுக்கு விருந்தாக—செந்தேனாக இருக்கவேண்டுமென்பது அவரது நோக்கம். எனவே, உல்லாசத்துக்கு என்ற உதாவக்கரை முறையை மாற்றி உபயோகத்திற்கென்ற வகையில் கவிதைகளை வரைந்தார்.

இந்திய உபகண்டத்திலே, பஞ்சாப் பகுதியிலே, சியால்கோட் என்ற செழுமையான ஊர். அந்த இடம்தான் இக்பால் பிறந்த பூமி. 1873-ம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள், ஓர் நாள், ஓர் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை குவலயம் போற்றும் கவிஞனவான் என்று யாரும் நினைக்கவில்லை. சின்னஞ் சிறுவன் இக்பால் கல்வி கற்கத் தொடங்கினன். சியால்கோட்டிலேயே அவனுக்கு அந்த இளம் பருவத்திலேயே கவி புனைவதிலே, காவியம் தீட்டுவதிலே, கற்பனை செய்வதிலே ஒரு அலாதி ஆசை அரும்பியது. கல்லூரி மாணவனான இக்பால், லாகூர் சென்றான் மேல் படிப்புக்காக. தன்னுள்ளே தூங்கிக் கிடந்த கவிதா சக்தியை வெளிப்படுத்த வாய்ப்பும் கிடைத்தது இங்கே. அந்த நேரம், உர்து மொழி பலராலும் ஓம்பப் பட்டது. பல கலைக்கழகங்கள், இலக்கிய மன்றங்கள் லாகூரிலே மலர்ந்தன. அங்கெல்லாம் கவிதா ஆராய்ச்சி, இலக்கிய விமர்சனம், பாட்டுப் புனைதல் முதலியவை நிகழ்ந்தன. இக்பாலும் இந்தக் கழகங்களுடன் தோழமை பூண்டான். உர்து மொழியிலே சில பல பாட்டுகள் இயற்றினன். ஏதோ இரண்டொரு பத்திரிகைகளும் பிரசுரித்தன. பாரசீகச் சொல்லடுக்குகள் நிரம்பிய புதிய கருத்துக்கள் மிதந்த இவனது பாடல்களுக்கு புகழ்மாலை கிடைத்தது, ஒரு சாராரிடமிருந்து. ஆனல், அதே நேரத்தில் பழைமை விரும்பிகள், பண்டித மணிகள், உர்து புலவர்கள் உறுமினர், இவனது ஆவேசக் கவியமுதம் கண்டு. கருத்துக்களைத் தாக்க, கிலி அவர்களுக்கு. "இலக்கணப் புலி"கள் என்ற தங்கள் பட்டத்தை வைத்துக்கொண்டு மொழி சரியில்லை, இது குற்றம், அது தவறு என ஆர்ப்பரித்தனர் ஆனல், இக்பால் இவைகளைக் கண்டு அஞ்சவில்லை. தாமஸ் அர்னல்ட் என்ற தத்துவப் பேராசிரியரின் மாணவர் இக்பால். இக்பாலின் கற்பனை ஆற்றலையும் அறிவுத் தாகத்தையும் இவர் நன்கு புரிந்துகொண்டார். எனவே, எதிர்கால இலக்கியப் பூங்காவில் உலவப்போகும் இக்பாலுக்கு, மேனட்டு இலக்கிய முறைகளை எடுத்துக் காட்டினர். பிற்போக்காளரின் பிதற்றலுக்குக் கவலைப்பட வேண்டாமெனவும்கூறினர். இவர் காட்டிய உற்சாகம் இக்பாலுக்கு இருதயத்திலே தைரியத்தை அளித்தது.

லாகூரில் எம்.ஏ. பட்டம் பெற்ற இக்பால், ஐரோப்பாவில் 3 ஆண்டுகள் தங்கினர். கேம்பிரிட்ஜிலுள்ள டிரினிடி கல்லூரியில் தத்துவ சாஸ்திரத்தில் தேறினர். ஜெர்மனியிலுள்ள முனிச் கல்லூரியில் டாக்டர் பட்டமும் பெற்றார். இதே நேரத்தில் பாரிஸ்டர் படிப்பும் பயின்று தேர்ச்சியடைந்தார். இந்த மேல்நாட்டு அநுபவமும், கற்பனையும், காவிய ரசனையும் நிறைந்திருந்த அவருக்கு, நல்ல கருத்து வளர்ச்சியையும், அறிவியக்கக் கருத்துக்களையும் தந்தது.

எந்த இக்பால் தனது இளமையில் "வாழ்க்கை என்பது போதை, மறதி, உறக்கம் ஆர்வமற்றிருத்தல்" என்று பாடினரோ, அதே இக்பால், "வாழ்வு என்பது ஓயாப் போராட்டம்; அசைவற்ற நிலையென்பது சாவுதான். உழைப்பவர் முன்னேறிவிடுகின்றனர். ஒரு கணமாவது தயங்குபவர்கள் கால யந்திரத்தில் நசுக்குண்டுபோகின்றனர்" என பாட ஆரம்பித்தார். இது ஐரோப்பாவைச் சுற்றி வந்ததின் விளைவு. ஐரோப்பிய நாடுகளைப் பற்றி, அதன் அறிவு பலத்தைப்பற்றி, விஞ்ஞான விருத்தியைப்பற்றி விளக்கம் கூறுகிறார். "மேல்நாட்டு பலத்தின் இரகசியம் அதன் வாத்தியங்களிலில்லை. அதன் மங்கையரின் மாயா மினுக்குகளால் வந்ததுமல்ல. மதமற்று இருப்பதும், லத்தீன் லிபியைப் பயன்படுத்தலும் அதன் பலத்துக்குக் காரணமல்ல. மேல் நாட்டின் பலம் அறிவாலும் விஞ்ஞானத்தாலும் உண்டாயிற்று. அதன் விளக்கு இந்த நெருப்பால் ஏற்பட்டது என்கின்றார்.

1915-ஆம் ஆண்டு இக்பாலின் இணையற்ற நூல் வெளிவந்தது. அவருக்கு புகழேணியில் உயர ஏறப் பயன்பட்ட ஏடும் இதுதான். ஆனல் வைதீகர்களின் வசவுகளையும், கண்டனங்களையும் பெற்றுத் தந்ததும் இதுதான். "அஸ்ராரேகுதி" அதாவது அகத்தின் இரகசியம் என்பது இதன் பெயர். இந்நூலுக்கு பல பத்திரிகைகளிலிருந்தும், பத்தாம் பசலிகளால் தாக்குதல் குவிந்தது. இந்த அழகிய

இலக்கியத்திலேதான் "வாழ்க்கைப் போராட்டத்திற்கு உன்னைப் பழக்கு; வாழ்க்கைத் தணலில் உன் உடலையும் உள்ளத்தையும் போட்டெடுக்கக் கற்றுக் கொள். பயத்தையும், ஆவலையும், துக்கத்தையும் அகற்று. கல்லைப்போல், வைரம்போல் திடங்கொள். பலங்கொள்வதே வாழ்க்கையைப் புகழுடையதாக்கும் பலவீனம் பயனற்றது. பருவந் தப்பச் செய்வது" என்று வாழ்வுக்கு இலக்கணம் போதிக்கிறார். விடுதலை வீரனையும் அடிமையையும் குறித்து கீழ்க்கண்டவாறு மொழிகிறார். "அடிமையையும், விடுதலை வீரனையும் பகுத்தறியும் வழியொன்று சொல்கிறேன். அடிமை, கூறியதையே திரும்பத் திரும்பக் கூறுவான். அவனிடம் சொந்தமான கருத்தில்லை விடுதலை வீரனோ சுருசுருப்புடையவன். அவன் இதயத் தந்தி புதுப்புது நாதங்களை எழுப்பும். அவன் செய்ததையே திரும்பச் செய்ய விரும்பமாட்டான். அடிமைக்குக் காலம் விலங்காகும். அவன் நாவு விதியைப் பற்றியே பேசும். விடுதலை வீரனின் உறுதியோ, விதிக்கும் போதனை புரியும். அவன் கரம் செயல்களுக்கு உருவந் தரும்." இந்தக் கருத்துக்கள் வைதீகபுரியினரின் வயிற்றெரிச்சலைக் கிளப்பத்தானே செய்யும். ஆனால், துருக்கியிலிருந்து, ஆப்கானிஸ்தானத்திலிருந்து, எகிப்திலிருந்தெல்லாம் இதற்கு அமோக ஆதரவு பெருகியது. எதிர்ப்புக்கு இன்னொரு காரணமும் உண்டு. பாரசீக கவிஞர் ஹாபீஸ் என்பவரின் கோட்பாடுகளையும் வன்மையாகக் கண்டித்திருந்தார். இதே நேரத்தில், டாக்டர் நிக்கல்சன் என்பவர் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தார் இந்நூலை. மேனாட்டிலும் அவரது கவிதை பவனி வந்தது. உடனே இவர்களும் புகழத் தொடங்கிவிட்டனர். விசித்திர நாடல்லவா இது! செத்தபின் போற்றுவர்; சிமைக்காரன் சிறப்புச் செய்தபின் புகழ்வர்! இது இந்நாட்டு நியதி!! பாரதியின் பாடலை ஒரு காலத்தில் பிரசுரிக்காத பத்திரிகைகள், இன்று பளிங்கு மண்டப வைபவத்தைத் தீட்ட முன்வரவில்லையா? வங்கத்தின் தங்கம் என்று புகழ் பெற்ற தாகூரின் கீதாஞ்சலி, ஆங்கிலத்தில் வருவதற்கு முன் அந்த நாட்டு மொழிப் பண்டிதர்கள் இலக்கணக் குற்றங்களை யெண்ணி யெண்ணி குதூகலித்துக் கிடந்தனராம். இவைகளை தூய்மையான வங்காளத்தில் தீட்டுக என்று மாணவர்களிடம் நீட்டுவாராம் கீதாஞ்சலியை. ஆனால், கீர்த்தியின் உச்சிக்குச் சென்றுவிட்டார் தாகூர் என அறிந்ததும், எங்கள் வங்கம் தந்த கவிஞன் தாகூர் என வாஞ்சையுடன் ஏற்றத் தொடங்கினர் வங்காளிகள். இக்பால் மட்டும் எப்படி விதிவிலக்காக முடியும்.

"ஜாவீதுநாமா" என்று இவர் எழுதிய காவியத்தை, இவரின் சிறந்த இலக்கியம் எனலாம். இளைஞர்களுக்கு லட்சிய வாழ்வைப் புகட்ட தீட்டப்பட்ட பாடல்கள் அவை. தனது மைந்தன் ஜாவீதின் பெயரால் அந்நூலை அழைத்தார். அதன் பொருள் அவனைப் போன்ற வாலிபர்களுக்கு தேவையானது என்பது. இதிலே அவரது விடுதலை வேட்கை, லட்சிய விளக்கம் ஆகியவை தெளிவாகின்றன. இல்லாத கற்பனை உலகுக்குப் பயணம் செய்கிறார். சந்திர மண்டலம், செவ்வாய் கிரகம் முதலியவற்றிற்கு கவிஞர் செல்வதாகவும், அங்கு அறிஞர்களைச் சந்திப்பதாகவும் தீட்டப்பட்டுள்ளது.

இதனிடையே பல ஆண்டுகள் வழக்கறிஞராய் புகழ் பெற்றார். பேராசிரியராய் சிறிது நாள் அமர்ந்திருந்தார். மீண்டுமொருமுறை ஐரோப்பிய சுற்றுப் பயணம் செய்தார். திராவிட நாட்டிற்கு ஒருமுறை வந்துப்போந்தார். பஞ்சாப் பல்கலைக் கழகம் போன்றவைகளுக்குப் பணியாற்றினார். மக்களுக்கும் குறிப்பாக இஸ்லாமியருக்கும் இவரது தொண்டு செலவிடப்பட்டது. முஸ்லீம் லீக் அரசியலிலும் பங்கு கொண்டார். பாகிஸ்தான் என்று விளங்கும் நாடு அவரது கற்பனையில் எழுந்த கருத்தோவியம். 40 ஆண்டுகளுக்குப் பிறகு ஆசியப் படத்தில் அதுவும் ஓர் நாடாக அலங்கரிக்கிறது. 1930-ம் ஆண்டில் அலகாபாத்தில் நடந்த அகில இந்திய முஸ்லீம் லீக் மாநாட்டிற்குத் தலைமை தாங்கி கருத்துரை வழங்கினார். அதிலே உள்ள பொறுக்கு மணிகள் சில.

"நம் சுரண்டலை தேசியப் என்ற போர்வையில் மறைத்துள்ளோம். வெளியே பரந்த மனம் படைத்த தேசிய வாதிகளாகக் காட்டிக்கொண்டாலும், உள்ளே ஜாதி உயர்வு என்ற குறுகிய மனங் கொண்டவர்களாக இருக்கிறோம். தங்களுக்கொத்த முறையில் தங்கள் இனத்தை வளர்க்க விரும்பும் எண்

ணம் எத்தகைய குறுகிய வகுப்பு வாத்தா லும் எழுவதல்ல'' இவை இன்னும்கூட பாடம் புகட்டும் அருமையான கருத்துக்கள்.

1938-ம் ஆண்டு மார்ச் மாதம், 25-ப் நாள் உலகிலிருந்து மறைந்தார். லாகூரில் சவ அடக்கம் நடைபெற்றது. பல ஆயிரம் பேர் இறுதி மரியாதை செய்தனர். இலக்கிய உலகு தேம்பியது. கவி தாகூர் "இக்பாலின் மறைவு ஈடுசெய்ய முடியாத நஷ்டம். இலக்கிய உலகிலே பெரிய இடைவெளியை உண்டுபண்ணிவிட்டது" என்று வருந்தினர்.

இக்பாலின் கவிகளிலே கற்பனை மின்னியது. காவிய மெருகு இருந்தது. புதுமை தவழ்ந்தது. வார்த்தைகளிலே வல்லமையும் வசீகரமும் குழைந்திருந்தன. ஆபாசக் களஞ்சியங்களாய் இல்லாமல் அறிவுத் தெளிவு பிரகாசித்தது. இயற்கை எழிலை, அழகின் சிரிப்பை—கவிதைகளிலே தெளித்துள்ளார். நகைச்சுவையாகவும், கிண்டலாகவும், ரசக்காகவும் பாடல்கள் புனைந்துள்ளார். மனிதனுக்குத் தலைமுறை தலைமுறையாக வந்த பழைமை கூடாது, புதுமை பூக்க வேண்டும் என்பதற்கு இப்படிக் கூறுகிறார்.

மனிதன் சிறப்பு புதியதை போற்றுதலிலே தான். வானமதியும், விண்மீனும்தான் தாம் செய்தவற்றையே திரும்பச் செய்கின்றனவே என்று.

இதையே ஆண்டவனை நோக்கி மனிதன் கேட்பதுபோல் கிண்டலாக எழுதுகிறார்.

"ஆண்டவன் கட்டளை பிறப்பித்தான். அது இப்படித்தான் இருக்கவேண்டும், வேறு ஒன்றையும் சொல்லாதே" என்று மனிதன் சொன்னான்.

ஆமாம் அது இப்படித்தான் இருக்கிறது. ஆனால் அப்படி இருந்திருக்க வேண்டும் என்று எவ்வளவு அருமையான சவுக்கடி! வேறோர் இடத்தில் ஆண்டவனை நோக்கி "இறைவனே! மனிதனைப் படைத்துவிட்டேன் என்றுபெருமை கொள்ளாதே! அவர்கள்வெறும் பொம்மைகள், பதுமைகள்'' என்கிறார். வட்டிக்குப் பணம் கொடுத்து கொட்டிப் பிழைக்கும் கோமான்களைப் பார்த்து கொசு கூறுவதாகக் கிண்டல் செய்கிறார். கொசு கூறுகிறது: "அய்யோ! இரவு முழுதும் ஓடியாடிப் பாடுபட்டும் ஒரு சொட்டு ரத்தம் தானே கிடைத்தது. ஆனால், எந்த முயற்சியும் செய்யாமல் வட்டிக்குக் கொடுக்கும் வன்னெஞ்சர்கள், இருந்த இடத்தில் இருந்து கொண்டே கடன்காரர் இரத்தம் முழுவதையும் உறிஞ்சிவிடுகிறார்களே'' என்று பொருமைப்படுகிறதாம். நகைச்சுவைக்கு நகைச்சுவை! கருத்துக்குக் கருத்து!

நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சித்திரச் சோலையைக் காண்கிறார். அவரின் கற்பனை உள்ளத்திற்கு உவகைக் காட்சிகள் மட்டும் நினைவுக்கு வரவில்லை. சோலையிலே உலவும் சிங்காரியும் அவளது சேடிகளும் நினைவுக்கு வரவில்லை! ஆனல், சோலையின் எழிலுக்குக் காரணமான தொழிலாளரின் நினைவு வருகிறது. உடனே பாடுகிறார். பாடுவதென்ன சோலைகளையே கேட்கிறார்.

"சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்த இப்பாரினிலே—முன்னர்
எத்தனை தோழர்கள் இரத்தம் சொரிந்
தனரோ உங்கள் வேரினிலே'' என்று.

இதுபோலவே கவிஞர் இக்பாலுக்கும் எழிலையும் இயற்கையும் காணுகிற நேரத்திலெல்லாம், துயரமும் துன்பமும் சேர்ந்துதான் நினைவுக்கு வருகிறது. ஓர் ரோஜா மலரைக் காண்கிறார். நாமெல்லாம் பாடுவதானல் ரோஜாவின் கம்மென்ற மணத்தைக் கவிபுனைவோம். எவளாவது எழிலரசி ஒருத்தியின் கன்னங்களின் சிவப்பு நிறத்திற்கு உவமை கூறுவோம். இக்பாலுக்கு மலரோடு இருக்கும் இணைபிரியா நண்பன் முள்ளின் ஞாபகம் வருகிறது. வாழ்வில் சுகதுக்கங்கள் உண்டு. மேடு பள்ளங்கள் உண்டு. அவற்றை புன்னகையோடு சமாளிக்கவேண்டும் என்பதற்கு "பனித் துளி'' என்ற பாட்டிலே இப்படிக் கூறுகிறார்.

"இனிய மலரின் ஆடையிலே
வேதனை தரும் முள்ளும் இருக்கிறது;
அது முள்ளானாலும் மலரின் கூட்டாள்;
அதன்வெறி பிடித்த காதலன்."

இதுபோன்ற வகைகளிலெல்லாம் கவியமுதத்தை வாரி வாரி இறைத்தவர் இக்பால். கலையழகேயின்றி கருத்துக்கும் மதிப்புக் கொடுத்தவர்களின் கவிதா மண்டலத்தில் இக்பாலுக்கு நிச்சயமான ஓர் இடம் உண்டு.

# உங்களுக்கு அறிமுகமான

## மதராஸ் பென்ஸில் பாக்டரி

(சிறந்த பென்ஸில் தயாரிப்பவர்கள்)

## ஷோ & கம்பெனி

(அச்சுத் தொழிலில் வெகுகாலமாக பெயரும்
புகழும் படைத்தவர்கள்)

## வி. பெருமாள் செட்டி & ஸன்ஸ்

(உயர்தர ஸ்டேஷனரி & புத்தக வியாபாரிகள்)

5, ஸ்டிரிங்கர்ஸ் தெரு,

மதருஸ்-1.

# இருந்தாலும் இல்லாவிட்டாலும்...?

[D. S. வேலன்]

இத்தகைய பணியைத்தான் மேனாட்டார் நடைமுறையில் செய்து வருகிறார்கள். அதாவது நான் மேலே குறிப்பிட்டிருப்பதுபோல் ஆண்டவனுக்கு இரண்டாவது இடங்கொடுத்திருக்கிறார்கள். இதனால் அவர்களைக் கடவுளை மறந்தவர்கள், நாஸ்திகர்கள் என்று யாரும் குறை கூறவில்லை. நாமும் அவர்கள் பின்பற்றும் வழியை ஏன் பின்பற்றக் கூடாது? இதை விடுத்து கடவுள் ஆராய்ச்சியிலும், கடவுள் உண்டா இல்லையா என்ற வீண் வாதத்திலும் ஈடுபடுவானேன்? எனவே, இப்பொழுது யோசித்துப் பாருங்கள் கடவுள் இருந்தால்தான் என்ன? இல்லாவிட்டால்தானென்ன? இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாம் நமது முன்னேற்றப் பணியைச் செய்வோம் வாரீர்.

அறிவுத் துறையில் ஏதாவதொரு பிரச்னையை எடுத்துக்கொண்டு ஆராயப் புகுந்தால் 'கடவுள்' என்ற சொல் அடிக்கடி குறுக்கிடுவதைக் காண்கிறோம். பிரச்னை சிக்கலாகும்பொழுது, அல்லது முடிவு காண முடியாதபோது, அதனை அந்த அளவிலேயே நிறுத்திவிட்டு, அடுத்த பணி என்ன என்று மேல்நோக்கிச் செல்லும் பண்பு நம் நாட்டவரிடம் இல்லை. எதற்கெடுத்தாலும் "எல்லாம் அவன் செயல்" "நம்மாலாவது என்ன!" என்பன போன்ற சொற்றொடர்களை உபயோகப்படுத்தாதவர்களே கிடையாது.

ஆனால், மேனாட்டவர் நிலை இதுவல்ல. அவர்களுக்கும் கடவுள், மதம் முதலியன உண்டு. எனினும், அந்தக் கடவுளையும் மதத்தையும், நம்மவரைப்போல், அன்றாட மனித வாழ்க்கையோடு கலந்து காலத்தையும் கருத்தையும் வீணாக்குபவரல்லர் அவர்கள். பேசும்போது தம்மையும் அறியாமல் "அட கடவுளே!" (Oh my god For heaven sake) என்றெல்லாம் சொல்லுவதோடு நின்றுவிடுகிறது அவர்கள் வேலை.

இது, அவர்கள் நாட்டிலே ஆண்டவனுக்கு வேலை குறைவு; மனிதனுடைய பகுத்தறிவுக்கு வேலை அதிகம் என்பதைத்தான் காட்டுவதாகும். இங்ஙனம் அறிவுக்கு முதலிடமும், ஆண்டவனுக்கு இரண்டாம் இடமும் கொடுத்த காரணத்தால்தான், மேலை நாடுகளில் விஞ்ஞானம் வளரலாயிற்று. விஞ்ஞானம் வளர்ந்த காரணத்தால்தான், அஞ்ஞானம் அகன்று, அவர்களுடைய வாழ்வு சிறக்கலாயிற்று.

நம் நாட்டு நிலை இப்படியல்ல; நம்மவர் ஆண்டவனை முன்னிருத்தித்தான் எதையும் செய்வர். "பிள்ளையார் சுழியோ," "சிவமயமோ," "ஸ்ரீராமஜெயமோ" இல்லாத ஏடுகள் இருந்ததில்லை. உட்காரும்போதும், எழுந்திருக்கும்போதும், தும்மும்போதும், 'ராமா', 'கோவிந்தா', 'நாராயணா', 'சம்போ சிவா', 'அப்பனே முருகா' என்பனவற்றுள் ஏதேனும் ஒருசொல் பெருமூச்சாக வெளிப்பட்ட வண்ணமிருக்கும். "எதை மறந்தாலும் மறப்பேன் 'நமச்சிவாய'த்தை மட்டும் நான் மறவேன்" என்று சொல்லும் நாடு இது. மனிதனின் உடல், உயிர், சிந்தை, செயல் அனைத்திலும் கடவுள் கலந்து நிற்கிறார் இந்நாட்டில். இதனைத் தமக்கொரு தனிச்சிறப்பு எனக் கருதியவர், இந்நாட்டார். இங்ஙனம் ஆண்டவனுக்கு முதலிடமும், அறிவுக்கு இரண்டாமிடமும் கொடுத்த காரணத்தால்தான், இந்நாட்டில் விஞ்ஞானம் வளர இடமில்லாமற் போயிற்று. விஞ்ஞானம் வளரமுடியாத காரணத்தால் அஞ்ஞானம் வளரவும், அவல வாழ்வுக்கு வழிகோலவுமான நிலைமையும் ஏற்பட்டது.

எனவே, இப்பொழுது நம்முள் உள்ள பிரச்னை கடவுள் உண்டா? இல்லையா? என்பதல்ல. கடவுள் இருந்தால்தான் என்ன? இல்லாவிட்டால்தான் என்ன? நாம் செய்ய வேண்டியவை யாவை? மனிதனுடைய கடமை என்ன? எதை எப்படிச் செய்தால் நாமும் நாடும் நல்வாழ்வு வாழமுடியும் என்பனபோன்ற விஷயங்களில் கருத்தைச் செலுத்துவதே யாகும்.

அனைத்தும் வல்லவன் ஆண்டவன், ஆகவே அவன் மீதே பழியைப் போட்டுவிட்டு வாளாயிருப்பதோ, 'கடவுள்' என்ற ஒன்று இல்லை. ஆகவே நாம் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என வாழலாம் என நினைப்பதோ சரியல்ல. அங்ஙனமே, கடவுள் நம்பிக்கை கொண்டோர், தாமே கடவுளைக் காப்பாற்றத் தோன்றியவர்கள் எனவும் கடவுட் கொள்கைக்கு மாறுபட்டக் கொள்கையுடையோரைத் தமக்குப் பரம்பரைப் பகைவர்களெனவும்கருதிக்கொண்டு, அவரோடு ஓயாது போரிடுகின்றனர். இதுபோலவே வேறு சிலர் கடவுளைத் தமக்கு ஒரு எதிரி எனக் கருதிக்கொண்டு கடவுள் பக்தர்களோடு வீண் வம்புகளுக்குச் செல்கின்றனர். பொதுவாக நோக்குமிடத்து, இவ்விரு சாராருடைய போக்கும் வெறுக்கத் தக்கதே. இவ்விரு சாராரின் போராட்ட மனப்பான்மைகளும் மூட நம்பிக்கையின் பாற்பட்டதேயாகும். இத்தகையோராலேயே உண்மைக்குத் தீங்கும், அமைதிக்குப் பங்கமும், அறிவாளிகட்குக் கெட்ட பெயரும் ஏற்படுகிறது. இவ்விரு சாராரில் முன்னவர் செயல் அறியாமையின் பாற்பட்டது; பின்னவர் செயல் பொறுப்பற்ற தன்மையின் பாற்பட்டது. இவ்விரு தன்மைகளும் நாட்டுக்குத் தீமை பயப்பனவே.

இங்ஙனம் அறியாமைக்கும் பொறுப்புணர்ச்சியற்ற தன்மைக்குமிடையே நடைபெறும் போராட்டம்தான் ஆஸ்திக-நாஸ்திக வாதமாகக் காணப்படுகிறதேயன்றி, உண்மையில் ஆஸ்திகம், நாஸ்திகம் என்ற சொற்களுக்கு அனுபவத்தில் எத்தகைய அர்த்தமுமில்லை.

கடவுளுக்கு இலக்கணம் கூறிய பண்டை அறிஞர்கள் "அறிவே கடவுள், அன்பே கடவுள்" என்றுதான் முடிவு காட்டினார்களேயன்றி வேறு எத்தகைய பொருளாகவும் சுட்டிக் காண்பித்தார்களில்லை. அங்ஙனமே கடவுட் தொண்டு என்று குறிப்பிட நேர்ந்த போதெல்லாம் மக்கட் தொண்டே கடவுட் தொண்டு என அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள்.

எனவே, நாம் எங்ஙனம் மற்றெல்லா விஷயங்களிலும் மாறுதல் காண விழைகிறோமோ அதுவுபோலவே இந்தக் கடவுட் கொள்கையிலும் மாறுதல் காண முற்பட வேண்டும். அதாவது, பண்டைப் பெரியோர்கள் வகுத்த கடவுள் இலக்கணத்தைப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபடவேண்டும். அது எப்படி?

அறிவே கடவுள் என்று நம்பினால், நாட்டில் அறிவு வளர பாடுபட வேண்டும். அன்பே கடவுள் என்று நம்பினால் உழைப்பது ஒருசாரார், உழைப்பின் பயனை அனுபவிப்பது ஒருசாரார் என்ற கொடுமையை நீக்கப் பாடுபட வேண்டும். அழகுதான் ஆண்டவன் என்று நம்பினால் எல்லாத் துறைகளிலும் மனித வாழ்வு அழகுற விளங்கச் செய்ய பாடுபடவேண்டும். இதனைச் சுருங்கச் சொல்லவேண்டுமானால் கடவுள் என்ற சொல்லை நீக்கிவிட்டு, அறிவை அறிவாகவும், அன்பை அன்பாகவும் காண்பதே நாமும், நாடும் உய்ய வழி.

---


மாட்ரன் வாச் கம்பெனி
ESTD. 1940.
1/24 பைகிராப்ட்ஸ் ரோட்.
திருவல்லிக்கேணி சென்னை-5.

எங்களிடம் எல்லாவிதமான, கை கடிகாரங்கள், அலாரம் டயம்பீஸ், சுவற்றில் மாட்டக் கூடிய கடிகாரங்கள். முதலியவைகள். குறைந்த சார்ஜில், உத்திரவாதத்துடன் குறித்த காலத்தில் ரிப்பேர் செய்து கொடுக்கப்படும்.


ஒருமுறை விஜயம் செய்யுங்கள்!

Prop: C. N. ஜெயவேல்



புத்தாண்டு பொங்கல் திருநாளில்
நண்பர்களுக்கு
எங்கள் வாழ்த்து!!

S. பழனிவேலு
No 6 V. M. தெரு, மீர்சாப் பேட்டை
சென்னை.



# அர்த்தக்கடிதம்

"சிந்தனைப்பித்தன்"

ஒரு மனிதனுக்குக் கிடைக்கின்ற நண்பர்களில் பல ரக முண்டு. எப்படிப் பட்ட மனிதர்களாக இருந்தாலும் நட்பு உண்டாவதை யாரும் தடுத்துவிட முடியாது. சிலரிடம் வெறும் வாய்ப் பேச்சோடு நட்பு நின்றுவிடும். சிலரிடம் முகத்தில் மட்டும் ஒரு சிறு புன்னகை, பேச்சு இருக்காது. சிலரிடம் கட்டிப் பிடித்து அளவலாவு மளவுக்கு இருக்கும். இன்னும் சில நண்பர்கள், அவர்கள் வாங்கித் தருகின்ற சிற்றுண்டியைச் சாப்பிட்டாலன்றி விடமாட்டார்கள். சிலர் சிற்றுண்டி வாங்கித் தந்தாலன்றி விடமாட்டார்கள், சிலர் இன்பங்களில் மட்டும் பங்கு கொள்வார்கள்! சிலர் துன்பங்களிலும் பங்கு கொள்வார்கள்! இவர்களிடமிருந்து வருகின்ற கடிதங்கள்கூட அடிக்கடி அவர்கள் விரும்புகின்ற விஷயங்களைப் பற்றித்தானிருக்கும்.

இந்த ரகங்களில் எனக்குக் கிடைத்த நண்பன் சாந்தப்பனும் ஒரு ரகத்தைச் சார்ந்தவன்தான். மனிதன் தன் வாழ்க்கையில் அனுபவிக்கும் இன்ப துன்பங்களையெல்லாம், தன்னை உள்ளன்போடு நேசிக்கின்ற ஒரு நண்பனிடம் கூறி, இன்பமாக இருந்தால் சந்தோஷப்படுவதும், துன்பமாக இருந்தால் வருத்தப்படுவது முண்டு. சாந்தப்பனுக்கு மிகவும் நெருங்கிய நண்பன் நான்தான் என்பது அவனுடைய எண்ணம். தன் குடும்பத்தில் நடக்கும் சிறு சண்டை முதல், சர்வதேச அரசியல் பேச்சுவரையில் என்னிடம் கூறினால்தான் அவனுக்கு ஆறுதல்.

சாந்தப்பனின் கஷ்டங்களைக் கேட்கும் எனக்கு, அனுதாபம் ஏற்படத்தான் செய்தது. ஆனால் என்ன செய்வது? எனக்குமட்டிலும் ஒரு இருபதனாயிரம் ரூபாய் மதிப்புள்ள சொத்து இருந்தால் என் கூடப்பிறந்த சகோதரனைப் பாவித்து, சரி பாதியாகப் பகிர்ந்து கொடுத்துவிடுவேன்! நானும் அவனைப்போல் கஷ்ட ஜீவனம் செய்யும் அன்னக் காவடியாக இருக்கும்போது என் கற்பனைத் திட்டம் வெற்றியடைய வழி ஏது? அப்படி வெற்றியடைய வழி இருக்குமானால் நான் இப்படியெல்லாம் நினைப்பேனே? என்னமோ?

சாந்தப்பனுக்கு திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு வேலை கிடைத்த பிறகு எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான். அதில் தன் கஷ்டங்கள் அத்தனையும் கொட்டியிருந்தான். அவனது கஷ்டங்களைப்பற்றி ஏற்கனவே நான் நேரில் கேட்டிருந்தாலும் இலக்கிய நயம்பட அவன் தீட்டியிருந்த கடிதத்தைப் பலமுறை படித்தேன். நாட்டில் எத்தனையோ சாந்தப்பன்களிருக்கிறார்கள். அவர்களில் என் நண்பனும் ஒருவன்.

திருச்செந்தூர்,

........................

அன்புள்ள நண்பா!

கடந்த ஆறுமாத காலமாக நான் உனக்குக் கடிதம் எழுதவில்லை; மன்னிக்கவும். காரணம் பலவித குடும்பத் தொல்லைகள் தான். என் கஷ்டங்களைப்பற்றி ராமாயணமாக எழுத விரும்பவில்லை. இதுவும் மன ஆறுதலுக்கே எழுதுகிறேன்.

என்னுடன் நீ படித்த ஐந்து ஆண்டுகளும் என் அருகிலேயே உட்கார்ந்திருந்தாய். என்னுடன் நெருங்கிப் பழகி என் சுக துக்

களில் பங்குகொள்ளும் மனப் பண்பு உடையவனாக இருப்பதற்குக் காரணம் ஐந்து ஆண்டுகளும் என் அருகிலேயே இருந்ததுதான் என்பது என் நம்பிக்கை. அது உண்மையோ, பொய்யோ? நான் அப்படித் தான் நினைக்கிறேன்.

நான் எவ்வளவு கஷ்டப் பட்டுக்கொண்டு பத்தாவது வகுப்பை எட்டிப் பிடித்தேன் என்பது உனக்கும் தெரியும். என் தந்தை P. W. D. ஆபீஸில் ஒரு பியூனாக வேலை பார்த்து வந்தார். பியூன் வேலை செய்பவரின் பிள்ளை பத்தாவது வகுப்புவரை படிப்பது மிகவும் கஷ்டந்தான். என்றாலும், என் தந்தை படாத பாடுபட்டு படிக்கவைத்தார். நானும் பியூன் வேலைக்குப் போகாமலிருக்கட்டும் என்பது அவருடைய எண்ணம். எத்தனையோ நாட்கள், நாங்கள் பட்டினி கிடந்தோம். அப்படிக் கிடந்தாலும் பாதகமில்லை என்பது என் தந்தையின் தளரா நம்பிக்கை. நான் பத்தாவது வகுப்பை முடித்துவிட்டு அடுத்த வருஷம் ஏதாவது வேலைக்குப் போய்விடுவேன். பிறகு கஷ்டமெல்லாம் பறந்து போய்விடும் என்று அவர் நம்பினார்.

அது அக்டோபர் மாதம் முடியப்போகிற சமயம். எங்கள் குடும்பத்தின் வயிற்றில் மண்ணைப் போடவேண்டும் என்றோ என்னமோ அந்தப் பாழாய்ப் போன குலை வலி என் தந்தையைப் பிடித் தாட்டியது. அது என்ன வியாதியோ? திடீரென்று வந்தது; திடீரென்று அவர் உயிரையும் கொண்டுபோய்விட்டது. "ஹார்ட் பெயிலியர்" என்று சொல்லுகிறார்களே! அதுவோ, என்னமோ?

வாழ்நாள் முழுவதும் என் தந்தை மாதா மாதம் வாங்கிய சம்பளத்தைக் கொண்டே வாழ்ந்துவந்த நாங்கள், அலைகடல் நடுவே அகப்பட்டது போலாகிவிட்டோம். என் தந்தை இறந்த அடுத்த வாரமே சாப்பாட்டுக்கு வழியின்றி சங்கடப்பட்டுக்கொண்டிருக்கும்போது என் பள்ளிப் படிப்பு மட்டிலும் தடங்கலின்றி தொடரும் என்று நம்புவதற்கு வழி ஏது? 1943-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதத்தோடு என் படிப்புக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டேன். உணவின்றி தவித்துக் கொண்டிருந்த என் தாய், தங்கை, தம்பி ஆகிய மூவரையும் வாழ வைக்கும் பொறுப்பு என் தலையில்தான் விழுந்தது. அந்தச் சமயத்தில், அரைகுறையாகப் படித்த எனக்கு என்ன வேலை கிடைக்கும்? பட்டாளத்துக்கு அப்போது ஆள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். உணவு உடை, எல்லாம் கொடுத்து மாதம் நாற்பது ரூபாய் சம்பளம்! நான் சேர்ந்துவிட்டேன்.

பட்டாளத்தில் எனது சேவை நான்கு ஆண்டுகளுக்குத்தான் தேவையாக இருந்தது. சண்டை முடிந்தவுடன் எல்லோரையும்போல என்னையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். அந்த நான்கு ஆண்டுகளும் என் செலவுக்குப் போக மீதிப் பணத்தை என் தாயாருக்கு அனுப்பிவந்தேன். நான் அனுப்பிய பணத்தில் ஒரு காசுகூட மிச்சம் வைக்கவில்லை. நான் ஏன் என்று கேட்கவுமில்லை. ஒருவேளை அதுவே போதாமலிருந்ததோ என்னமோ? என்னிடம் என் தாய் சொல்லவுமில்லை.

பட்டாளத்திலிருந்து வந்து ஒரு ஆண்டு வரையில் எனக்கு வேலையே கிடைக்கவில்லை. அரைகுறையாகப் படித்த எனக்கு அவ்வளவு சீக்கிரம் வேலை கிடைக்கிறதாவது? நான் பட்ட கஷ்டத்தைப் பரமன்தான் பார்க்க வேண்டும்! நாயாக ஒரு ஆண்டு ஓடித்திரிந்த பிறகு எனக்கு இந்த பில் கலெக்டர் வேலை கிடைத்தது. இந்த வேலை கிடைத்தும் ஒன்றுதான், கிடைக்காதிருந்தும் ஒன்றுதான். ஏனென்றால், பழைய கஷ்டங்கள் விட்டபாடில்லை.

உலகத்தில் சிலர்தான் வாழப் பிறந்திருக்கிறார்கள். நான் வாழ்வது வாழ்வா? இதற்கு வாழ்வு என்று எந்த முட்டாளும் பெயர் வைக்கமாட்டான்! உன்னிடத்தில் நான் எதையும் மறைத்துப் பேச விரும்பவில்லை.

கிடைக்கிற உணவே அரை வயிற்றுக்கு; கையிலும் காசிருப்பதில்லை. பாழும் வயிறு கேட்கிறதா? அதற்குக் கஷ்டத்தை அறியும் சக்தி ஏது? என் தங்கைக்கும் தம்பிக்கும் சமாதானம் சொல்ல எனக்குத் தெரியும். ஆனால் அவர்கள் தங்கள் வயிற்றுக்குச் சமாதானம் சொல்லமுடியாதே!

"அம்மா! வயிறு பசிக்குது! சோறில்லாமல் இன்னிக்கு பள்ளிக்கூடம் போகமாட்டேன்" என்று கொஞ்சி யழுதுகொண்டு என் தாயாரைத் துன்புறுத்தும் அறியாச் சிறுவன் என் அருமைத் தம்பிக்கு என்ன சொல்லுவது?

பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடன் அனுதினமும் "அண்ணா! எனக்குப் பலூன் வாங்கிக்கொடு! புதுச்சட்டை எடுத்துக்கொடு!

பந்து வாங்கிக்கொடு! எல்லாப் பையன்களும் பந்து வைத்துக்கொண்டும், பலூன் வைத்துக் கொண்டும் விளையாடுகிறார்கள். எனக்கு மட்டிலுமில்லே!' என்று சொல்லி அழுகிறான். "நாளைக்குச் சம்பளம் வந்ததும் வாங்கித் தருகிறேண்டா! அதுவரையில் என்னை ஒன்றும் கேட்கக்கூடாது" என்று ஏதாவது சொல்லி ஏமாற்ற வேண்டியிருக்கிறது. "அண்ணு! நாளைக்குச் சம்பளம் வந்ததும் வாங்கித் தருகிறேன்னு சொன்னியே! நாலு நாள் ஆகிப்போச்சு! இன்னுமா சம்பளம் வரவில்லே?" என்று கேட்கிறான். இன்னும் எத்தனை நாளைக்கு சாக்குப் போக்குச் சொல்லி அவனை ஏமாற்றுவது? அல்லது சிறுவனை அடித்து மிரட்டி விடுவதால் அவன் ஆவல் அடங்கிப் போய்விடும் என்று நம்ப முடியுமா?

என் தங்கை பருவமடைந்தவள். பருவமடைந்த ஒரு பெண்ணுக்கு ஓர் அளவாவது ஒழுங்காக உடை வேண்டுமல்லவா? பாவாடை கட்டிக்கொண்டு வெளியே திரிய முடியுமா? அவள் மாதிரி இருக்கும் பெண்கள் எல்லாம் கண்ணுக்கும் கருத்துக்கும் கவர்ச்சியூட்டும் வகையில் அழகாக உடையணிந்துகொண்டு, சினிமாவுக்கும் திருவிழாவுக்கும் போவதைப் பார்த்து ஏங்கி, ஏங்கி ஏக்கம் தோய்ந்த உருவமாக மாறிவிட்டாள். இயற்கையாகவே பெண்களுக்கு உணவைவிட ஆடையிலும் அணியிலும் அதிகப் பிரியம். என் தங்கை மட்டும் அந்த இயற்கைக் குணத்திலிருந்து விதிவிலக்காக இருக்கமுடியுமா?

"பதினைந்து வயதுக்குமரி இப்படியா இருப்பது? தளதளவென்று இருக்கவேண்டாமா? கிழவி மாதிரி இருக்கிறாளே! ஏதாவது நோயா? நொடியா?" என்று பார்க்கும் பக்கத்து வீட்டுப் பெண்கள் கேட்கிறார்கள். அவர்கள் அப்படிப் பேசுவதை நான் எப்படி கேட்டு சகித்துக்கொண்டிருப்பது?

நேரிலே பேசிக்கொள்ள முடியாத விஷயத்தைக் கடிதத்தில் ஓர் அளவு சமாளித்துக் கொண்டு எழுதிவிடலாம். கண்ணை மூடிக் கொண்டாவது தபாலில் போட்டுவிடலாம் என்று நினைத்து எழுத ஆரம்பித்தால் இதையெல்லாமா நண்பனுக்கு எழுதும் கடிதத்தில் எழுதுவது? என்ற மனப்போராட்டம் எழுகிறது. முடிவில் எழுதுவதென்றே துணிந்து விட்டேன்.

வீட்டில் நான் எப்படி யிருந்துகொண்டாலும் வெளியில் போகும்போது ஒரு வேஷ்டியும் சட்டையு மில்லாமல் தலை காட்டுவது எப்படி? பசியோடு வெளியில் திரியலாம். ஆனால் மானத்தைக் காத்துக்கொள்ளத் துணியில்லாமல் எப்படி?

ஒரு மாதத்தில் ஒருவருக்காவது சட்டையோ, துணியோ ஏதாவது வாங்கியாக வேண்டியிருக்கிறது. நான்கு பேர்களுக்கும் ஒரே மாதத்தில புதுத் துணி வாங்கமுடியாதே!

"அண்ணு! இந்த மாதம் நான்கு நாட்கள் பட்டினியாவது கிடக்கிறேன்; ஒருபுடவை எப்படியாவது வாங்கிவா!" என்று அன்று என் தங்கை அழாக் குறையாகக் கேட்டாள். அவள் பேசிய தொனியைக் கேட்ட நான் அவளது முகத்தைப் பார்த்தேன். நான் என்ன சொல்லுவேனோ என்று நினைத்தாளோ என்னமோ? அச்சமும் அழுகையும் அவள் வதனத்தில் தேங்கி நின்றன. என்னை யறியாமலேயே நான் இரண்டு சொட்டுக் கண்ணீரை விட்டுவிட்டேன்.

எப்படியாவது வாங்கி வருகிறேன் என்று சொல்லிவிட்டேன் அன்று. அது எப்படி வாங்குவது என்ற ஆராய்ச்சியி லிறங்கிவிட்டேன். அந்த ஆராய்ச்சியின் பலனைத் திடீரென்று எனக்கு ஒரு யுக்தி தோன்றியது. நான் பட்டாளத்திலிருந்து பணம் அனுப்பிய போது, எப்படியோ என் அம்மா இரண்டு மூக்குத்திகள் செய்து போட்டிருந்தாள் என் தங்கைக்கு. அந்த மூக்குத்தியின் கற்களுக்குள் எண்ணெய் இறங்கியிருந்தது. அதைத் தட்டானிடம் கொடுத்து சுத்தம் செய்து வரும்படி என் தங்கை என்னிடம் கொடுத்திருந்தாள். கையில் பணமில்லாததால் சுத்தம் செய்யக் கொடுக்கவில்லை. ஒரு காகிதத்தில் பொட்டலம் கட்டி பெட்டியடியில் போட்டிருந்தேன். அந்த ஞாபகம் வந்தது! பிறகு என்ன?

தட்டான் கடைக்கு எடுத்துச் சென்றேன், சுத்தம் செய்து கொண்டுவரத்தான்! என் கையிலிருந்தே சுத்தம் செய்துவிட்டேன். எத்தனை ரூபாயுக்குச் செய்ததோ? பத்து ரூபாயுக்குப் போயிற்று. என் தங்கையின் ஆவல் பூர்த்தி ஆயிற்று. ஒரு புடவையும் இரண்டு ரவிக்கைகளும் வாங்கிவந்து கொடுத்தேன். நான்கு நாட்கள் என்ன? எட்டு

நாட்களுக்கு வேண்டுமானாலும் பட்டினி யிருக்கத் தயாராகிவிட்டாள்.

ஆனால்......!

புதுப் புடவையைக் கட்டிக்கொண்டு, புது ரவிக்கையை மாட்டிக்கொண்டு, "மூக்குத்தி எங்கே அண்ணா?" என்று கேட்டுவிட்டால் என்ன செய்யட்டும்.

ஏழையாக இருந்துவிடுவதாலேயே ஆடையிலோ, அணியிலோ ஆசையில்லாது இருந்து கொள்ளவேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியுமா? ஆசை என்பது எல்லோருக்கும் தான் இருக்கிறது. ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள புடவை கட்டிக்கொள்ள வேண்டுமென்ற ஆசையல்ல; ஐந்து ரூபாய் மதிப்புள்ள புடவையாவது, கிழிசலில்லாது கட்டிக்கொள்ள வேண்டுமென்ற ஆசைதான். அந்த ஆசையில் என்ன தவறு?

'நான்தான் இப்படிக் கஷ்டப்படுகிறேனா?' என்று பார்த்தேன். எனக்குத் தெரிந்த சிலரும் அப்படித்தானிருக்கிறார்கள். கலியாணம் செய்துகொண்ட சில என் வாலிப நண்பர்கள், கலியாணம் செய்துகொண்டதைப் பற்றி வருத்தப்படுகிறார்கள். தங்கள் மனைவிகளைப் பற்றி அவர்கள் புகார் கூறுகிறார்கள். படிக்காத மனைவிகளைக் கட்டிக்கொண்டதுதான் தங்கள் கஷ்டங்களுக்குக் காரணம் என்று சொல்லுகிறார்கள். படித்த மனைவிகளைக் கட்டிக்கொண்டால் கஷ்டம் ஒன்றும் இருக்காது போலும்!

சற்குணம்! இவைகளையெல்லாம் பார்க்கும்போது மனித வாழ்வு பயங்கரமானதாக எனக்குத் தோன்றுகிறது.

மனிதனுக்கு உண்ண உணவும், உடுக்க உடையுந்தான் முக்கியமான தேவைகள் என்று எல்லோரும் பேசுகிறார்கள். வானமே கூரையாகவும், பூமியே பாயாகவும் நினைத்துக்கொண்டு விடலாமாம்! எங்குமே படுத்துத் தூங்கிவிடலாமாம்! சிலர் சொல்லுகிறார்கள். அப்படியானால் நாங்கள் குடியிருக்கும் ஒரு சிறு வீட்டுக்கு எட்டு ரூபாய் கொடுக்கிறேனே? அது வீண் செலவுதானா? எந்தச் செலவை வேண்டுமானாலும் குறைத்துக் கொண்டுவிடலாம். ஆனால் இந்த வீட்டு வாடகைச் செலவை மட்டும் குறைக்க முடியவில்லை. இந்த மாதத்தில் நான்கு நாட்கள் நாங்கள் வெறும் கஞ்சியோடு கழித்துவிட்டோம். அதனால் நான்கு நாட்கள் வாடகையை குறைத்துக்கொண்டுவிடு என்று வீட்டுக்காரனைக் கேட்டால், ஏற்றுக்கொள்கிறானா?

எல்லையற்ற துன்பங்களுக்கு ஆளாகி, வாழ்க்கையில் வெறுப்புற்று, தற்கொலை செய்துகொண்டவர்களை, "முட்டாள்கள்" என்று எத்தனையோ தடவை உன்னிடம் சொல்லியிருக்கிறேன். ஆனால் நானே அந்த முட்டாள்தனமான காரியத்தைச் செய்ய துணிவு கொண்டுவிட்டேன் என்றால், நீ நம்பமாட்டாய்!

அத்துணிவான காரியத்தை நான் செய்து விட்டால், தொடர்ந்து வருவது, 'வகையற்றவன்' என்ற பழிச்சொல். வாழ்விழந்தவர்களை வாழ்விக்கவேண்டும். அதைச் செய்யாவிட்டால் அவனது காரியங்களில் குறை கண்டு பிடித்து அவன்மேல் குற்றம் சாட்ட யாருக்குத்தான் உரிமை யிருக்கிறது!

பின், வக்கற்றவன் என்று பட்டம் கொடுக்கிறார்களே! அது ஏன்?

ஆம்! அதுவும் உண்மைதான்! சிறிது சிந்தித்தால் விளங்குகிறது.

நான் தற்கொலை செய்துகொண்டு விடுவேனானால் என்னையே நம்பி வாழ விருக்கும் மூன்று ஜீவன்களின் கதி என்ன ஆவது?

"என் அருமை மகன் படித்திருக்கிறான்; பெரியவனாகிவிட்டான்; சம்பாதிப்பான். இப்பொழுது கஷ்ட மிருந்தாலும், சீக்கிரம் கஷ்டம் தீரும்" என்று மனக்கோட்டை கட்டியிருக்கும் என் தாயாரின் மனதை நோக வைத்து விடுவதா?

எப்பொழுது பார்த்தாலும் சேஷ்டைகள் செய்துகொண்டு, வாழ்வில் சந்தோஷமில்லை என்றாலும், குறும்புப் பேச்சுப் பேசி எல்லோரையும் சிரிக்கவைத்துக் கொண்டிருக்கும் என் அருமைத் தம்பியின் எதிர்கால வாழ்வு என்ன ஆவது?

இருக்கவேண்டிய இடத்திலிருந்தால் அழகுத் தெய்வமாக பூஜிக்கப்பட வேண்டியவள், ஏழ்மைச் சூறாவளியால் தாக்குண்டு ஏங்கிக் கிடக்கிறாள். அந்தஸ்துக்கு ஏற்றாற்போல் தான் அழகும் சோபிக்கும்.

என் தங்கையின் எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கும் பொறுப்பை என்னிடம் விட்டு வைத்திருக்கும்போது, நான் தற்கொலை செய்துக்கொண்டால் அவள் கதி என்ன ஆவது?

ஆக, வாழ்வே எனக்கு சித்திரவதை போலிருக்கிறது. இந்த நிலையில் நான் எத்தனை காலத்துக்கு வாழவேண்டுமோ! தெரியவில்லை.

உன் அன்புள்ள,
நண்பன்,
சாந்தப்பன்.

# தமிழர் தளபதி

C. D. T. அரசு, சென்னை.

அரச அவை :

[மன்னர் மன்னன்' அமைச்சர், மற்றும்பல பெரியோர்கள் வீற்றிருக்கிறார்கள். அரசசபை ஆரம்பமாகிறது நடனத்தை முடித்து போகிறார்கள். தளபதி சிறிது தாமதித்து வருகிறான்]

மன்னா மன்னன்: அமைச்சரே? ஏன் முக வாட்டத்துடனும் பரபரப்புடனும் காணப்படுகிறீர்? தங்களுக்கு உடல் நலம் குன்றியிருக்கிறதா ?

அமைச்சர். அரசே! தங்களுடைய அன்புக்கு என்னுடைய வணக்கமும், நன்றியும் உறித்தாகுக. உடல் நலமே ஆனால்............

மன்: ஆனால் என்ன ? மனநிம்மதி இல்லையா ? உங்களுடைய அருமை மகளுக்கு மணமாகவில்லையே என்ற சங்கடமா ?

அமை: அருமை மகள்! எருமை மகள் என்று சொல்லுங்கள். அவள் பிறவாமலிருந்திருந்தாலே நலமாயிருந்திருக்கும். ஊம்! அவள்மேல் குறறமில்லை. அவளுக்கு மருந்து வைத்து அவளைச் சரிபடுத்திவிட்டான் சண்டாளன்! சதிசெய்தான் துரோகி!

மன்: அமைச்சரே! பொருமை இழந்து பேசுகிறீர்! உங்களுடைய வெறுப்பு, இது அரச அவை என்பதையும் மறந்து பேசச்செய்கிறது போலும், இருந்தாலும், உமது வயதின் காரணத்தாலும், உழைப்பின் காரணத்தாலும் உம்மை நாம் மன்னித்தோம். என்ன நேர்ந்தது உமது மகளுக்கு?—நமக்கு ஒன்றும் விளங்கவில்லை. யார் சதி செய்தார்கள்? யார்? அந்தச் சண்டாளன் விளக்கமாகவும் விபரமாகவும் சொல்லுங்கள.

அமை: மன்னர் மன்னனே! மன்னிக்க வேண்டும். மனக்கஷ்டத்தினால் என்னையும் மறந்து பதறிப் பேசிவிட்டேன். மன்னிப்பு வேண்டுகிறேன். குற்றத்தை பொருத்தருள வேண்டும் (வணங்குகிறான்).

மன்: ஏற்கனவே மன்னித்து விட்டோம்! நடந்ததைச் சொல்லுங்கள்.

அமை: மன்னர் மன்னரே! என் பெண்ணுக்கு ஏதோ வசிய மருந்து கொடுத்து, அவளுடைய கருத்தைக் கெடுத்து, தன் மனைவியாக்கிக் கொண்டான்! நம்முடைய தளபதி. என்னுடைய மகள் பல அரசகுமாரர்களை வேண்டாம் என்று மறுத்து விட்டாள். தனக்கு வயதாகவில்லை, விவாவகம் வேண்டாம் என்று பன்முறை மறுத்துப் பேசினாள். எவ்வளவு சொல்லியும் என்ன செய்தும் ஒரே பிடிவாதமாக இருந்தாள். ஆனால் தளபதிக்கு மட்டும் தலை வணங்கினாள் என்றால், இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கவேண்டும்.

சூழ்ச்சி என்ன! சூழ்ச்சி சதி செய்து என் குடும்பத்தையே குட்டிசுவராக்கி விட்டான். அவளுக்கு வசியமருந்துக் கொடுத்துசரிபடுத்தி விட்டான். எனக்கு விருப்பமில்லை, தளபதிக்கு என் மகளைக் கொடுப்பதற்கு. அவளுக்கு தகுதியில்லாதவன் மேலும் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்தவன்.

மன்: இதில் என்ன தவறு அமைச்சரே! உன் மகளுக்குத் தளபதியைப் பிடித்தது. தனக்குற்ற வாழ்க்கை துணைவனாக ஏற்றுக் கொண்டாள், அது தானே நமது நாட்டின் வழக்கம் தளபதி

தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவன் தான். அதனால் தகுதியற்ற வணங்கிவிடுவானா? தளபதியின் தகுதியையும், திறமையையும், நான் சொல்லியா நீங்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும்? தளபதி எப்படி குற்றவாளியாவார்?

அமை: ஆம்! தளபதி குற்றவாளி தான்! சதி செய்தக் குற்றத்தை அவர் மீது சாற்றுகின்றேன். என் மகள் வயதில் சிறியவள். நல்லது கெட்டது தெரிந்துக்கொள்ளக் கூடிய வயது வரவில்லை. எனக்குத் தெரியாமல் அவளை, சந்தித்து எனக்கு விரோதமாக இந்த திருமணத்தை முடிப்பதற்குச், சதி செய்த குற்றத்தின் கீழ் அவர் மீது குற்றத்தைச் சாற்றுகிறேன். மேலும் அச்சிறுமிக்கு வசியமருந்து கொடுத்தது இரண்டாவது குற்றம். ஆகவே அவர் குற்றவாளிதான். அரசே! தளபதி குற்றவாளி என்று அரச அவையில் முறையிடுகிறேன், ஆவன செய்வது அரசனது அலுவல்!

மன்: (சிரித்து) அமைச்சரே உமக்காக வருந்துகிறேன். அவையிலேயே விசாரிப்போம். தளபதி எங்கே? (தளபதி வருகிறான். கத்தியுடன் வணக்கம் செலுத்துகிறான்) தளபதியே! நீர் ஓர் குற்றவாளி! உம்மீது நம் அமைச்சர் குற்றம் சாட்டியிருக்கிறார். அதற்கு பதில் சொல்லுங்கள்.

தளபதி: மன்னர் மன்னனே! வணக்கம்! நான் செய்த குற்றமென்ன?

மன்: அமைச்சருடைய மகள் மனோன்மணியை, அமைச்சர் இல்லாத போது சந்தித்து சதி செய்தது முதல் குற்றம்; அவளுக்கு வசிய மருந்துக் கொடுத்து தாங்கள் வாழ்க்கைத் துணைவியாகச் செய்துக் கொண்டது இரண்டாவது குற்றம் நீங்கள் இதற்குப் பதில் பகர வேண்டும்.

தளபதி: அரசே! அமைச்சரே! அன்புள்ள பெரியோர்களே! என் மீது இரு குற்றங்கள்! அதற்குப் பதில் அளிக்கும்படி அரசர் ஆணையிட்டிருக்கிறார். அரசே! நான் குற்றவாளி — குற்றவாளிதான். உண்மையை மறுக்கவில்லை. ஆனால் நான் இரண்டு குற்றங்கள் செய்யவில்லை. ஒரே குற்றம்தான் செய்தேன். மனோன்மணியை மனைவியாக்கிக் கொண்டதுதான் நான் செய்த குற்றம்! ஆனால் மருந்துக் கொடுக்கவில்லை; சதி செய்யவுமில்லை. சான்றுகள் சொல்வதற்கு யாருமில்லை மனோன்மணியைத் தவிர்த்து.

அமை: என்ன துணிவு அரசே!

மன்: அமைச்சரே! அமைதியாக இருங்கள். தளபதி! தாங்கள் செய்தது குற்ற மென்று ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

தளபதி: அரசே! மன்னிக்க வேண்டும். அமைச்சர் குற்ற மென்று கூ கிறார். அவருடைய மொழியில் குற் மென்று சொன்னேனே தவி குன்றின் மீது நின்றும் குற்றமில் என்று எடுத்துரைப்பேன் அரசே நான் என் கதையைக் கூற அனு மதி தரவேண்டும்.

மன்: தாராளமாகச் சொல்லலாம். விசா ரணை என்பது மட்டும் நினைவிருக் கட்டும்.

தளபதி: வணக்கம்! என் கதையை கேட்டுத் தீர்ப்புக் கூறுவது அர ருடைய கடமை அதை எப்போதும் ஏற்பேன்.

மன்: ஆகட்டும்! சொல்லும் உம் கதையை

தளபதி: அமைச்சர் அடிக்கடி அவ ருடைய வீட்டிற்கு என்னை விரு துக்கழைப்பார்கள். என்னுடைய பிறப்பு - வளர்ப்பு கதைகளை சொல்லச்சொல்லுவார்கள்——சொல் லுவேன். அவரும், மறைவிலிருந்து அவர் மகள் மனோன்மணியும் கேட்பார்கள். என்னுடைய வீரச் செயல்களை விவரித்துச் சொல்லச் சொல்லுவார்கள். கலிங்கப் போரின் நிகழ்ச்சிகளை கேட்பார்கள். என் கையிலிருக்கும் தழும்பின் விபரத்தை கூறுங்கள்

என்பார்கள். விபரம் கூறுவேன், வியந்து சிரிப்பார்கள். மறைவிலிருக்கும் மங்கையின் புன்முறுவல் பளிச்சென்று என்முன் மின்னும். இதைப்போல் பல நாட்கள் நடந்தன. ஒரு நாள் வேங்கையைப் பார்த்ததுண்டா? என்று வேடிக்கையாக கேட்டார்கள். வேங்கையை பார்த்தது மட்டுமல்ல, வேங்கையுடனும், வேழத்துடனும் சண்டைப் போட்டு அவைகளை கொன்றதைச் சொன்னபோது, உள்ளே இருந்த சொர்ணகுடத்தின்முல்லைச் சிறிப்பின் ஒலியைக் கேட்டேன் ஆனால் அமைச்சர் இதைக் கவனிக்கவில்லை. கடைசியாக, போரை நடத்திய வரலாற்றைக் கேட்டு, தன் நாட்டின் தளபதியின் திறனைக் கண்டு சொக்கிப் போனாள்.

அமை: (வெறுப்புடன்) இவையெல்லாம் கேட்க மிக்க வேதனையாக இருக்கிறது. அரசே! சீக்கிரம் முடிக்கச் சொல்லுங்கள்.

மன்: அமைச்சரே! தளபதி இப்போது குற்றவாளியாக பதில் சொல்லுகிறார். குற்றவாளிகளுக்கு சகல உரிமைகளும் உண்டு. அவர்கள் குற்றவாளிகள் அல்லவென்று ருசுப்பிப்பதற்கு, நாளைக்கு என்னையே சான்றுச் சொல்லக் கூப்பிட்டாலும் நான் சொல்லித்தான் ஆக வேண்டும். அதுதான் நாட்டின் சட்டம். நியதியுங்கூட. தளபதியே வேண்டியதெல்லாம் சொல்லுங்கள்.

தளபதி: அரசே! வணக்கம். அமைச்சருக்கு வேதனைக் கொடுக்க நானும் விரும்பவில்லை. ஆனால் கடைசியாக நாங்கள் எப்படி சந்தித்தோம் என்பதை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன்.

அரசே! அமைச்சரே! அன்புள்ள பெரியோர்களே!! இந்தக் கட்டத்தைச் சிறிது கூர்ந்து கேட்க வேண்டுகிறேன்.

ஒருநாள் இதோ இருக்கும் (வடுவை காட்டுகிறான்) வடுவைக் காட்டி, இதன் கதை என்ன என்று கேட்டார்.

ஆம்! மற்ற எல்லா வடுவுகளைக் காட்டிலும் இந்த வடுவில்தான் நான் மிகப் பெருமை கொள்ளுகிறேன் என்றேன். "ஏன்?" என்றார். கட்டிலிலே, தொட்டிலிலே, தோட்டத்திலே, அன்னையின் அன்பிலே, தந்தையின் தயவிலே, அண்ணனது அதட்டலிலே, குழந்தையின் மழலைச் சொல்லிலே, வள்ளுவன் குறளிலே தவழும் என் தாய்மொழி, இனிய தமிழை, இகழ்ந்துப் பேசிய அந்நியனுடைய நாவை அறுக்க ஓடுகையிலே, அவன் வீசிய வேலால் ஏற்பட்ட வடுவு இது. ஆனால் அவனது தலையை வீழ்த்தி விட்டேன் என்றேன். இதைக்கேட்டிருந்த அந்த தமிழரசி, என் வடிவழகி "வா" என்று தனது வலது கரத்தால் செய்கைகாட்டினாள். அமைச்சருடன் விடைப் பெற்றுத் தோட்டத்திற்குச் சென்றேன். "வீரனுக்குபரிசாக அளிக்கிறேன். இந்தபாவையை" என்று என் மீது சாய்ந்தாள், அந்தக் கொடியாள். தோட்டத்தில் மணம் வீசியது. வாழ்க்கை துணைவர்களாக ஆனோம், இது குற்றமா? அரசே! அமைச்சரே! தீர்ப்பு கூறுங்கள்!

மன்: தளபதி! மன்னன் மகளானாலும் வீரனாகிய உன்னை மணக்க தயங்குவாளா? மடமை அல்லவோ தயங்கும். நீ குற்றவாளி அல்ல. உன்னை நான் மன்னிக்க வேண்டிய அவசியமே இல்லை, மனமாற வாழ்த்துகிறேன். இன்று முதல் நீங்கள் இந்நாட்டு தளபதி மட்டுமல்ல நீர் தமிழர் தளபதி! வாழ்க. பல்லாண்டு!

(காட்சி முடிகிறது.

பொங்கல் புது நாளில் எமது
அன்பர்களுக்கும, வாடிக்கைக்காரர்
களுக்கும் எங்கள் வாழ்த்து;

T. A. வெங்கடாசலம்
லேடிஸ், ஜெண்ஸ் டைலர்
64, ஐஸ் அவுஸ் ரோட், சென்னை 14.

தென்றலின் சுவை மிகுந்த நூல்கள்

படித்தீர்களா?

## திருக்குறள் இசைப் பாடல்கள்

(அறத்துப்பால்)

ஆசிரியர் :

பாவலர். தொ. ப. வேலாயுதசாமி.

பத்திரிகை கலையில், அறிஞர்களால், இசைக் கலைஞர்களால் பாராட்டப் பெற்ற அருமைப் பாடல்கள். தமிழ் இசையிலே புது நெறி காட்டும் அமுத கீதங்கள்.

விலை அணா 7

---

## மின்னொளி.

(சீர்திருத்த நாடகம்)

ஆசிரியர் : ப. கண்ணன்.

வானொலி நிலையத்தில் நடைபெற்ற கிராமிய வாழ்க்கைச் சித்திரம், பகுத்தறிவுப் பணிபுரிந்த பள்ளி ஆசிரியர் செல்லத்துரை, அவருக்கு ஆதரவு காட்டிய அரிவை மின்னொளி, இவர்களின் துயரக்கதை. விலை அணா. 6

தனிப்பிரதி வேண்டுவோர் விலைக்கு தபால் பில்லை அனுப்புக. வியாபாரிகளுக்குக். கழிவு 25% எல்லா ஹிக்கின் பாதம்ஸ், சுதேசமித்திரன் புத்தக ஸ்டால்களிலும் கிடைக்கும்.

## தென்றல் நூற்பதிப்புக் கழகம்

சலகண்டபுரம், சேலம் மாவட்டம்.



## அறிஞர் அண்ணாவின்

ரேடியோ சொற்பொழிவுகள்

1. மேடைப் பேச்சு
2. ஸ்தாபன ஐக்கியம்
3. வீட்டுக்கோர் புத்தகசாலை
4. என்னைக் கவர்ந்த புத்தகங்கள்
5. மஹாத்மா காந்தி
6 விதிக்கு அடிமைத்தனம்
7. சமதர்மம்
8. தீண்டாமை
9. வாலிபர் தேவை
10. பத்திரிகைத் தொழில் சொந்தத் தொழிலா? பொதுச்சேவையா ?
11. என் கடன் களிப்பூட்டுதலே கலைவாணர் N. S K.

ஒவ்வொரு புத்தகமும் ஒன்றரையணா

12. அண்ணாவின் பொன் மொழிகள் அணா. 0 8 0
13. பண்டைத் தமிழர் கண்ட புரட்சி அணா 0 3 0

பெண்களைப்பற்றிய புதிய நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | பெண்களோடு வாழ்வது எப்படி | அணா 3 |
| 2. | பெண்களிடம் ஏன் இந்தமோகம் ? .... | ,, 3 |
| 3. | பெண்களும் வசியமும் .... | ,, 3 |
| 4. | நல்ல பெண்கள் எப்படி இருப்பார்கள் ? .... | ,, 3 |
| 5. | தமிழன் காதல் .... | ,, 3 |
| 6. | முத்த மிடுவது தவறு ? .... | ,, 3 |
| 7. | வாழ்க்கைக்குத் துணைவி வேண்டுமா ? .... | ,, 3 |
| 8. | காதல் கடிதங்கள் .... | ,, 3 |
| 9. | காதலை வளர்ப்பது எப்படி ? | ,, 3 |
| 10. | அழகான பெண்களுக்கு ஆபத்து உண்டா ? .... | ,, 3 |
| 11. | பெண்களிடம் ஆண்கள் விரும்புவது என்ன ? .... | ,, 3 |
| 12. | காதல் ஒரு மலரா ? காமம் அதன் மணமா?.... | ,, 3 |
| 13. | பெண்கள் உலகம் .... | ,, 12 |
| 14. | பெண்ணே பெரியவள் ஏன் ? | ,, 8 |
| 15. | புரட்சிப் பெண் .... | ,, 8 |

கிடைக்குமிடம் :

முத்தமிழ் நிலையம்,

77, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை-1.



# சுலோசனப் புராணம்

சூதமுனிவன்

ஒரு நாள் காலையில், மூக்குக் கண்ணாடி முகத்தில் இலங்க, தண்டும் கமண்டலமும் கரத்தில் விளங்க, அடர்ந்து நீண்ட சடை முடியானது முதுகில் புரள, புலித்தோல் உடுத்தி, பாத குறடு அணிந்து, பழஞ் சுவடிக் கட்டுகளை அக்குளில் தாங்கி, "அரஹர அரஹர" என்று சிவநாமம் செப்பும் திருவாயுடன், தவத்திற் சிறந்த சூதமா முனிவர் நைமிசாரண்யத்திற்கு எழுந் தருளினர்.

சூதமாமுனிவரின் வரவைக் கண்ட நைமி சாரண்ய வாசிகள், எழுந்து, இருகை கூப்பி, எதிர் சென்றழைத்து வந்து, தனி யாசனத்தில் எழுந்தருளச் செய்து, தூய கங்கையால் திருவடிகளை விளக்கி, மல் லிகை, முல்லை, இருவாட்சி, சண்பகம், மந்தாரை முதலிய மலர்கொண்டு அர்ச் சித்து, சுவாமி! எளியேங்களின் இருப் பிடம் தேடி தங்கள் திருவடி சிவக்க நடந்து வருவதற்கு, நாங்கள் என்ன தவஞ் செய்தோம்?

மழை காணாத பயிரைப்போலவும், தாய் முகங் காணாச் சேயைப்போலவும், வாடிக் கிடந்த எங்களுக்கு, தங்கள் வரவினல் சாபல்யம் ஏற்பட்டது என்று பலவாறு போற்றிப் புகழ்ந்து நின்றனர்.

அவ்வாறு நின்ற நைமிசாரண்யவாசி களுக்கு அஞ்சலிசெய்து, கையமர்த்தி, வீற்றிருக்கச் செய்து சூதமாமுனிவர் சொல்லத் தொடங்கினர் :

ஏ! முனிபுங்கவர்களே! நான் அரி யையும் அரனையும் தரிசிப்பதற்காக, திருப் பாற்கடலுக்கும், திருக்கைலாயத்திற்கும் சென்றிருந்தேன். அப்படிச் சென்ற காலத்தில், கைலாயத்தில் ஒரு புதுமையைக் கண்டேன். அஃது என்ன வென்றால் :—

சூரியன், சந்திரன், அக்கினி என்கிற மூன்று நேத்திரங்களையுடைய சாட்சாத் சிவபெருமானனவர், காசிபமுனிவரும், மாயாதேவியும் கொடுத்த சாபத்தினல் மூன்று கண்களும் மறையப் பெற்றவ ராகி, தன் பக்தகோடிகளுக்கு தரிசனம் தராமல் இருந்துவந்தார். அவருக்கு சாபவிமோசனம் கிடைத்து, பக்தர்களுக்கு தரிசனம் தருவதற்கு நீண்டகாலம் சென் றது. ஆதலால், சிவபெருமானைச் தரி சிக்கச் சென்ற நானும், நீண்டகாலம் கைலாயத்தில் தங்கியிருக்க நேரிட்டது. முடிவில், காசிபனும், மாயாதேவியும் சிவ பெருமானுக்குச் சாப விமோசனமாக அருளிச்செய்த 'சுலோசனம்' என்று தேவபாஷையில் (சமஸ்கிருதம்) வழங்கப் படுகிற மூக்குக் கண்ணாடி ஒன்றும் பெற் றுக்கொண்டு, உங்களைத் தரிசித்துப் போகவந்தேன் என்று சூதமாமுனிவர் திருவாய் மலர்ந்தருளினர்.

அதுகேட்ட நைமிசாரண்யவாசிகள், பெரிதும் புளகாங்கித மடைந்தவர்களாகி, சூதமாமுனிவரைப் பணிந்து, ஏ! வேதவித்தகா! தவத்தின் வடிவே! முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்கும், சாபந் தரக்கூடிய வல்லவர்கள் உலகில் இருக்கிறார்களா? காசிபமுனிவருக்கும், மாயா தேவிக்கும் சிவபெருமான் செய்த அபசாரம் என்ன? மாயாதேவி என்பவள் அசுரப் பெண்ணல்லவா? அவளுக்கு சிவனையே சபிக்கத்தக்க வல்லமையும், காரணமும் எப்படி உண்டாயிற்று? சாப விமோசனத்திற்கு மூக்குக்கண்ணாடி எதற்காக? அதனைத் தாங்களும் அணிந்திருக்கிற காரணம் என்ன? இவற்றிற்கெல்லாம் அதியோடந்தமான வரலாற்றை விளக்க வேண்டும் சுவாமி! என்று வினவலானார்கள்.

அப்போது சூதமாமுனிவர் நைமிசாரண்யவாசிகளுக்குச் சொல்லத் தொடங்கினார்.

ஏ! முனிசிரேஷ்டர்களே! முன்னொரு சமயம் நான் இங்கு வந்திருந்த போது, மகாஸ்காந்தம் என்கிற திவ்ய புராணத்தை விரித்துக் கூறினேன் அல்லவா? அந்த ஸ்காந்த புராணத்தில், ஈச சங்கிதை என்றொரு பிரிவு இருக்கிறது. அந்தச் சங்கிதையில்தான் இந்த மூக்குக் கண்ணாடிப் புராணமாகிய சுலோசனப் புராணமும், சேர்க்கப்பட வேண்டியதாகும். நான், அதனை விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்: பக்தி சிரத்தையோடு கேட்பீராக!

அதாவது, முன்னொரு காலத்தில், காசிபமுனிவருக்கும், மாயை என்கிற அசுரப் பெண்ணுக்கும் ஏற்பட்ட சம்பந்தத்தினால், சூரபதுமன், சிங்கமுகன், தாரகன், என்கிற மூன்று அசுரர்களும், அந்த அசுரர்களின் பரிவாரங்களாக எண்ணற்ற கோடி இராட்சதர்களும் பிறந்தார்கள். இவர்களில் சூரபதுமன், சிங்கமுகன், தாரகன் என்கிற மூன்று பேரும், காசிபமுனிவரிடத்தில் வேத வேள்விகளை நன்குணர்ந்து, சிவபெருமானை நோக்கித் தவமும் வேள்வியும் செய்தார்கள். கடுமையான தவவேள்வி செய்தும் சிவபெருமான் அருள் செய்யாதிருக்கவே, பன்னெடுங் காலம் அன்னாகாரமின்றி, அகோர தவஞ் செய்வதுடன், அவர்களுடைய சரீரத்திலுள்ள தசைகளையும், நிணங்களையும் அறுத்தெடுத்து வேள்வியில் ஆகுதி கொடுத்தார்கள். அப்போது சிவபெருமானுக்குத் திருவுளமிரங்கி, இடபவாகன பார்வதி சமேதராய் காட்சியளித்து, சூரபதுமன் முதலான மூவருக்கும், அரி, அரன், பிரமாக்களாலும் அழிக்க முடியாத ஆயுளும், ஆயிரத்தெட்டு அண்டத்தையும் ஒரு குடைக்கீழ் ஆளும்படியான வரப்பிரசாதமும் தந்ததுடன், வில், வாள், கதை, அத்திரம், முதலாய ஆயுதங்களையும் கொடுத்து மறைந்தார்கள்.

இவ்வாறு சிவனிடத்தில் அரிதிற் பெற்ற தபோ பலத்தினால், செருக்கடைந்த அசுரர்கள் மூவரும், சுவர்க்க, மத்திய, பாதாளம் என்கிற மூன்றையும் ஒரு குடைக்கீழ்க்கொண்டுவந்து ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆண்டு வரலானார்கள். அப்படி ஆண்டு வரும்போது, மிகவும் கர்வங் கொண்டவர்களாகி, அரிபிரமேந்திராதி தேவர்களை யெல்லாம் பிடித்துக் கொணர்ந்து, அடிமை வேலை செய்யப் பணித்தும், அடர்ந்த வனங்களில் தன்னிச்சையாகத் தவ முயற்சியிலிருக்கும் இருடிமாதவர்களை யெல்லாம், பல விதத்தில் கொடுமைப்படுத்தியும், அட்டகாசம் செய்தும் வந்தார்கள்.

இவர்களுடைய அட்டூழிய ஆணவச் செயலை அறிந்த சிவபெருமான், திருவுளமிரங்கித் தமது நெற்றிக்கண் மூலமாக ஆறு தீப்பொறிகளைத் தந்து, அத் தீப்பொறிகளினின்றும் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளைத் தோற்றுவித்து, அரி, அர, பிரமாக்களாலும் அழிக்க முடியாதெனச் செருக்குடனிருந்த அசுரர்கள் எல்லாரையும் அழித்து, தேவர்களுக்கு சிறையும் கொடுமையும் நீக்குவித்தார்.

ஏ! நைமிசாரண்யவாசிகளே! நான் இப்போது கூறிவந்தவை யெல்லாம் முன்பு, மகாஸ்காந்த புராணம் கூறிய காலையில் விளக்கிச் சொன்னவைகளேயாகும். இவைகள், இனிமேல், நான் கூறப் போகும், சுலோசனப் புராணத்திற்குப் பூர்வ வரலாறாக இருப்பதால், அதனைச் சாரச் சுருக்கமாகக் கூறினேன். இனி வரும் சுலோசனப் புராணத்தைக் கவனமாகக் கேட்பீராக! என்று சூதமாமுனிவர் மேலும் சொல்லத் தொடங்கினார்.

இவ்வாறு அவதரித்த ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளால், சூரபதுமன், சிங்கமுகன், தாரகன் என்கிற அசுரர்களும் அவ

னுடைய எண்ணற்ற கோடி அசுர பரிவாரங்களும் அழிக்கப்படவே, அதனைக் கேள்விப்பட்ட காசிபமுனிவரும், மாயாதேவியும், புத்திர வாஞ்சையால பெருமூச்செறிந்து, அழுது, புலம்பி, கடைசியாக இத்தனைச் செயலுக்கும் காரணமாக இருந்தவர் சிவபெருமான் என்று அறிந்து, அடங்காத சினங் கொண்டவராகி திருக்கைலாயத்தை நோக்கிச் சென்றனர்.

இவ்வாறு காசிபனும் மாயையும் கடுங்கோபத்துடன் கைலாயத்துக்கு வருகின்ற விவரத்தை, சிவபெருமானிடம் நந்திதேவர் தெரிவித்தார். அதுகேட்ட சிவபெருமான் அச்சத்தால் நடு நடுங்கி, செய்வதொன்றும் தோன்றாமல், நந்தியை நோக்கி. ஏ! நந்தி! "காசிபனும் மாயையும் கோபம் தீர்ந்து, சாந்தம் அடையுமவரை, அவர்களைக் கைலாயத்தின வாயிலிலேயே தடைசெய்து வைப்பாயாக!" என்று கட்டளையிட்டார். அப்படியே நந்திதேவரும் சென்று, காசிபனும் மாயையும் வருகிற வழியில் வாசற்படிமேல் குறுக்காக படுத்துக்கொண்டு, ஒன்றும் தெரியாதவரைப்போல, கண்ணை அரை குறையாக மூடிக்கொண்டு, காலையில் சாப்பிட்ட புல், பூண்டு முதலிய உணவுகளை மீண்டும் வாய்க்குக் கொணர்ந்து, அசைபோட்டுக் கொண்டிருந்தார். அப்போது, காசிபமுனிவர் பின தொடர்ந்து வர காற்றினும் கடிய வேகத்துடன் கைலாயத்தை நோக்கி வந்த மாயாதேவியானவள், வாசற்படியை அடைத்துப் படுத்துக்கொண்டிருந்த நந்திதேவரைக் கண்டாள். கண்டமாத்திரத்தில் கண்களிரண்டும் தீப் பொறிபறக்க, அடைகாத்துக் கிடக்கும் அரவம்போல் சீறி, அடா! மதிகெட்ட மாட்டுக் கடவுளே! வழியிற் படுத்துக்கொண்டு போக்கு வரத்துக்கு இடையூறு செய்யும்படி உனக்கு எந்தப் பேர்வழி கட்டளையிட்டான்? என்று இடியோசைபோலக் கர்ச்சித்துக்கொண்டே, இடது காலினல் நந்திதேவரின் பிடரியில் ஓங்கி உதைத்தாள். அந்த உதைபட்ட மாத்திரத்தில், உகாந்தகாலப் பேரிடிபோன்ற ஓசை எழுந்தது. நட்சத்திரங்கள் பொல பொலவென்று உதிர்ந்தன. தேவர்கள் திகப்பிரமை கொண்டார்கள். சந்திர சூரியர்கள் நிலை பெயர்ந்து போயினர். நந்திதேவரும், உதை தாங்க முடியாமல் மரணத்துக் கொப்பான மூர்ச்சையடைந்து, அப்பால்போய் வீழ்ந்தார். அன்று முதல் நந்திதேவர் முதுகில், மாயாதேவியின் கால்பட்ட இடத்தில், தசைகள் பிதுங்கி, சிமிழ் என்ற பெயருடன் இருந்து வருகிறது.

இப்படியாக நந்தி தேவனை உதைத்து ஒதுக்கிவிட்டு, மாயாதேவியானவள், காசிபன் தொடர்ந்துவர, கைலாயத்துக்குள் நுழைந்தாள். அப்போது, சிவபெருமானனவர், பார்வதிதேவியார் இடப்பக்கத்தில் வீற்றிருக்க, சிவகணங்கள் புடைசூழ்ந்து நிற்க, கொலுவீற்றிருந்தார். அந்த கொலுமண்டபத்தை யடைந்த மாயாதேவியானவள், ஆத்திர மிகுதியால் வியர்வை வழிந்தோட, பல்லை நற நறவென்று கடித்து, கண்கள் தக தகவென்று சிவக்க, சிவபெருமானை நோக்கிக் கூறலானாள்:

சிவபெருமானே! நீயும் ஒரு தெய்வமா? உன்னை நோக்கி என்னுடைய மக்கள் அருமையான தவம் செய்தார்களே! அவர்களுடைய இரத்தத்தையும் மாமிசத்தையும் கூட உனக்கு ஆகுதியாக வேள்வித் தீயிற் கொடுத்தார்களே! அவர்களுடைய தவத்திறகு இரங்கித்தானே, நீ வரங் கொடுத்தாய்? அப்படி நீ கொடுத்த வரத்துக்கு விரோதமாக, நீயே சுப்பிரமணியனை உண்டாக்கி அழிக்கலாமா? என பிள்ளைகள் உனக்குச்செய்த தீமை என்ன? தேவர்களுக்குக் கொடுமை செய்தார்கள் என்பதுதானே காரணம்! தேவர்களைக் கொடுமை செய்யாதவர்கள் யார் இருக்கிறார்கள்? அக்கினி பகவானை சமையல் செய்யவும், வருண பகவானை வாசற்றெளிக்கவும், வாயு பகவானை விசிறி வீசவும், உபயோகம் செய்யாதவர்கள் உலகில் உண்டா? என பிள்ளைகளும் இதனைத்தானே செய்தார்கள்! இதற்காக என் மக்களை அநியாயமாகக் கொன்று தொலைப்பதா? உன்னைக் கடவுளென்று வழிபட்டு, செய்வதற்கரிய தவங்களைச் செய்து, பெறுதற்கரிய தவங்களைப்பெற்ற என் மக்களையா, நீ வஞ்சகத்தால கொன்றொழிப்பது? நீயும் ஒரு கடவுளா? இந்தத் தேவர்களைவிட என பிள்ளைகள் எந்த விதத்தில கெட்டவர்கள்? இரவென்றும் பகலென்றும் பாராமல், சுராபானம் குடித்து மதிமயங்கி, கண்ட கண்ட பெண்களுடன் நெறி முறையின்றிக் கூடிக் கலந்து, வேத வேள்விகளில கண்ட கண்ட மாமிசங்களை நெய்யில் இட்டு தின்று, வெறிகொண்டு சோம்பித்திரியும் வீணதி

வீணர்களான இந்தத் தேவர்கள், என் மக்களைவிட எந்த விதத்தில் உன் அன்புக்குப் பாத்திரமானார்கள்? அப்படியே உனது அன்புக்குரியவர்கள் என்று வைத்துக்கொண்டாலும், அவர்களை அடிமையாக்கி வேலை வாங்கக் கூடாதென்பது எந்த நியாயத்தைச் சேர்ந்தது?

தெய்வமென்று கூறப்படும் சிவனே! "எளிய ஜீவன்களை, வலிய ஜீவன்கள் அடக்கியாளவேண்டும்" என்பதுதானே உனது படைப்பின் இயற்கை! மாடுகளை, மனிதர்கள் அடக்கியாண்டு விவசாயத்திற்கும், போக்குவரத்துக்கும் உபயோகிப்பது எதனால்? பன்றி, மான், முயல் முதலிய பிராணிகளை புலி, சிங்கங்கள் அடித்துத் தின்பது எதனால்? இதிலிருந்து எளிய ஜீவன்கள் வலிய ஜீவன்களின் உபயோகத்திற்காக விடப்பட்டிருக்கின்றன என்று நினைக்க முடியுமல்லவா? இந்த நியாயம்தானே தேவர்களுக்கும் இருக்கவேண்டும்? தேவரைவிட அசுரர்கள் வலியவர்களாயிருப்பதால் தேவரை ஏவல் வேலைக்குவைத்துக் கொள்கிறார்கள்! இதில், தவறென்ன? இவ்வளவு மதிகூட இல்லாத உன்னிடத்தில், அகில புவனங்களும் அடங்கிக் கிடந்து என்ன பயனடையப் போகின்றன? பெண்டாட்டியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, அனுசூயா என்பவளிடம் நிர்வாணமாகப் பிச்சை கேட்ட சிவனே! 'மீவாஞ்சை' என்னும் உயரிய தத்துவ நூலை எழுதியதற்காக, தாருகாவனத்து ரிஷிகளின் மீது கோபம் கொண்டு, அவர்களின் மனைவிமாருடைய கற்பைக் கெடுத்த கடவுளே? பக்தியிற் சிறந்த இயற்பகை நாயனாரிடம் மனைவியைக் கூட்டி அனுப்பக் கேட்டு, அதைக் தடுக்க வந்த சுற்றத்தார்களையும் கொன்றொழிக்கச் செய்தவரே! பார்வதிதேவியின் கலவி இன்பத்தில் பன்னெடுங்காலம் மூழ்கிக் கிடந்தால் உலக நலம் கெட்டுப் போகுமென்று சொல்ல வந்த அரிபிரமேந்திராதி தேவர்களை யெல்லாம் 'இந்திரியம்' சாப்பிடச் செய்த நீயும் 'ஒரு தெய்வமா? என்று கூறியபடி, சிவபெருமானுடைய இரண்டு செதிள்களையும் கரங்களால் பிடித்துக்கொண்டு அகில புவனங்களும் அலைந்து குலையும்படியாக ஆட்டினாள்.

இவ்வாறு சூதமுனிவர் சொல்லி வரும்போது, நைமிசாரண்யவாசிகள் இடைமறித்து, சுவாமி! சிவனுக்குச் செதிள்கள் இருந்ததாகச் சொன்னீர்களே, அது இருந்த காரணம் என்ன? என்று வினவ, சூதமா முனிவர் விளக்கத் தொடங்கினார்.

ஓ! தவசிகளே! சிவனுக்குச் செதிள்கள் இருந்ததென்று, நான் ஏன் கூறினேன் என்றால், அந்தக் காலத்தில் சிவபெருமான் உட்பட தேவர்கள், மானிடர்கள் எல்லாருக்குமே, இப்போதிருப்பதுபோல காதுகள் இருக்கவில்லை. அக்காலத்தில் எல்லாருக்குமே கோழிகளுக்கு இருப்பதுபோல, சுற்றிலும் சவ்வுகள் இணைந்த துளைக் காதாகவே இருந்தது. அந்தத் துளைக் காதைச் சூழ்ந்திருந்த சவ்வுகளைத்தான் செதிள்கள் என்று குறிப்பிட்டேன். மாயாதேவியானவள் அடங்காத கோபத்துடன் அந்தச் சவ்வுகளையும் அதனோடு சம்பந்தப்பட்ட சதைகளையும் இரண்டு கரங்களாலும் இறுகப் பற்றிக்கொண்டு, ஆட்டி இழுத்த காரணத்தினால்தான், அன்று முதல் சிவபெருமானுக்கும், தேவர்களுக்கும், மானிடர்களுக்கும், காதுகள், வெளியில் பிதுங்கிக் கொண்டிருக்கும். குருத் தெலும்புடன் கூடிய தோல்களாக விளங்குவதும், அதில், மாயாதேவியாரின் விரல்கள் பதிந்த அடையாளமாக, நெளிவும் உண்டாயிற்றென்று விளக்கிவிட்டு மேலும் சொல்கிறார்;

கேளுங்கள் முனிசிரேஷ்டர்களே! இவ்வாறாக சிவபெருமானின் காதுகளைப் பிடித்து ஆட்டிக்கொண்டே மாயாதேவியானவள் கூறுகிறாள்:

"என்னுடைய மக்களுக்கு வரங் கொடுத்து ஏமாற்றி, உன்னுடைய கண்கள் மூலமாக சுப்பிரமணியனை உண்டாக்கி அழித்துவிட்டபடியால், இன்று முதல் உன்னுடைய சோம, சூரியாக்கினி என்கிற மூன்று நேத்திரங்களும் இருண்டுபோகக் கடவது!" என்று கடுமையான சாபங் கொடுத்துவிட்டு, பார்வதிதேவியாரின் கெஞ்சுதலையும் பொருட்படுத்தாமல் தன்னிருப்பிடம் சேர்ந்தாள்.

கற்பிற் சிறந்த மாயாதேவியார், இவ்வாறு சிவனைச் சபித்தமாத்திரத்தில், சிவபெருமானுடைய திரி நேத்திரங்களும் அவிந்து இருண்டுவிட்டன. அகில புவனங்களும், சூரிய சந்திர உதயம், அஸ்தமனம் எதுவும் நடவாமல், ஒளி குறைந்து இருளத் தொடங்கின. எங்கும், அக்கினி இல்லாமற் போனதால், குளிர் அதிகமாகிவிட்டது.

உதயம், அஸ்தமனம் இல்லாமையால், காலங் கணிக்க முடியாமல் பிரமதேவன் படைப்புத் தொழிலே நிறுத்தினன். உயிர்களின் காலமுடிவு தெரியாததால், எமன் கொலேத் தொழிலே நிறுத்தினன். கர்ப்பத்திலிருந்த சிசுக்கள் பன்னெடுங்காலம் கர்ப்பத்திலேயே இருக்கலாயின. மரணத் தருவாயிலிருந்த உயிர்களெல்லாம், எமன் வாராமையால் மரண அவஸ்தையிலேயே பல கோடி காலம் இருக்கலாயின. சூடு குறைந்து, குளிர் அதிகப்பட்டதால், உயிர்க்குலங்கள் நடமாட்டமின்றி, மூலே முடுக்குகளில் உறங்கிக் கிடக்கலாயின. இப்படியாக உலகமே இயங்க முடியாமல் திகைத்து நின்றது. அரிபிரமேந்திராதி தேவர்கள் செய்யும்வகை தெரியாமல் தத்தளித்தனர். ஊழி முடிவு இதுதானே? என்றனர் சிலர். இல்லே! இல்லே!! இது ஏதோ ஒரு உற்பாதம் என்றனர் சிலர்! இப்படியாக உலகத்தினர் திகில்கொண்டு திரிந்தனர்.

அப்போது முப்பத்து முக்கோடி தேவர்கள், பிரமா, விஷ்ணு எல்லாருங் கூடி யோசித்து, செய்யும் வகை தெரியாமல், சிவபெருமானேக் கண்டு கேட்போமென்று கைலாயத்துக்கு வந்தனர்.

கைலாயத்தில் திரி நேத்திரங்களேயும் இழந்த சிவபெருமானனவர், சூலம் பிடித்த திருக்கரத்தில் மூங்கில் தண்டைப் பிடித்துக்கொண்டு, பார்வதிதேவியார் பக்கத்திலிருந்து பாதை காட்டிவர, தட்டுத் தடுமாறி நடந்துவந்து தேவர்களுக்குக் காட்சியளித்தார்.

சிவபெருமானின் அலங்கோலத்தைக் கண்ட தேவர்கள் திடுக்கிட்டு, மெய்மறந்து, கோவெனக்கதறி, ஏ! ஏழைப் பங்காளா! சூலபாணி! தங்களுக்கு இந்தக் கொடுமை வரக் காரணம் என்ன? தங்களுக்கே இந்தக் கதியானல், எளியேங்கள் என்ன கதியடைவோம்? என்று பலவாறு புலம்பினர்கள். அப்போது, பார்வதிதேவியார் தேவர்களே அமர்த்தி, மாயாதேவியின் சாபம் கிடைத்த வரலாற்றை விவரமாகச் சொல்ல, அதைக் கேட்ட தேவர்கள் சித்தம் கலங்கி, சிவனே வணங்கி, ஐயனே! அடியாரை ஆட்கொள்ளும் மெய்யனே! இதற்கு விமோசனமே கிடையாதா? என்று கேட்டனர்.

அப்படிக் கேட்கிற தேவர்களே நோக்கி சிவபெருமான் சொன்னர்: ஓ, தேவர்களே! கற்பரசியாகிய மாயாதேவியின் சாபத்தை நம்மால் விலக்கமுடியாது. அவளுடைய கருணை இருந்தால் விலக்கலாம், இல்லேயானல் அனுபவிக்க வேண்டியதுதான! ஆதலால், நீங்கள் உடனே மாயாதேவியிடம் சென்று, சிவனுக்கு நேத்திரப் பிச்சைத் தரவேண்டுமென்று இறைஞ்சிக் கேளுங்கள். உங்களுடைய முயற்சி கைகூடுமென்று திருவாய் மலர்ந்தருளினர்.

அதுகேட்ட தேவர்கள், மாயாதேவியாரிடம், பார்வதிதேவியை அழைத்து வந்து, பாதங்களில் சாஷ்டாங்கமாக வணங்கச்செய்து, ஏ! கற்பரசியே! அரக்கர்குல மாதர் திலகமே! உனது பெருமை தெரியாமல் சிவபெருமான் நடந்துகொண்ட பிழையை மன்னித்து, உலகம் உய்யும்பொருட்டு நேத்திரப்பிச்சை அருள வேண்டுமென்று கேட்கச் செய்தனர்.

பார்வதிதேவியாரின் பரிதாபகரமான வேண்டுகோளேக் கண்ட மாயாதேவிக்கு மனதிரங்கி, அம்மையே! அகிலாண்ட நாயகி! ஆத்திர வசத்தால் அறிவிழந்து, சிவனுக்குச் சாபம் தந்து, உலகுக்கு ஊறு செய்துவிட்டேன். இப்போது நான் அந்த சாபத்தை மாற்ற வேண்டுமெனறூலும், சிவன்மீது இரக்கங்கொண்டு செய்ய என் நெஞ்சம் இடந்தரவில்லே. உலக உபகாரங்கருதி சிறிது மாற்றமுள்ள, பிரதி சாபந்தர விரும்புகிறேன். அதாவது, "பூலோகத்தில சில இடங்களில் பளிங்கு போன்ற மணல் கிடக்கின்றன. அவற்றை வாரிக் கொணர்ந்து ரசாயன முறைப்படி உலேயிலிட்டு உருக்கி, சிறு தகடுகளாக வார்த்தெடுத்து, மெருகேற்றி, சிறு சிறு வட்டவடிவச் சில்லுகளாக அறுத்தெடுத்து, இரண்டு சில்லுகளே கம்பிகளில் இணைத்து, என்னுல் இழுக்கப்பட்டு வெளியில் பிதுங்கிக் கொண்டிருக்கும் காதுகளில் மாட்டிக் கொண்டால், அவிந்துபோன கண்களில் சிறிது ஒளியுண்டாகும். இவ்விதமே உலகமக்களும் ஒளியிழந்த கண்களுக்கு பரிகாரம் செய்வார்களாக!" என்று பிரதி சாபம் தந்தாள்.

அவ்விதமே செய்து சிவபெருமானுக்கு கம்பிகளில் இணைத்த பளிங்குச் சில்லுகளேக் மூக்குக் கண்ணுடி அல்லது 'சுலோசனம்' என்று பெயரிட்டு அணிந்து சாப விமோசனம் செய்தனர்.

# என் வாழ்வு

திருத்துறைப்பூண்டி
‘இராமகாந்தி’

“வாழ்க்கை வளமிக்க சோலையல்ல. வனாந்திரக்காடு; சமுதாயச் சருககல்களும், ஜாதிப்பிளவுகளும், உயர்வு, தாழ்வு, ஏழை, பணக்காரன் என்ற மேடு பள்ளங்களும் நிரம்பிய பள்ளத்தாக்கு. கண்ணீர்க் கணவாய்!” என்றெல்லாம் பெரிய பெரிய அறிஞர்கள் கூறுவது உண்மையென்பது, என் வாழ்வில் எனக்கு ஏற்பட்ட ஒரு பெரிய விளக்கம். என் வாழ்வைப்பற்றியே கூற முற்படுகிறேன்.

நான் எங்களூரில் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அதே பள்ளியில் என் ஒன்றுவிட்ட அத்தை மகன் ஆனந்தனும் பள்ளித்தேர்வு வகுப்புப் படித்துக்கொண்டிருந்தார். என் அக்தை மகன் ஆனநதன் அழகரல்ல. நல்ல அறிஞர், நற்குணம், நல்லொழுக்கம், ஆழ்ந்த அறிவு, அடக்கம அத்தனையும் உருவானால், அது என் அத்தானாகத் தானிருக்க முடியும். நாங்களிருவரும் ஒன்றாகவே புறப்படுவோம். ஒன்றாகவே பளளிவிடடுத திரும்புவோம். ஒன்றிரண்டு ஆண்டுகள் நாங்கள் உறவினர் என்ற முறையிலேயே பழகினோமே யன்றி வேறெதுவும் எண்ணவில்லை.

அன்றொரு நாள் நினைத்தாலே மகிழ்ச்சி, வெட்கம், வருத்தம் அத்தனையும் வருகிறது. மாலை மணி ஆறு. ஞாயிற்றுக்கிழமை தோட்டக்காரி வராததால் செடிகட்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்தேன். என்னவோ ஒரு எண்ணம். அத்தான் இப்பொழுது என்னுடன் இருந்தால் என எண்ணினேன். நெஞ்சிலே ஒரு புது உணர்ச்சி; நேரம் போனதே தெரியவில்லை. ஏன் அத்தானை நினைத்தோம், காரணம் தெரியவில்லை. “காந்தி” என்ற குரல் என் உணர்ச்சிக்கு முறுக்கேற்றி பேசமுடியாத ஏனென்று கேட்கமுடியாத அந்த உச்சநிலைக்கு கொண்டு வந்துவிட்டது.

“என்ன காந்தி பேசாமல் நிற்கிறாய்! அம்மா எங்கே?” பேச முடியவில்லை. ஏனோ அன்று வரை அததான் என்று அன்பாக அழைத்த அந்த வாய் தன் அதரங்களை அசைக்கவே மறுத்தது. வெட்கம் சூழ்ந்து கொண்டது. குனிந்துகொண்டேன்.

“கேட்கும் கேள்விக்கு வாய் திறந்து பதில் சொல்லக்கூட நேரமில்லையோ; வேலை அதிகம், பாபம்!”

‘கோபிக்காதீர்கள் அத்தான்.’ என்னமோ!.... .......ஓடியே விட்டேன் வீட்டிற்குள். அன்று முதல் அவருடன் சேர்ந்து பள்ளிக்குச் செல்வதில்லை. பத்து கஜம் பின்னேயே போவேன். வருவேன். அதன்பிறகு வளர்த்துவானேன். எத்தனையோ இரவுகள். எத்தனையோ நிலா நாட்கள். என்னென்னவோ பேச்சுக்கள் பகலில் அன்று திறக்க மறுதத அதே அதரங்கள் இன்று இரவில் மூடவே மறுத்தன. எத்தனை நாழிகை அமர்ந்திருப்போம். எவ்வெவ் வகை எங்கள் இராக்காலம ஓடி இருக்கும் என்பதை நிலவையும், எங்கள் தோட்டத்து வேம்பு மரங்களையும், கிணற்றடியையும் கேட்டாலன்றோ தெரியும்! சுருங்கச் சொல்லின் அன்பு மொக்குகள் மலர்ந்து காதல் மலர் விரிந்தது. என் படிப்புக்கும் முற்றுப்புள்ளி கிடைத்துவிட்டது. என் அத்தானின் அன்புருவம் என்னிடமிருந்து 20 மைல்கள் அப்பாலிருந்தது. உள்ளம் என்னிடந்தான்.

தகடூர் தாசில்தார் கிளார்க்காக, 50 ரூபாய் சம்பளத்தில் அமர்ந்தார்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஓ! நைமிசாரண்யவாசிகளே! எனக்கும் சிறிது காலமாக கண் ஒளி குறைந்திருப்பதால், நானும் சிவபெருமானுககுச் செய்த மூக்குக் கண்ணாடிகளில் ஒன்றைப் பெற்று அணிந்து கொண்டேன். இதை அணிந்துகொண்ட பிறகு, கண் ஒளி அதிகமாகியுள்ளது.

இதனை உலகத்தில் தெரியப் படுத்தவே நான் கைலாயத்தைவிட்டு வந்தேன் என்று சூதமாமுனிவர் சொல்ல, நைமிசாரண்ணியவாசிகள் அஞ்சலி செய்து இந்தத் திவ்ய புராணததைச் சுவடிகளில் எழுதி வைத்தார்கள். அதனைச் சப்த ரிஷிகள் உலகுக்கு வெளிப்படுத்தினார்கள். அதிலிருந்து மூககுக் கண்ணாடியானது சிவச் சின்னங்களில் ஒன்றாக வருகிறது.

[ஆக்கியோன் குறிப்பு:— இந்தப் புராணத்தைச் சந்தேகப்படுவதனாலோ, மெய்யென்று, கூறுவதனாலோ குஷ்டரோகம் உண்டாதல், தலை வெடிததுப் போதல் முதலிய எந்த விதக் கெடுதலும் ஏற்படாது.]

ஆஹா! பிரிய முடியாமற் பிரிந்த அந்த இரவில் நாங்கள் பட்டபாடு எங்கள் கண்ணீர். அத்தனையும் இன்பம்.

நாட்கள் நழுவி, வாரங்களாகி நான்கு மாதங்களும் ஆகிவிட்டன. எங்களுக்குள் கடிதப் போக்குவரத்து மட்டும் உண்டு.

அன்று பொங்கல்! தமிழரின் திருநாள்! ஆனால் எனக்கு அத்தானைப் பாராத கண்கள்; அவர் மொழி கேளா செவிகள்; இன்பம் நுகார இளமை கொழிக்கும் என் உடல், இருந்தென்ன? இல்லாமலென்ன? "பொங்கல் நாள் புனிதநாள்! கண்டிப்பாய் வந்து போக விழையும்.

தங்கள் வண்ணமலர் காந்திமதி எழுதி, மேஜைமீது வைத்த அந்தக் கடிதம் காற்றில் பறந்து என் அப்பாவின் அறைக்குள் சென்றது. உள்ளே சென்று கவரில் நீர் தடவி வந்த எனக்கு எப்படித் தெரியும்? அன்று மாலை, என்றுமே என்னிடம் கோபம் கொள்ளா என் தந்தை என்னிடம் எரிந்து விழுந்தவாறு என் அறையினுள் புகுந்தார். "காந்தி நீ பெண்தானா?" உன்னைப் படிக்க வைத்ததின் பலனை இது? உனக்காக வரன் தேடி அலைகிறேன் நான். அந்த வறட்டுப் பயலை வரவழைக்க கடிதம் எழுதவா துணிந்துவிட்டாய். உனக்கு என்ன துணிவு."

பேச முயன்றேன். முடியவில்லை. ஆனாலும் அப்பாவுக்கு விஷயம் புரிந்துவிட்டது. இனி மறைத்துப் பயனென்ன?

"அப்பா!..........."

"என்ன அப்பா! எவ்வளவு நாட்களாக இந்த வேலை!" பேசாமல் நின்றேன். "ஜாக்கிரதை" என்று போய்விட்டார்.

ஏ! அப்பா! அந்த ஒரு வார்த்தையில்தான் எத்தனை பொருள். கண்ணீர் வழிய படுத்துவிட்டேன். மறுநாள் காலை என் தாய் என்னை எழுப்பி பல புத்திமதிகளைச் சொன்னாள். அவரை மறந்துவிடக் கூறினாள். நான் சொன்னேன்.

"அத்தானை மறந்து வாழ்வேன் என்பதை அணுவளவும் எண்ணாதீர்கள். ஏழையானால் என்ன? அவரைக் காப்பாற்றிக் கொள்ள, அவருக்குச் சம்பாதிக்க திறமையில்லையா? உங்கள் நிறைந்த சொத்துக்களும் வேறு யாருக்குத்தானம்மா வைத்திருக்கிறீர்கள்?

காந்தி! நீ சிறு பெண்! அந்தஸ்துக்குத் தகுந்த இடத்தில் தான், நாம் சம்பந்தம் வைத்துக் கொள்ளவேண்டும். கோடி வீட்டுக் குமாரசாமி நாயுடு மகனுக்கும் உனக்கும் வருகிற மாதம் திருமணம். இனி நீ அவனை மறந்துவிடு" என்றாள்.

நாட்கள் பறந்தன. நாள் குறிப்பிடப்பட்டது. அப்பாவிடம் அழுதேன். அணைத்தாரில்லை. அம்மாவிடம் கெஞ்சினேன் ஆதரவில்லை! பகுத்தறிவு நூல்களைக் காட்டினேன். பலனில்லை. அழுதழுது கண்கள் சிவந்தன. ஆதாரமில்லை! அனைத்தையும் குருட்டு நம்பிக்கைகளும், செல்வாக்கும், பணமும் என் அப்பாவை தன் மகளின் நலனைக் கவனிக்க மறக்கச் செய்தன. பாழும் சமூகத்தை மனமார சபித்தேன். பெண்கள் என்றால் பேதமை கொண்டோர், பெற்றோரின் செய்கையையே பேணி நடப்போர் என்று எண்ணும் என் பெற்றோர் போன்றோருக்கு என் வாழ்வு நற்பாடம் கற்பிக்கட்டும் என எண்ணினேன். கடிதம் எழுதினேன் என் கருத்துணர்ந்தவருக்கு.

திருமணம் நாளை! வீட்டில் ஒரே அமளி! ஏக தடபுடல்! சரியாக மணி பன்னிரண்டு அடித்தது. பாழும் கடிகாரம் ஏனோ மெதுவாக நகர்ந்தது. ஒன்று, இரண்டு ஆயிற்று. கொல்லை வழியே நடந்தேன். தோட்டத்தில் என் அத்தான்! தகடூர் சேர்ந்தோம். பத்து மணிக்குப் பதிவுத் திருமணம் செய்துகொண்டோம். அன்பெனும் கடலில் ஆசை தீருமட்டும் நீந்தினோம். அளவில்லை! ஆண்டு ஒன்றும் கடந்தது. அடுத்த பொங்கல். என் கையில் கண்மணி கற்பரசி இருந்தாள். அத்தான் அப்பாவுக் கடிதம் எழுதுங்கள் என்றேன். எழுதினார். கன்னிப் பொங்கலன்று காலை வாயிலில் வண்டி வந்து நின்றது. சென்று பார்த்தேன்! காந்தி! என்று கதறிய வண்ணம் என் தாய் என்னை அணைத்துக் கொண்டாள். என் தந்தை கண்ணீர் சிந்திய வண்ணம் நின்று கொண்டிருந்தார். அப்பா! என்னை மன்னித்து விடுங்கள் என்றேன்.

காந்தி! உங்கள் அன்பு அறியாது கஷ்டத்திற்குள்ளாக்கிய என்னைத்தான் நீங்கள் இருவரும் மன்னிக்கவேண்டும் என்றார். அன்றே எங்கள் கள் ஊருக்குச் சென்று இன்புற வாழ்கிறோம். என் வாழ்வு இன்புற்ற தென்றால் பேதமை என்பது பெண்ணின் அணிகலனென்றும், கொழுநற்றொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை என்று சொல்லி பெண்ணினத்தை அடிமைப்படுத்த எண்ணும் மனித சமுதாயத்திற்கும், பிள்ளைகளின் மனமறியாத பெற்றோர்களின் கட்டுப்பாடு என்ற முட்டுக்கட்டையை தகர்த்தெறிய ஏற்பட்டதாலும் அல்லவா?

# கடைசிக் குரல்!

"ரவி"

தென்னாட்டுக் கணபதி தூக்கிலிடப்பட்டான். தென்னாட்டை, என்னாட்டார் ஆண்டால் என்னுயிர் தூக்கில் ஊசலாடுமோ? பொன்னாடே! என் இந்நிலை யடைந்தாய் நீ என்று தூக்கிலேற்றப் படும்பொழுது சிந்தித்திருப்பான் கணபதி. அச்சிந்தனையின் எதிரொலிதான் கடைசி குரல்!

பெற்றெடுத்த குழந்தைக்கு ஒருவாய்ச் சோறு
 புகட்டாமல் விரட்டுகின்ற செந்தமிழ் நாடே!
வற்றாத கடல்கடந்தேன்; வாட்ட முற்றேன்
 வகையான வாழ்வுபெறும் எண்ணங் கொண்டு!
முற்றாத உளம் வெதும்பத் தூக்குக் கயிற்றை
 முத்தமிட்டு நிற்கின்றேன் உந்தன் செயலால்!
வெற்றுரையா என்சொற்கள்? வீரத் தமிழரின்
 வெந்துமிக நொந்துவிட்ட சிந்தைச் சொற்கள்!
நஞ்சைகளும் புஞ்சைகளும் கொண்டாய்; எச்சில்
 நாயெனவே பிச்சைகேட்டும் வகையில்லை வாழ!
பஞ்சையென மக்களெலாம் நெஞ்சுலர்ந்து வாட
 பசும்பாலில் குளிக்கின்ற கடவுளொரு கேடா?
மிஞ்சுகின்ற உழைப்பாலுடல் சோர்ந்தும் குடிக்கக்
 கஞ்சியின்றி கப்பலேறிச் செல்லும் மக்கள்
நெஞ்சத் துடிப் பினையேகொஞ்சங் கேள்; தாயை
 நஞ்செனவே வெறுக்கின்றார் தாயின் செயலால்!
இருண்டகொடுங் கண்டத்தில் இலங்கைத் தீவில்
 மருட்டுகின்ற நிறவெறியில் மலேரியாவால்
மரிக்கின்றார் தமிழர்பலர் எறும்புகள் போன்றே!
 மண்ணடியில் தங்கத்தை எடுத்துக் கொடுத்தும்
சுருங்குகிறார் வறுமையினால்! உலகம் வேண்டும்
 திருவெல்லாம் நீவிளைத்தும் உந்தன் மக்கள்
திருவோடு ஏந்திபிச்சை எடுக்க நாட்டில்
 வெறு நிலையை உண்டாக்கினாய் சிலரின் சூழ்ச்சியால்!
என்னுடலம் உன்மண்ணில் புதைக்கப் பெற்றால்
 சின்னதொரு பிடியளவு உரமேயாவேன்!
என்னாட்டிற்(கு) இறந்தபின்னும் உதவி செய்த
 இன்பத்தால் இதயமிக மகிழும்! அந்தச்
சின்னதொரு உதவிகூடச் செய்ய முடியா
 சிறுமைபெற்றேன்! திராவிடத்தீர்! எந்தன் சாவு
புன்மை மிகு வடவர்க்கு அடிமைப் பட்ட
 தென்னாட்டின் நிலையுரைக்கும்! தெரிந்து கொள்வீர்!
என்னாடே! பொன்னாடே! இன்திரு நாடே!
 ஏற்றங்கொளும் வஞ்சகர்தம் இரத்தம் ஓட
மின்னொடு வாள்வீச்சு இளைஞரே! எழுக!
 மாளாத உரம்படைத்தோர் வாழும் நாடே!
தென்னாடே! என்னுயிரே! எதிர்க்கும் பகையைப்
 பன்னாடையாய்ப் பிய்த்தெடுக்கும் திராவிட மக்காள்!
உன்னாடு பொன்னாடாகப் புதுவாழ்வு பெறவே
 முன்னேறு வாளுடனே! எழுக நீயே!
தித்திக்கும் தேன்தமிழே! தெவிட்டாச் சுவையே!
 எத்திக்கும் கெக்கெலிக்க வாழ்த்து கின்றேன்!
முத்தமிழாம் மொழிச்சுவையால் தானே இன்றும்
 மாத்தமிழர் வாழ்கின்றார்! என்னுயிர் பிறக்க
வித்திட்ட தாய்நாடே! தந்தை நாடே!
 முத்துநிகர் அன்பினது முத்தம்! உன்னைக்
கொத்தியுயிர் பறிக்கின்ற வஞ்சக் கழுகுகள்
 செத்துவிடும்! எழுச்சிமிக்க மக்களைப் பாரீர்!

K. R. ராமசாமியின்

# கிருஷ்ணன் நாடக சபா.

அறிஞர் அண்ணாவின் கருத்தோவியங்களுக்கு

கலையுருவங் கொடுக்கும்

## தமிழ் நாட்டின் ஒரே கலைக்கழகம்

கலையுலகில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி

நாட்டிற்கு நற்பயனை அளிக்கும் நாடகங்கள்!

"ஓர் இரவு"
"வேலைக்காரி"
"சந்திரமோகன்"
"துளி விஷம்"

"சிலம்பு"
"தமிழன் பெருமை"
"மணமகள்"
"என் காணிக்கை"

இப்பொழுது நடைபெறுகிறது

**ஈரோடு அர்ச்சுனன் அரங்கில்**

விரைவில் அடுத்த முகாம்:

? ? ?

K. R. ராமசாமி, உரிமையாளர்.

JUPITER PICTURES CIRCUIT

# ஜுபிடரின்

# கிருஷ்ண விஜயம்



## புத்தாண்டின் பொற்புடமாய் பொலிவது ஏன்?

மகோன்னதமான கதை!

மகத்தான தயாரிப்பு!!

மகாவிசித்திரமான மாயாஜாலங்கள்!!!

எதிரொலிக்கும் இன்னிசை!!!!

எல்லாவற்றிற்கும் மேலாக

இணையற்ற கவர்ச்சிகரம்!!!!!

இவைகளே காரணங்கள்!



தமிழ் பெண்மணிகள் தவறாமல் பார்த்து அனுபவித்துப் புகழ்ந்ததோர்....

...சித்திரம்...

ஜனவரி.. 14உ வெளிவருகிறது

சென்னை கெயிட்டி & கிரௌன் மற்றும் ராஜதானி முழுவதும்

டைக்ஷன்: சங்கர்ராவ் நட்கர்னி · ஸ்டூடியோ: சென்ட்ரல்

Cover Page Printed by Allied Printers, 4, Anna Pillai Street, 3rd Lane Madras-1 (Near Corporation Workshop)